MADRAS

ஆரம்பக்கல்வி

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.
ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 29	நவம்பர் 1965	இதழ் 11

போர்முனை மட்டுமல்ல—
ஏர்முனையும் அழைக்கிறது!

"நான் அபாயச் சங்கு ஊதி, வீண் கலவர உணர்ச்சியைப் பரப்ப விரும்பவில்லை. ஆனால் அதே சமயத்தில், அடுத்த சில மாதங்களில், இந்தியாவின் உணவு நிலைமை சற்று நெருக்கடி மிகுந்ததாக இருக்கக்கூடும் என்பதை நான் எடுத்துக்காட்டாமலும் இருக்கமுடியாது." என்று, இந்தியாவின் உணவு அமைச்சர் திருவாளர் சி. சுப்ரமணியம் அவர்கள், இந்தியாவின் பல்வேறு முதலமைச்சர்கள் கலந்துகொண்ட ஒரு மாநாட்டில் அண்மையில் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது.

உணவு அமைச்சர் அவர்கள் இவ்வாறு கவலைப்படுவதற்குப் போதுமான காரணங்கள் இருக்கின்றன என்பதை நல்லறிவாளர்கள் அனைவரும் நன்கறிவர்.

சில மாதங்களுக்கு முன் பொழிந்திருக்கவேண்டிய தென் மேற்குப் பருவ மழை போதிய அளவு பெய்யவில்லை. அது போலவே, சென்ற சில வாரங்களில் பெய்திருக்கவேண்டிய வட கிழக்குப் பருவ மழையும் தக்க அளவு கருணை காட்டவில்லை. இவ்வாறு பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தால், இந்த ஆண்டின் உணவுப் பொருள் விளைச்சல், முன்னர் எதிர்பார்த்த அளவு சிறப்பாக இராது என்பது தெளிவு.

கடந்த பல ஆண்டுகளில் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்ட போதெல்லாம், அப் பற்றுக் குறையை, அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களைக் கொண்டு சமாளித்து வந்திருக்கிறது இந்தியா. குறிப்பாகவும் சிறப்பாகவும் அமெரிக்க நாடு நமக்கு ஏராளமான அளவில் உணவுப் பொருள் களை அளித்து வந்திருக்கிறது. ஆனால் வருகிற ஆண்டில், அமெரிக் காவிடமிருந்து, வழக்கமான அளவிலும் முறையிலும், நமக்கு உணவுப் பொருள் இறக்குமதி கிடைக்குமா என்பது, ஐயத்திற்கு உரிய செய்தியாக மாறிவிட்டிருக்கிறது. சென்ற ஆண்டு வரையில் அமெரிக்கா இந்தியாவுக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதற் கான ஒப்பந்தங்களை இந்திய அரசாங்கத்துடன் நீண்ட கால அடிப் படையில் செய்துவந்தது. அப்படிச் செய்துவந்த காரணத்தால், இன்னின்ன ஆண்டுகளில் ஏறத்தாழ இன்னின்ன அளவுக்கு நமக்கு அமெரிக்க உணவுப் பொருள் கிடைக்கும் என்பதை நாம் முன் கூட்டியே தெரிந்து கொள்ள முடிந்தது; உணவுப் பற்றுக் குறையில் அமெரிக்கா உதவி போக எஞ்சியுள்ள பகுதியை நிறை செய்ய வேறு பல நாடுகளோடு நாம் வாணிப உடன்பாடுகள் செய்துகொள்ளவும் வசதியாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டில், அமெரிக்கா, மூன்று மாதகாலம் அல்லது அதைப் போன்ற ஒரு குறுகிய கால அடிப்படையில்தான் உணவுப் பொருள் விற்பனைக் கான ஏற்பாடுகளைச் செய்யமுடியும் என்கிற மனப்போக்கைக் கொண்டிருக்கிறது. எனவேதான், அடுத்த ஆண்டில் நமக்கு அமெரிக்காவிடமிருந்து எந்த அளவு உணவுப் பொருள் கிடைக் கும் என்பதைத் திட்டவட்டமாக அறிந்து கொள்ள முடியாத நிலை இருக்கிறது. அமெரிக்காவைத் தவிர்த்த பிற நாடுகளோ நமக்கு மிகக் குறைந்த அளவில்தான் உணவுப் பொருள்களைத்

தந்துவருகின்றன. நமக்குத் தேவையான அளவு உணவுப் பொருள்களைத் தரக்கூடிய நிலையில் அந் நாடுகள் இல்லை என்பது வெளிப்படை.

தை மாதத்தில் செய்யப்படக்கூடிய அறுவடையின் அளவும் மகிழ்ச்சி மிகுந்ததாக இராது; கிடைக்கக்கூடிய இறக்குமதியின் அளவும் ஐயத்திற்கு உரியது என்பதுதான் தற்போது ஏற்பட்டுள்ள நிலை. இத்தகைய ஒரு நிலையை நேருக்கு நேராகச் சந்திக்கிற வாய்ப்பைப் பெற்றுள்ள உணவு அமைச்சர், கவலையும் துயரமும் அடைவதில் வியப்பில்லை அல்லவா ?

உண்மையை ஒளிக்காமல் மறைக்காமல் உள்ளது உள்ளபடி எடுத்துக் கூறவேண்டுமானால், இந்திய நாடு விடுதலை பெற்ற நாளிலிருந்தே உணவு நெருக்கடியும் இருந்து வந்திருக்கிறது. அந்த நெருக்கடியின் அளவு, சில ஆண்டுகளில் கூடுதலாக இருந்திருக்கிறது; வேறு சில ஆண்டுகளில் குறைவாக இருந்திருக்கிறது. ஆனால் அந்த நெருக்கடி துளியளவுகூட இல்லாத ஆண்டு என்று எந்த ஓர் ஆண்டையும் சுட்டிக்காட்டமுடியாது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறையில் இருந்த காலத்தில் தான்—அதாவது 1951 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1956 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரையுள்ள காலத்தில் தான், உணவு நெருக்கடி, குறைந்த அளவினதாக இருந்திருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டில் 47 லட்சம் டன் என்னும் அளவில் இருந்த உணவுப் பொருள் இறக்குமதி, அந்தத் திட்டத்தின் இறுதி ஆண்டில் வெறும் 7 லட்சம் டன்னாகக் குறைந்து விட்டது என்னும் புள்ளி விவரத்திலிருந்து இந்த உண்மையை நாம் நன்றாக உணர்ந்து கொள்ளலாம்.

ஆனால் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முந்திய ஆண்டுகளிலும் சரி, அதற்குப் பிந்திய ஆண்டுகளிலும் சரி, உணவு நெருக்கடி, உள்ளத்தை மிரட்டும் அளவிலேயே இருந்திருக்கிறது. இந்த வேதனை நிறைந்த விபரீத உண்மையை, அந்த ஆண்டுகளில் நாம் இறக்குமதி செய்த உணவுப் பொருள்களின் அளவு எத்துணை மிகுதியாக இருந்தது என்பதை எடுத்துக் காட்டும் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம் :

இந்தியாவின் உணவுப்பொருள் இறக்குமதி

ஆண்டு	இறக்குமதியின் அளவு		
1948	28	லட்சம்	டன்
1949	40	,,	,,
1950	37	,,	,,
1951	53	,,	,,
1957	36	,,	,,
1958	32	,,	,,
1959	38	,,	,,
1960	51	,,	,,

1948 ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டுவரையுள்ள காலத்தில் நாம் இறக்குமதி செய்துள்ள உணவுப் பொருள்களின் மதிப்பு 965 கோடி ரூபா ஆகும். 1961-62 நிதியாண்டில் மட்டும் —அதாவது 1961 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 1962 மார்ச் 31 ஆம் தேதிவரை உள்ள ஒரே ஒரு ஆண்டில் மட்டும் நாம் இறக்குமதி செய்துள்ள உணவுப் பொருளின் மதிப்பு, 126 கோடி ரூபா ஆகும்.

ஆண்டுதோறும் நாம் உணவுப் பொருள் இறக்குமதிக்காக எத்துணைப் பெருந்தொகையைச் செலவழித்து வருகிறோம் என்பதையும், எத்துணை ஏராளமான அளவில் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து வருகிறோம் என்பதையும் விளக்கிக் காட்ட இந்தப் புள்ளி விவரங்கள் போதுமானவை.

இந்திய மக்கள் அனைவருக்கும் தேவையான அளவு உணவுப் பொருளை இந்தியாவால் உற்பத்தி செய்ய முடியவில்லை என்பதும், நம் மக்கள் அனைவரும் வயிறார உண்ணவேண்டுமானால், நாம் பிற நாடுகளின் கைகளைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது என்பதும்தான், இந்தப் புள்ளி விவரங்களில் பொதிந்துகிடக்கும் மாபெரும் உண்மைகள்.

இந்த உண்மைகள் இரண்டும், இந்தியத் திருநாட்டின் இதயத்தைக் கசக்கிப் பிழியும் தன்மை படைத்தவை; இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனையும் தலை குனிய வைக்கும் அவமான இயல்பு வாய்ந்தவை.

இந்த இரண்டு உண்மைகளை, மறுப்பதோ, இயலாத செயல்; மறப்பதோ, ஆகாத காரியம்; மறைப்பதோ, ஆபத்தை விளைவிக்கக்கூடிய முயற்சி.

நேற்றிலிருந்தோ அதற்கு முந்திய நாளிலிருந்தோ அல்ல, வரலாற்றுக் காலத்திற்கும் முந்திய காலத்திலிருந்து, இந்தியா, உழவுத் தொழிலையே தன் தலைசிறந்த தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்திருக்கிறது. இப்போதுகூட, இந்திய மக்களில் நூற்றுக்கு எண்பது பேருக்குமேல் உழவுத் தொழிலில்தான் ஈடுபட்டுள்ளனர். எத்தனையோ வகையான ஆலைத் தொழில்கள் இந்தியாவில் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான பாங்குகள் **(Banks)** இருக்கின்றன; இன்சூரன்ஸ் நிறுவனங்கள் இருக்கின்றன; போக்குவரத்து அமைப்புகள் அரசாங்க அலுவலகங்கள், தனியார் துறை அலுவலகங்கள் என்று எத்தனையோ வகையான வேலை வாய்ப்புத் துறைகள் இருக்கின்றன. ஆனால் இவை அத்தனையிலும் ஈடுபட்டிருக்கும் மக்களின் தொகை, மொத்த மக்கள் தொகையில், நூற்றுக்கு இருபது பங்குதான் ஆகிறது. ஆனால் உழவுத் தொழில் ஒன்றில் மட்டும் ஈடுபட்டிருக்கும் மக்கள் தொகை, நூற்றுக்கு எண்பது பங்கு ஆகும்.

இத்துணைப் பெருந் தொகையினர் உழவுத் துறையில் ஈடுபட்டிருந்தும், அப்படி அவர்கள் ஈடுபடுவது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நடைபெறும் செயலாக இருந்தும், இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான அளவு உணவுப் பொருள்களைக்கூட நம்மால் விளைவித்துக் கொள்ளமுடியவில்லை என்றால், இதைவிட வேதனையையும் வெட்கத்தையும் நமக்கு அளிக்கக்கூடிய நிலை வேறென்ன இருக்கமுடியும்?

நூற்றுக்குப் பத்துப் பேர்கூட உழவுத் துறையில் ஈடுபடாத நிலையில் உள்ள ஒரு நாடு, அமெரிக்கா. அத்தகைய ஒரு நாடு, தன் மக்கள் அனைவருக்கும் தேவையான உணவுப் பொருள்களைத் தானே விளைவித்துக் கொள்கிறது. அதுமட்டுமல்ல, தன் தேவைக்கு மேற்பட்ட அளவிலும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து, அப்படி உபரியாக உள்ள உணவை இந்தியா முதலிய பல நாடுகளுக்குத் தந்து உதவுகிறது. இது, அந்த நாட்டு நிலை; பெருமைக்கும் பூரிப்புக்கும் உரிய நிலை.

நம்முடைய இந்தியத் திருநாட்டிலோ, நூற்றுக்குப் பத்துப் பேரோ இருபது பேரோ அல்ல, எண்பது பேர், உழவுத் துறையில் ஈடுபாடு கொண்டுள்ளனர். அப்படியிருந்தும், பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நம்மால் உணவுப் பொருள்களை விளைவிக்க முடியவில்லை. அதுமட்டுமல்ல, நமக்குத் தேவையான உணவுப் பொருள்களைக்கூட முழு அளவில் நம்மால் விளைவிக்க இயலவில்லை. இது, நம் நாட்டு நிலை; துயரத்திற்கும் அவமானத்திற்கும் உரிய நிலை.

உழவுத் தொழிலேயே தலையாய தொழிலாகக் கொண்டுள்ள இந்தியா, ஆலைத் தொழில்களாகக் கொண்டுள்ள அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதாக, நிலைமை இருந்திருக்கவேண்டும். அப்படி இருப்பதுதான், பொருத்த மானது; நியாயமானது; முறையானது. ஆனால் தற்போது உள்ள நிலையோ, தலைகீழாக—முறை கேடாக—பொருத்தமற்றதாக இருக் கிறது.

பிற நாடுகளுக்கு நாம் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியாவிட்டாலும் பாதகமில்லை. நமக்கு வேண்டிய உணவுக்குக்கூட நாம் பிற நாடுகளை நம்பியிருப்பது என்கிற பரிதாப மான நிலைமையை, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரை வில் நாம் மாற்றித் தீரவேண்டும். வேறு சொற்களில் கூறுவதானல், உணவுப் பொருள்களைப்பொறுத்த வரை நாம் கூடிய விரைவில் தன்னிறைவு பெற்றாகவேண்டும்.

தன்னிறைவு பெறுவதற்கு இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. அளவு கடந்த வேகத்தில் பெருகிவரும் இந்திய மக்கள் தொகையின் வளர்ச்சி விகிதத்தைக் குறைப்பது ஒரு வழி. குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டம் எந்த அளவுக்குப் பொதுமக்களால் கையாளப் படுகிறதோ அந்த அளவுக்கு இந்தத் திட்டம் வெற்றிபெறும். ஆனல், இந்திய மக்களின் சமயக் கண்ணேட்டம், பாரம்பரைப் பண்பாடு, சமுதாயப் பழக்க வழக்கங்கள், மனப்போக்கு ஆகிய வற்றை உள்ளத்தில் நிறுத்திவைத்து இந்தப் பிரச்சினையை அலசிப் பார்த்தால், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு இந்திய மக்க ளிடம் கிடைக்கக்கூடிய ஆதரவு மிகக் குறைவாகத்தான் இருக்கும் என்பது தெளிவாக விளங்கும். ஆகவே உணவுப் பொருள்களில் தன்னிறைவு என்னும் குறிக்கோளை அடைவதற்கு இந்த வழி பயன் படாது என்பது வெள்ளிடைமலை.

தன்னிறைவு பெறுவதற்கான மற்றொரு வழி, உணவுப்பொருள் உற்பத்தியைப் பெருக்குவதில் மும்முரமாகவும் முழு மூச்சுடனும் ஈடுபடுவது ஆகும். அவசர உணர்வுடனும் அவசிய உணர்வுடனும் இந்தத் துறையில் ஈடுபடவேண்டியது, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு அரசாங்கத்தின் கடமையும் ஆகும். அதுமட்டுமல்ல, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனின் கடமையும் ஆகும்.

உழவுத் தொழில் வளர்ச்சி, நீர்ப்பாசன வசதிப் பெருக்கம் ஆகிய இரண்டிற்குமாகச் சேர்ந்து மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் வாயிலாக இந்திய அரசாங்கங்களால் மாபெருந் தொகை செலவழிக் கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பணிகளுக்காக முதல்

ஐந்தாண்டுத் திட்டத்தின்போது செலவழிக்கப்பட்ட தொகை, 60 கோடி ரூபா; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது செலவழிக்கப்பட்ட தொகை, 900 கோடி ரூபா. இந்த இரண்டு பணிகளுக்கும் சமுதாய அபிவிருத்தித் திட்டத்திற்குமாகச் சேர்த்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வாயிலாகச் செலவிடப்பட்டு வரும் தொகை, 1718 கோடி ரூபா. ஆம்! சென்ற பதினைந்து ஆண்டுகளில், விவசாய வளர்ச்சிக்காகச் செலவிடப்பட்டுள்ள தொகையின் மொத்த அளவு 3218 கோடி ரூபா ஆகும். பிரம்மாண்டமான தொகை இது! மறுப்பாரில்லை! ஆனால் இத்துணைப் பெருஞ் செலவின் விளைவாக ஏற்பட்டுள்ள பலன் மாபெரும் அளவினதாக இருக்கிறதா என்றால், இல்லை. இல்லை என்பதற்கு, இன்னமும் உள்ளத்தை மிரட்டக்கூடிய அளவுக்கு உணவு நெருக்கடி இருந்துவருவதே தக்க சான்று ஆகும்.

மாபெருந்தொகைகளைச் செலவு செய்வதால் மட்டும் போதுமான பயன் விளைந்துவிடாது--அந்தத் தொகைகளை, முறை அறிந்து, இடம் அறிந்து, காலம் அறிந்து செலவிடவேண்டும் என்பது, இதிலிருந்து நம்நாடு கற்றுகவேண்டிய முதற்பெரும் பாடம்.

உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்றை, அகன்ற உழவு (**Extensive cultivation**) என்றும், மற்றொன்றை ஆழ்ந்த உழவு (**Intensive cultivation**) என்றும் அழைக்கலாம். இரண்டு துறைகளிலுமே நம் அரசாங்கங்களும் மக்களும் முழுக் கவனம் செலுத்தியாகவேண்டும்.

வேளாண்மை செய்யப்படக்கூடிய—ஆனால் இதுவரை செய்யப்படாமலிருக்கிற தரிசு நிலங்களையெல்லாம் உழுது பயிரிட்டு வேளாண்மை செய்வதையே அகன்ற உழவு என்று பொருளியல் அறிஞர்கள் அழைக்கின்றனர். எங்கெங்கே அத்தகைய நிலங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் உடனடியாக அளவெடுத்து, சிறுசிறு பகுதிகளாகப்பிரித்து, நிலமில்லாத விவசாயத்தொழிலாளர்கள், நிலமில்லாத வாரக்காரர்கள், குறைந்த நிலமுடைய விவசாயிகள் ஆகியோருக்கு அந்நிலங்களைப் பட்டா செய்துகொடுத்து, உடனே அவற்றில் வேளாண்மை செய்யும்படி ஏற்பாடுகள் செய்யலாம். தனியார் துறையினர் அப்படிச் செய்ய முன்வராத இடங்களில், கூட்டுப் பண்ணைகள் அல்லது கூட்டுறவுப் பண்ணைகள் அமைப்பதன் மூலமாகவோ, அரசாங்கப் பண்ணைகள் அமைப்பதன் வாயிலாகவோ, அந்நிலங்களை உழுது பயிரிட அரசாங்கங்கள் ஏற்பாடு செய்யலாம். இப்பணியினைத் தனியார் துறையினர் மேற்கொள்ள வேண்டுமா அல்லது அரசாங்கத் துறையினர் மேற்கொள்ள

வேண்டுமா என்பது முக்கியமல்ல. எந்தத் துறையினர் மேற்கொண்டாலும் சரி, உணவு உற்பத்தி உடனடியாகப் பெருக்கியாக வேண்டும்.

அரசாங்க அலுவலகங்கள், அமைச்சர்களின் மாளிகைகள், கவர்னர்களின் பங்களாக்கள், தனியார் துறை அலுவலகங்கள், கல்லூரிக் கட்டிடங்கள், மருத்துவ மனைக் கட்டிடங்கள் முதலியவற்றைச் சுற்றிலும் ஏராளமான காலி இடங்கள் அல்லது புல் தரைகள் இருக்கக்கூடும். அவற்றையெல்லாம் கூட உழுது, புன்செய் தானியங்களையோ, காய்கறிகளையோ பயிரிட்டாக்வேண்டும். தனி மனிதர்கள் அதாவது இந்திய நாட்டைச் சேர்ந்த ஒவ்வொரு குடிமகனும், தன் இல்லத்தில் சிறிதளவு நிலம் இருந்தாலும் அந் நிலத்தில் கீரைகள், காய்கறிகள் முதலியவற்றைப் பயிரிட வேண்டும். நம் இல்லத்தைச் சுற்றிலும் அல்லது இல்லத்திற்குப் பின்னால் இருப்பது மிகச் சிறு நிலம் தானே—இவ்வளவு சிறு நிலத்தில் பிரமாதமான அளவில் எதைப் பயிரிட்டு விடமுடியும் என்று எவரும் கருதக்கூடாது. தம் வீட்டிற்கு வாரத்திற்கு ஒரு நாளைக்கு வேண்டிய காய்கறிகளை ஒருவர் தாமே பயிரிட்டுக்கொள்ளமுடிந்தால், அதுகூட, நாட்டின் உணவு நெருக்கடி தீருவதற்கு அவர் செய்த அரும்பணியாகவே அமையும்.

இரயில்வே பாதையின் இரு மருங்கிலும் உள்ள இடங்கள், பெருவீதிகளின் நடைபாதைகள், பூந்தோட்டங்கள், இன்னபிற இடங்களில்கூட, இங்கிலாந்தில், இரண்டு உலகப் போர்களின் போதும், தானியங்களும், காய்கறிகளும் பயிரிடப்பட்டன. "மல்லிகை முல்லை பிறகு! மரவள்ளிக்கிழங்கு முதலில்" என்னும் மனப்பான்மை உடையவர்களாய்—அதாவது உணவுப் பொருள் உற்பத்தி முதலில்; அழகுப் பொருள் உற்பத்தி பிறகு என்னும் நெஞ்சத்தெளிவு படைத்தவர்களாய், அந்நாட்டு மக்கள் பூந்தோட்டங்களைக்கூடக் காய்கறிப் பண்ணைகளாக மாற்றி அமைத்துவிட்டார்கள். இந்த வகையான போர்க் கால உணர்ச்சி, நம் நாட்டில் உள்ள அரசாங்கங்கள், அரசியல் கட்சிகள், பொதுநல மன்றங்கள், தனிப்பட்டமனிதர்கள் ஆகிய அனைவரிடமும் இப்போது ஏற்பட்டாக வேண்டும். இந்த நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இருக்கக்கூடிய துண்டு நிலங்கள் அத்தனையும் உணவு உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஒரு கையளவு மண்ணைக்கூட நாம் வீணாக விட்டுவிடக்கூடாது.

ஏற்கெனவே பயிரிடப்பட்டு வருகிற நிலங்களில், தற்போது கிடைப்பதைவிட இன்னும் மிகுதியான அளவில் விளைச்சல் ஏற்படுவதற்குத் தேவையான முறையில் உழவுத் தொழில் செய்வதைத்தான் பொருளியல் நூல், ஆழ்ந்த உழவு என்று அழைக்கிறது. இந்தத் துறையிலும் அரசாங்கங்கள், உழவர்கள் ஆகிய இரு சாராரும் தங்கள் கவனத்தை முழு அளவில் செலுத்த வேண்டும். நம்முடைய நாட்டில் ஏக்கர் ஒன்றிற்குச் சராசரியாகக் கிடைக்கிற நெல் விளைச்சலைவிட ஜப்பான் நாட்டில் நான்கு மடங்கு மிகுதியாகக் கிடைக்கிறது என்று புள்ளி விவரங்கள் பேசுகின்றன. இத்தனைக்கும் நம் பூமி வளம் கொழிக்கும் பூமி. ஜப்பானிய மண்ணோ, எரிமலைகள் நிறைந்த வளம் அகன்ற பூமி, இப்படியிருந்தும் ஜப்பானிய உழவர்கள் நம்மைவிட நான்கு மடங்கு மிகுதியாக நெற்கதிர்களை அறுவடை செய்கிறார்கள் என்றால், நம்முடைய உழவுமுறையில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்று தானே பொருள்? அந்தக் குறைபாடு இன்னது என்பதைக் கண்டறிந்து உடனே அதைக் களைவதற்கு நாம் முயலவேண்டும்.

பொறுக்கு விதைகள், இரசாயன உரங்கள், உழு கருவிகள் முதலியவற்றைப் போதிய அளவிலும், உரிய நேரத்திலும், குறைந்த விலையிலும், தவணை முறையிலும் உழவர்களுக்குக் கிடைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து தரவேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்க முனைகிற உழவர்களுக்குப் பணத் தட்டுப்பாடு இருக்குமானால், தேவையான கடன் தொகையைக் குறைந்த வட்டிக்கு, நீண்ட காலத் தவணை முறையில் திருப்பித் தரக்கூடிய வசதியுடன், அரசாங்கம் அவர்களுக்குத் தரவேண்டும். கிணறுகள் தோண்டவும் இதுபோலவே தக்க அளவு கடன் தரப்படவேண்டும். இப்படியெல்லாம் தரப்படுகிற கடன் தொகை, உண்மையிலேயே அதன் முழு அளவில் உழவர்களின் கைகளுக்குப் போய்ச் சேரவேண்டும் என்பது மிகமிக முக்கியம். ஏனென்றால், ஓர் உழவருக்கு அரசாங்கத்தால் அனுமதிக்கப்படுகிற கடன் தொகை 500 ரூபாவாக இருந்தால், அதில் 200 அல்லது 300 ரூபா தான் அந்த உழவரை இறுதியில் அடைகிறது என்றும், மிச்சமுள்ள தொகை முழுவதும் இடையில் உள்ள பல்வேறு அதிகாரிகளின் பணப் பைகளில் பல்வேறு முறைகள் மூலம் தஞ்சம்

அடைந்து விடுகிறது என்றும், பரவலான முறையில் புகார் கூறப் படுகிறது. இத்தகைய புகாருக்குச் சிறிதும் இடம் இல்லாத முறையில் கடன் வழங்கும் திட்டம் வகுக்கப்படவேண்டும். இல்லா விட்டால், அரசாங்கக் கணக்கில் பணம்தான் செலவாகுமே தவிர, விவசாயக் கணக்கில் விளைச்சல் பெருகாது.

மஞ்சள் ஏகாதிபத்தியம் என்று அழைக்கப்படும் வஞ்சகச் சீனு, படுபாதகச் செயல்கள் புரிவதில் பெரும்புகழ் பெற்றுவிட்ட பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலிருந்தும், தனித்தனியாகவோ, கூட்டாகவோ, எந்த நேரத்திலும் நம் நாட்டின்மீது படையெடுப்பு நிகழக்கூடும் என்பதே தற்போதுள்ள நிலே. அப்படி நேரிடக் கூடிய படையெடுப்பைத் தூள் தூளாக நொறுக்கித் தள்ளு வதற்குத் தேவையான படைபலத்துடனும் மன உரத்துடனும் நாம் இருந்தாகவேண்டும். தேவையான உள்ள உறுதி ஏராளமாக இருக்கிறது நமக்கு. படைபலத்தையும் விரைவாகப் பெருக்கி வருகிறோம். நம்முடைய போர் வீரர்கள், எத்தகைய எதிரிகளே யும் விரட்டியடிக்கக்கூடிய அஞ்சாத நெஞ்சு படைத்த அடலேறுகள் என்பதை, அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை அவர்கள் சமாளித்த முறை, எழில்மிகு முறையில், எடுத்து விளக்கிக் காட்டிவிட்டது. உலகம் முழுவதுமே ஒரு மனதாக ஒப்புக்கொள்ளும் உண்மை இது. ஆம்! போர் முனையில் நம்முடைய நிலைமை, பூரிப்பையும் பெருமையையும் அளிப்பதாக இருக்கிறது. இது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை நாம் கூறத் தேவையில்லை.

ஏர்முனையிலும் நம்முடைய நிலைமை, இதே வகையனா மகிழ்ச்சியையும், பெருமையையும் அளிக்கவல்லதாக மாற வேண்டாமா? மாற்றியமைக்க வேண்டாமா நாம்? இந்தக் கேள்வி யைத்தான் நம் நாட்டில் உள்ள ஒவ்வோர் அமைச்சரும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், ஒவ்வொரு பஞ்சாயத்து மன்ற உறுப் பினரும், ஒவ்வொரு குடிமகனும் தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும்.

போர்முனையில் மாபெரும் வெற்றிகளைக் குவித்துக்காட்டி யுள்ளார்கள் நம் படைவீரர்கள். அதே வகையான வெற்றிகளை ஏர்முனையில் நாம் குவித்துக் காட்டவேண்டாமா?

கல்வித் துறைச் செய்திகள்

கல்விச் சாலைகள் கடமை

தாம்பரத்தில் கவர்னர் உரை

படிப்புடன் பண்பும், ஒழுக்கமும் முக்கியம்

சென்னை, அக். 16—சர்வகலா சாலைகளிலும், கல்லூரிகளிலும் படித்துத் தேறும் மாணவர்கள் அறிவைப் பெற்று, அறிவை வளர்த்துக் கொள்வதற்கு மட்டுமின்றி, சமூக பண்புகளையும், ஒழுக்க நெறிகளையும் வளர்த்துக் கொள்வதற்கும் இக் கல்வி ஸ்தாபனங்கள் உதவவேண்டும் என்று, சென்னை கவர்னர் திரு. ஜெய சாமராஜ உடையார் இன்று கூறினார்.

அவர்கள் அவரவர்களுடைய தொழில் துறையில் பணியாற்றுவதற்கு மட்டுமின்றி, சமாதானம், சத்தியம், மனித நட்புறவு போதிக்கும் தூதர்களாகவும் விளங்கும் பக்குவத்தை உண்டாக்க வேண்டுமென்று கவர்னர் கேட்டுக்கொண்டார்.

தாம்பரம் கிறித்தவக் கல்லூரியின் 74வது கல்லூரி தின விழாவுக்குத் தலைமை தாங்கி கவர்னர் அறிவுரை வழங்கினார்.

நாகரிகம் நிலைப்பதற்கும், மனிதன் உயிர் வாழ்வதற்கும் மக்களிடையில் ஒற்றுமையும், சமாதானமும் அவசியமென்று கூறிவிட்டு கவர்னர் மேலும் பேசியதாவது :—

இன்றைய உலகில் நல்ல பிரஜையாக வாழ்வதற்கான பொறுப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இப்பொறுப்புகள் பல தரப்பட்டதாக வேறு உள்ளன. சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும், சரியாக வரிகளைக் கட்டுவதும் மட்டும் தேச பக்தியுள்ள பிரஜையின் கடமைகளைப் பூர்த்தி செய்வதில்லை. இது மிகவும் கஷ்டமான காலம், சோதனை மிக்கது. மனித வர்க்கம் முன்னைவிட அதிக ஒற்றுமையாக உள்ளது. ஆனால் அதே சமயம் முன்னைவிட அதிகம் வேறுபட்டும் உள்ளது.

போக்குவரத்து சாதனங்கள், தொடர்பு கருவிகள், எல்லா மதத்தினரையும், இனத்தவரையும், தேசத்தலைவரையும், அருகில் கொணர்ந்துள்ளன. ஆனால் அரு

யியல் சித்தாந்தங்கள் பொருளாதார நலவுரிமைகள், இனம் புரியாத பகைகள், போராசைகள் மனித குடும்பத்தைப் பிரித்து, தீங்கு விளைவித்துள்ளது. இந்நிலையில் உலக சமாதானம், சர்வ ஜன சகோதரத்துவம் நிலவும் புது நியதியை ஸ்தாபிக்க கல்வி பயின்ற இளைஞர்களும் முக்கிய பங்கு பெற வேண்டும்.

மாணவர்களுக்கு ஓர் ஆண்டு கட்டாய தேச சேவைத் திட்டம்

மத்திய அரசினர் பரிசீலனை

புது டில்லி. அக். 26— பள்ளிப் படிப்புக்குப் பின்னர் உயர் கல்வி நிலையங்களில் சேருவதற்கு முன்னதாக எல்லா மாணவர்களையும் ஒரு வருஷ கட்டாய தேசிய சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஒரு திட்டம் மத்திய சர்க்காரின் பரிசீலனையில் உள்ளது.

சண்டிகரில் 28, 29 தேதிகளில் மத்திய கல்வி ஆலோசனை போர்டு கூட்டம் நடக்கிறது. இக் கூட்டத்தில் இந்தத் திட்டம் விவாதிக்கப்படும்.

அவசர நிலைமை ஏற்பட்டுள்ளதைக் கருதி நாட்டின் ஒருமைப்பாட்டைகாக்க இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டியதும், அவர்களுக்கு உடல் வலிவு ஊட்ட வேண்டியதும், தேச நிர்மாண பணியை மேற்கொள்ளும் ஒரு அணியை அமைக்க வேண்டி பயிற்சி அவசியம் என்று தீவிரமாக கருதப்படுகிறது.

மாணவர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு தேசப் பணிகளில் ஈடுபடுத்துவது, தற்போதைய செகண்டரி கல்வி திட்டத்தில் உள்ள ஒரு குறை நீங்கவும் மேலும் உயர் கல்விக்கு தங்களை நன்கு தயார் செய்து கொள்ளவும் உதவும் என்று கல்வி அமைச்சகம் கருதுகிறது.

தேசப் பணி திட்டத்தில் அடங்கும் அம்சங்கள் பரிசீலனையில் இருக்கிறது. சண்டிகார் கூட்டத்தில் நடக்கும் வாதத்தை யடுத்து இது வகுக்கப்படும். ராஜ்யங்களுக்கு குறிப்பாக எல்லா ராஜ்யங்களுக்கு இளைஞர் பயிற்சி திட்டத்தை அமலாக்க மத்திய சர்க்கார் மான்ய உதவி அளிக்க வேண்டும் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்ஜினீயரிங் கல்வி பற்றித் தொழில் நுட்பக் கல்விக் குழுவின் சிபாரிசுகள்

தொழிற்சாலைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பாலிடெக்னிக்குகள்

புனா, அக் 27—இன்ஜினீயரிங் கல்வி பொது ஜாப்தாவில் இடம் பெற்று தேசிய அடிப்படையில் சட்டம் இயற்ற வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்று தொழில் நுட்பக் கல்விக் கமிஷன் செயற்குழு சிபாரிசு செய்துள்ளது. இந்த ஏற்பாடு மூலம்

தொழில் நுட்பக் கல்வி சம்பந்தப்பட்ட பிரேரணைகளைத் துரிதமாக அங்கீகரிக்க முடியுமாம்.

தொழில் நுட்பக் கல்வியின் செயற்குழு தனது குறிப்பில் இவ்வாறு சிபாரிசு செய்துள்ளது.

குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:- தொழில் நுட்பக் கல்வி சம்பந்தமான சில திட்டங்கள் மூலம் முன்பு சில இடங்களில், சில சமயங்களில் தேவைக்கு அதிகமாகப் பயிற்சி பெற்ற இன்ஜினீயர்கள் இருந்தனர். பயிற்சி பெற்ற தொழிலாளருக்குப் பற்றாக் குறை ஏற்பட்டது. இந்தக் கோளாறு அகற்றப்பட வேண்டும்.

சுமாராகப் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள், பூர்ணமாகப் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள், சூப்பர்வைசர்கள், இன்ஜினீயர்கள், இன்ஜினீயரிங் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் ஒருவருக்கொருவர் ஆதாரவாக ஒரு கோபுரத்தைப் போல அமைய வேண்டும். இந்த முறையில் தொழில் நுட்பக் கல்வி சம்பந்தமான பயிற்சித் திட்டங்கள் அமல் நடத்தப்பட வேண்டும்.

அயல்நாடுகளில் பயிற்சி

மிகவும் இளமைப் பருவத்தில் அயல்நாடுகளில் பயிற்சி அளிக்கும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும். பாலிடெக்னிக்கில் இப்போது இருப்பதை விட விசேஷப் பயிற்சி அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் மிகவும் இளம் பருவத்தில் விசேஷப் பயிற்சி விரும்பத்தக்கதல்ல. மிகவும் இளமையில் விசேஷப் பயிற்சி சிரமமாகி விடும்.

பாலிடெக்னிக் துறையில் சிவில் இன்ஜினீயரிங், எலெக்ட்ரிகல் இன்ஜினியரிங், மெக்கானிகல் இன்ஜினியரிங் முதலியவற்றில் மாணவர்கள் பட்டம் பெறுவதைப் பார்க்கிலும் கடைசி வருடப் படிப்பில் ரஸ்தா அமைப்பு, பாலம் கட்டுதல், பஞ்சாலை இயந்திரங்களை அமைப்பது முதலியவற்றில் விசேஷப் பயிற்சி பெறலாம். முதல் இரண்டு வருடப் படிப்பு பொதுப் படையாக இருக்கலாம்.

தொழிற்சாலைகளுடன் இணைப்பு

குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது :- பாலிடெக்னிக்குகள் தமது பிரதேசங்களில் உள்ள தொழிற்சாலைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அவை தமது ஆசிரியர்களுக்கு உதவியாகத் தொழிற்சாலைகளில் உள்ளவர்களையும் போதனைக்குப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே தொழிற்சாலைகள் உள்ள இடங்களிலேயே முக்கியமாகப் பாலிடெக்னிக்குகள் அமைய வேண்டும். அப்படியானால் தான் அவை பாடத்திட்டத்தில் காலப் போக்கிற்குத் தகுந்தவாறு மாறுதல்களைச் செய்து கொண்டிருக்கலாம். இந்த ஏற்பாட்டின் மூலம் ஒவ்வொரு பாலிடெக்னிக்கும்

சொந்த முயற்சியில் முன்னேற முடியும்.

12 வருடப் படிப்பு முடிந்ததும் மாணவர்கள் இன்ஜினீயரிங் கல்லூரிகளிலாவது டெக்னாலஜி இன்ஸ்டிட்டியூட்டுகளிலாவது சேரலாம். இன்ஜினீயரிங் கல்லூரிகளில் 4 வருடப் பட்டப் படிப்புக்குப் பிறகு 2 வருட ஆராய்ச்சிப் படிப்பும் 1 வருட சர்டிபிகேட் படிப்பும் படிக்கலாம்.

பிராந்திய மொழி

பாலிடெக்னிக்குகளிலும் தொழிற் பயிற்சி பள்ளிகளிலும் பிராந்திய மொழிகளே போதனை மொழிகளாக அமைய வேண்டும். பாடப் புத்தகங்கள் தரத்தையும், தொழில் நுட்பக் கல்வியில் ஒற்றுமை குணத்தையும் பாதுகாப்பதற்குப் பாடப் புத்தகங்கள் தேசிய அடிப்படையில் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.

7 ஆண்டு ஆரம்பப் பள்ளிப் படிப்பு: கல்விக் குழு பரிந்துரை

மேல் படிப்புக்கு நல்ல அடிப்படையாக அது அமையும் எனக் கருத்து

புனா, அக். 27—முதல் 7 ஆண்டு பள்ளிப் படிப்பை குழந்தைகளுக்குக் கட்டாய ஆரம்ப கல்விப் போதனையாக ஆக்க வேண்டும் என்று கல்விக் கமிஷன் கருதுவதாகத் தெரிகிறது.

இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ள கல்விக் கமிஷன் தற்போதைய கல்வி முறையில் உள்ள கட்டடங்கள் அனைத்தையும் மாற்ற விரும்புகிறது. 7 ஆண்டுகள் கட்டாய ஆரம்பப் பள்ளி படிப்புக்கும், மூன்று ஆண்டுகள் உயர்தர கல்விப் படிப்புக்கும், இரண்டு ஆண்டு பி. யு. ஸி. படிப்புக்கும் கமிஷன் வகை செய்கிறது. தற்போதுள்ள 4 ஆண்டு கட்டாய பிரைமரி பள்ளியும், 6 விருந்து 7 ஆண்டு செகண்டரி பள்ளி படிப்பும் மாறி அதற்குப் பதில் மேற்கண்டவாறு அமைய வேண்டும் என்பது கமிஷனின் திட்டம்.

புதிய முறை பல்வேறு துறைகளில் மாணவர்கள் அறிவைப் பெற வாய்ப்புகளை அளிக்கும். குழந்தைகளுக்குக் கல்வி அஸ்திவாரம் சீராக அமைய தற்போதைய 4 ஆண்டு பிரைமரி படிப்பு போதாது என்று கருதப்படுகிறது. 7 ஆண்டு கட்டாய ஆரம்பப் பள்ளி படிப்பு மேல் படிப்புக்கும் பல்வேறு தொழில் துறைகளிலும் அறிவைப் பெறவும் சிறந்த அஸ்திவாரமாக அமையும் என்று கருதப்படுகிறது.

பல்சுவை விருந்து

உன் தாய் என்ன துரைசானியா?

வினோபா நன்றாக ஆங்கிலம் பயின்றவர். என்றாலும் தாய் மொழியைப் புறக்கணித்து விட்டு, யாராவது ஆங்கிலத்தில் பேசினால் விடமாட்டார். அவர்கள் புத்தியில் படுமாறு ஏதாவது கூறிவிட்டால் அவர் மனம் அமைதியடையாது. வினோபாவின் இந்தப் போக்கைப் புரிந்து கொள்ளாத ஒரு நண்பர், ஒரு சமயம் ஆங்கிலத்தில் வினோபாவுடன் பேசினார். உடனே வினோபா, "உன் தாய் என்ன துரைசானியா?" என்று கேட்டு விட்டார். வந்த நண்பர் அதற்காக வருத்தப்படவில்லை. மாறாக, தன் தவற்றை உணர்ந்து தாய் மொழியில் பேசினார்.

யாரும் இல்லாத இடம்?

ஒரு நாள் ஒரு முனிவர் தன் மாணவர்கள் மூன்று பேரையும் அழைத்து, ஒவ்வொருவருக்கும் ஒரு மாம்பழம் கொடுத்தார். யாரும் இல்லாத இடத்தில் போய் இதைச் சாப்பிட்டுவிட்டு, இதன் சுவை எப்படியிருக்கிறது என்று என்னிடம் வந்து சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டார். முதல் இரண்டு மாணவர்களும் தனியிடத்திற்குப் போய்-யாரும் பார்க்காத இடத்தில் சாப்பிட்டுவிட்டு, மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தார்கள். "இது போன்ற மாம்பழத்தைத் தின்றதே இல்லை" என்று முனிவரிடம் சொன்னார்கள். ஆனால், மூன்றாவது மாணவன் மட்டும் மாம்பழத்துடனே திரும்பிவந்தான். "ஏன் சாப்பிடவில்லை?" என்று முனிவர் கேட்டார். உடனே மூன்றாம் மாணவன், "ஐயா, யாரும் இல்லாத இடம். எனக்கு எங்கிருக்கிறது என்று தெரியவில்லை. எல்லா இடத்திலும் இறைவன் இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறாரே" என்று பதில் சொன்னான். முனிவர் மகிழ்ச்சியடைந்து, "நீயே உண்மையான மாணவன்" என்று பாராட்டினார்.

ஆறாவது பிள்ளை யானை கட்டி வாழுமா?

"ஆறாவது பிள்ளை யானை கட்டி வாழும்; எட்டாவது பிள்ளை எட்டிய மட்டும் ஆளும்" என்றெல்லாம் வீட்டில் பெரியவர்கள் சொல்வது வழக்கம். உண்மையில், ஆறாவதாகப் பிறந்த பிள்ளைகளெல்லாம் யானை கட்டி வாழ்கின்றார்களா, என்ன? ஆறாவதாகப் பிறந்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. தனது வாழ்க்கைக் குறிப்புக்களில் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

"ஆறாவது பிள்ளையாகிய எனக்கு என்ன அதிஷ்டமிருக்கிறது? யான் யானை கட்டி வாழ்ந்தேனா? வாழ்கிறேனா? யான் தலைமை பூண்ட மாநாடுகளிலே நடந்தேறிய ஊர்வலங்கள் சிலவற்றிலே யானையும்

அசைந்து நகர்ந்ததுண்டு: இது யானை கட்டி வாழ்ந்ததாகுமா? ஆறுவதல்லார் ஊர்களிலும் யானை அசையாமல் இல்லை. ஆகவே, தொடர்பு எனக்கு விளங்கவில்லை."

அடிமையானது இப்படித்தான்

இந்தியா அந்நியர்கள் பலருக்கு அடிமையானதே ஒற்றுமை இன்மையாலும், சாதிப் பிரிவுகளாலும் தான். இந்தியர்களின் இந்தப் பலவீனத்தைப் புரிந்து கொண்டுதான் வெளிநாட்டு மன்னர்கள் எளிதில் வெற்றி பெற்றார்கள். சான்றாக மூன்றாம் பானிப்பட் போரைக் குறிப்பிடலாம். மகாராஷ்டிரத்தின் மீது படையெடுத்த ஆப்கானியர்களுக்குத் தாங்கள் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை அணுவளவு கூட இல்லையாம். ஆனால் ஆப்கானியர்களின் தலைவனை ஆமத்ஷா, மகாராஷ்டிரப் படையினர் பல்வேறு பிரிவினராய்ப் பிரிந்து சமையல் செய்வதைத் தூரத்திலிருந்து பார்த்து விட்டானாம். "ஏன் அத்தனை நெருப்புகள் அங்கே?" என்று அருகிலிருந்தவர்களைக் கேட்டானாம். அங்கிருந்த ஒருவன், "இந்துக்கள் அல்லவா? பல சாதியினர் ஆயிற்றே அவர்கள்! ஒரு சாதியினர் செய்யும் சமையலை இன்னொரு சாதியினர் சாப்பிடுவார்களா?" என்று பதில் சொன்னானாம். உடனே ஆப்கானியத் தலைவன் "நமக்குத்தான் வெற்றி, ஐயமே இல்லை" என்று மகிழ்ச்சியுடன் கூவி முகம் மலர்ந்தானாம்.

விளைவின் பலன்

நியூயார்க்கில் ஒரு தபால்காரர் 1956-ல் ரிடையரானார். அன்று அவர் வீட்டில் சென்று பார்த்த போது, இரண்டு டன் எடையளவு தபால் கட்டுகள் குவிந்து கிடந்தன. அவற்றில் பெரும் பகுதி, பத்திரிகைகளும், விளம்பரத் தபால்களும்தான். இவைகள் எப்படி சேர்ந்தன என்று கேட்கிறீர்களா? தினமும் விநியோகிக்கத் தவறிய தபால்களைச் சேர்த்து வைத்ததின் விளைவுதான் அது.

வாழைப்பழ வீரன்

க்ளைவ் மீன் என்ற லண்டன் போலீஸ்காரர், ஒரு நாள் ஒரு ஒரு வாழைப்பழத்தை மிக ஆனந்தமாகச் சுவைத்துக் கொண்டே "வாழைப்பழத்தைத் தின்று கொண்டே இருக்கலாம் போல தோன்றுகிறது" என்றார். அன்று மாலை, வேலை முடிந்து அறைக்குள் நுழைந்தவுடன் அவருக்கு ஒரே வியப்பு! 10 பவுண்டு எடையளவு வாழைப் பழங்கள் குவியலாகக் குவித்து வைக்கப் பட்டிருந்தன. இது அவரது நண்பர்களின் சவால் என்று உடனே யூகித்து அறிந்து கொண்டார்.

சாவதானமாக, மேஜைக்கு முன்னால் அமர்ந்து, வாழைப் பழங்களை உரித்து உள்ளே தள்ளத் தொடங்கினார். 40 நிமிடங்களில், அங்கு 40 தோல்கள்தான் மிஞ்சியிருந்தன. நண்பர்கள் அசந்து விட்டனர்.

—"கல்லூரி"

கக்குவான் இருமல்

[ஆர். ஷகில்ட்ஸ், ஆர். என்.]

ஒரு தாய்க்குக்கக்குவான் கண்டு குணமாகியிருந்தால், குழந்தைக்கு அது வராது அல்லவா?

சில நோய்களைப் பற்றிய வரையில், குழந்தைக்கு இந்த விதத்தில் ஓர் அளவு பாதுகாப்பு பிறப்பினால் வருவது உண்மையே. சிறப்பாக, தாய்ப் பால் வழியாக வரும். ஆனால் கக்குவானுக்கு இத்தகைய பாதுகாப்பு இல்லை. தடுப்பு மருந்தினால் தான் அதை அமைத்துக்கொள்ள வேண்டும். முதல் மாதமே மருந்து குத்தி வைப்பது நலம். ஏனெனில் இரண்டு மாதக் குழந்தைகளுக்கு இந் நோய் வருவதை மருத்துவர்கள் கண்டிருக்கிறார்கள்.

ஊசி வலிக்காதா?

பெரியவர்களை விட இளங் குழந்தைகள் தாம் அதை நன்கு தாங்கிக் கொள்கிறார்கள். அதனால் தீக்குணம் ஏதும் உண்டாவது மிக மிக அருமை.

கக்குவான் அபாயகரமான நோயா?

இது மிகவும் தொந்தரவான நோய் என்று சொல்வது தான் சரி. எனினும் இரண்டு வயதுக்கு முன்னால் வந்தால், அபாயமாகக் கூடும். சில பின் தங்கிய நாடுகளில் இந் நோய் காணப்பெறும் ஆறு மாதங்களுக் குட்பட்ட குழந்தைகளில் இருபத்தைந்து சதவீதப் பேர்கள் இறந்து விடுகிறார்கள். நான்கு வயதுக்குமேல் அவ்வளவு பயம் இல்லை. பத்துக்குப் பிறகு வருதல் அரிது. பொதுவாக ஒரு தடவை வந்து போய்விட்டால், திரும்பவும் வராது.

சாதாரண இருமல் கக்கிருமலாக மாறுமா?

பல விதமான இருமல்கள் இருக்கின்றன. அவற்றில் சில, குக்கலைப் போலவே, இரவு வேளையில் தான் அதிக வேதனை செய்பவை. ஆயினும் அவை ஒன்றிலிருந்தும் அது விருத்தியாகாது. அதன் மூலகர்த்தா ஹீமோபிலிஸ் பெர்ட்டஸிஸ் என்னும் அணுக் கிருமி. இந் நோயுள்ள குழந்தைகள் இருமும்போதும், தும்மும் போதும், அவர்கள் மூக்கிலிருந்தும் தொண்டையிலிருந்தும் சளி தெறித்து, அவர்கள் அருகில் இருக்கும் குழந்தைகள் மீது பட்டு, அன்னாருக்குக் கிருமிகளை ஒட்ட வைக்கிறது. இவ்வாறே அது தொற்றிப் பரவுகிறது.

உங்கள் சேயுவுக்குத் திடீரென இருமல் துவங்கியிருக்கலாம். அது கக்குவான் என்று எப்படி நிச்சயிப்பீர்கள்? முதலாவதாக ஊரிலே வியாதி நடமாடுகிறதா என்று பாருங்கள். பெரும்பாலும் வசந்த காலத்தின் பிற்பகுதியிலும், கோடைத் துவக்கத்திலுமே இது பரவும்.

இந் நோயில் காணும் அடுக்கிருமலும் ஒரு நல்ல அடையாளம். 5-15 தடவை இருமல் வரும். அது நின்றதும், குழந்தை மூச்சு விடத் தொடங்குவான். அப்பொழுது இழுப்புச் சத்தம் கேட்கும்.

கிருமி தொற்றிய நாளிலிருந்து எவ்வளவு காலத்திற்குப் பிறகு நோயின் அறிகுறிகள் தென்படத் தொடங்கும்?

7-14 நாட்களுக்குள்; ஒரு போதும் 21-க்கு மேற்படாது.

இந் நோயில் இருமல் உண்டாவது ஏன்?

மூக்கு, தொண்டை, மூச்சுக் குழாய், மூச்சுக் குழாய்க் கிளைகள், இவை நெடுகிலும் ஒரு மெல்லிய சவ்வு மூடியிருக்கிறது, அல்லவா? இச் சளிச் சவ்வைத் தான் கக்குவான் கிருமி கடுமையாகத் தாக்கும். இதனால் அதிலே இயற்கைக்கு அதிகமான சளி ஊறுகிறது. துவக்கத்திலே சளி தண்ணீரைப் போல் இருக்கும். ஆனால் விரைவில் மிகவும் தடித்துவிடும். இதுவே இந் நோயில் இருமலும் மூச்சுத் திணறலும் வாந்தியும் உண்டாவதன் காரணம்.

வலிப்பு கூட உண்டாகுமாமே?

ஆம். சில சமயம் இரைப்பையினின்று வேகமாக மேல்நோக்கி வரும் சீரணப் பொருட்கள் சுவாசக் குழாயினுள் இழுப்புண்டு, மூச்சையும் அடைத்துவிடலாம்.

துவக்கத்திலேயே வாந்தி உண்டாகுமா?

இந் நோய் மூன்று கட்டங்களை உடையது:

(1) ஜலதோஷக் கட்டம் (1, 2 வாரங்கள்).

(2) அடுக்கிருமல் கட்டம் (3, 4 வாரங்கள்). சளி தடித்துவிடுகிறது. அதன் விளைவாக, அடுக்கிருமலும் மூச்சுத் திணறலும், வாந்தியும் உண்டாகின்றன. அழுகை, தோல் குளிர்ந்து போதல், திடீர்க் கோபம், திடீர்த் துயரம், கடுமையான உடல் முயற்சி செய்தல், வயிறு நிரம்ப உண்ணுதல் இவை இருமலை கிளப்பிவிடும். இவைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

(3) குணமாகும் கட்டம். நான்காம் வாரத்தின் இறுதியிலிருந்து இருமலும் வாந்தியும் சிறிது சிறிதாக நிற்கும். ஆனால் இக் கட்டத்தில்தான் சிக்கல்கள் தோன்றலாம்.

நிமோனியா சாதாரணம். மூளை பழுதுறலாம். எப்படித் தெரியுமா? இருமலின் வேகத்தினால் மூளைத் தட்டு அதிர்ந்து போகிறது. மூளையில் இரத்த ஒழுக்கு ஏற்படலாம். அது காரணமாக, பக்கவாதம், மன வளர்ச்சித் தடை, நரம்புக் கோளாறுகள் ஆகியவை உண்டாகலாம். ஒவ்வொரு சமயம் கண்களிலும் மூக்கிலும் இரத்தப் பெருக்கும், தொப்புள் பிதுக்கமும், அடித்தள்ளுகையும் உண்டாகலாம்.

நோய் வந்தால் எப்படிக் கவனிக்க வேண்டும்?

குழந்தையைக் கட்டாயப்படுத்திப் படுக்க வைக்க வேண்டாம். அவன் திறந்த வெளிக் காற்றில் நடமாடுவது தான் நல்லது. ஆனால் போதிய ஆடை அணிந்திருக்க வேண்டும். உடல் களைக்க விளையாடக் கூடாது. எனினும் காய்ச்சலாவது இருமலாவது அதிகம் இருந்தால், படுக்கையில் இருப்பது அவசியம்.

நோய் குணமாகும் வரையில், அவன் பள்ளிக்கூடத்திற்குப் போகக்கூடாது; மற்றப் பிள்ளைகளோடு விளையாடவும் கூடாது. ஒரு தனி அறையில் அவன் இருக்க வேண்டும். அது காற்றோட்டமுள்ளதாக இருப்பது அவசியம். ஆனால் குளிர் காற்று படக் கூடாது.

நோயாளி உபயோகித்த பாத்திரங்களால் வியாதி பரவுவது அரிது. எனினும் அவைகளை அவ்வப்போது சுடுதண்ணீரில் சுத்தம் பண்ண வேண்டும். அவன் துணிகளையும் கொதிக்கும் வென்னீரில் சுத்தமாக்க வேண்டும். தினசரி வென்னீரால் உடலைச் சுத்தம் செய்ய வேண்டும்.

அவனைக் கவனிப்பவர்கள் தங்கள் கைகளை அடிக்கடி நச்சரி மருந்துகளால் கழுவிக்கொள்வது நலம்.

அடிக்கடி உணவு அளிக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் இருமல் வந்துவிட்டுப் போனதற்கு 15-20 நிமிஷங்களின் பின்பு சிறுசிறு அளவுகளில் ஊட்டுவது நல்லதாம். உணவு மென்மையாக இருப்பது அவசியம். தாளித்த பதார்த்தங்கள் நல்லதல்ல. நீருணவுகளைக் காட்டிலும் கெட்டியான உணவுகள் இரைப்பையில் நன்கு தங்கக் கூடியவை. இவ்விருவகை ஆகாரங்களையும் தனித் தனியாகக் கொடுப்பது மேல்.

குழந்தையின் அடிவயிற்றைச் சுற்றிலும் ஒரு துணியால் ஒரு கட்டுக் கட்டி வைப்பதும் நலம்.

இருமல் மருந்துகளால் பிரயோஜனமில்லை. ஒவ்வொரு சமயம் கெடுதல் கூட ஏற்படும். வாய் குமட்டலையும் வாந்தியையும் அவை அதிகப்படுத்தலாம். மருத்துவர் சில வேளை முதல் வாரத்திலே ஆன்டிபையாட்டிக் மருந்து ஏதேனும் கொடுப்பார். தூக்க மருந்து கொடுக்கலாம். நோய் மிகவும் உக்கிரமாக இருப்பின், ஹைப்பர் இம்மியூன் ஸீரமும் தரலாம்.

துவக்கத்தில் ஏதோ தடுப்பு மருந்து பற்றிச் சொன்னீர்களே, அது எது?

டிரிப்பிள் ஆன்டிஜன். இதிலே கக்குவான், தொண்டை அடைப்பான் (diptheria), இரண சன்னி (tetanus) ஆகிய மூன்று நோய்களையும் தடுப்பதற்குவேண்டிய வாக்சீன்கள் கலந்துள்ளன. பிறந்த குழந்தைக்கு முதலாம் அல்லது இரண்டாம் மாதத்திலே இதைக் குத்த வேண்டும். பிறகு 4-6 வாரம் கழித்து மறுபடியும் ஒரு தடவை. அதே அளவு காலத்திற்குப் பின் மீண்டும் ஒரு முறை. 2-5 வதியல் திரும்பவும் ஒரு தரம். அதன் பின்னர் அவசியம் இல்லை.

—'நல்வழி'

அறிவியல் விந்தைகள்

ஆண்டவன் படைத்த அனைத்துயிர்களிலும் மனிதனே ஆறறிவு படைத்த பகுத்தறிவு ஜீவன்; அவனே ஏனைய உயிர்களையும் இயற்கைச் சக்திகளையும் அடக்கி ஆள வல்லவன் என்று கருதி வந்தோம். ஆனால் இன்று மனிதனால் படைக்கப்பட்ட 'இயந்திர மனிதன்' என்று கூறப்படும் கம்பியூட்டர்கள் அவனையே ஆட்டிவைக்கும், ஆற்றல் பெற்று வருகின்றான் என்றறியத் திகைக்கிறோம். அத்தகைய இயந்திர மனித படைப்பில் ஆங்கில பத்திரிக்கையொன்று கம்பியூட்டரின் எதிர்காலம் பற்றி கேட்ட கேள்விகளுக்கு அவரளித்த பதில்கள் நம்மை மேலும் வியப்பில் ஆழ்த்துகின்றன.]

கே: மனிதனை விட புத்தி சாலித்தனமான இயந்திரங்கள் உருவாக்கப்படுமா?

ப: இப்பொழுது, மிகவும் நுணுக்கமாகச் செயல்படக் கூடிய சிலவற்றை நாங்கள் தயாரித்துக் கொண்டு வருகிறோம். இது பல பேருக்குத் தெரியாது. ஆனால், அவற்றைத் தன் மூளை பலம் கொண்டு புத்திசாலித்தனமாகக் கையாளா விட்டால் அது மனிதனின் குற்றமேயன்றி இயந்திரங்களின் குற்றமல்ல.

கே: கம்பியூட்டரின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: மனித மூளையில் நினைவாற்றலுக்கு ஆதாரமாக இருப்பது, 'ஜீனஸ்' என்பது. இந்த 'ஜீனஸ்' மூளையில் இருக்கும் ஒருவித நியூக்ளிக் ஆசிட்டாலும், நரம்புகளின் உதவியாலும் இயங்குகிறது. இதே முறையைக் கம்பியூட்டர்களுக் குள்ளும் புகுத்துவதற்கு ஆராய்ச்சி நடந்து வருகிறது.

கே: அந்த 'ஜீனஸ்' புகுத்தப்பட்டால், கம்பியூட்டர்கள் என்னவெல்லாம் செய்யக்கூடிய ஆற்றல் கிடைக்கும்?

ப: இப்போது அதற்குக் கொடுக்கப்படும் விஷயங்களைக் காட்டிலும் இன்னும் அதிகமான விஷயங்களைக் கையாளக்கூடிய திறமை அதற்கு ஏற்படும்.

கே: கம்பியூட்டர்கள் சிந்திக்கின்றன என்று மனிதர்கள் இப்பொழுதே பேசிக்கொள்கிறார்களே? அது உண்மையா?

ப: அவைகள் தற்போது, கம்பியூட்டர்கள் செய்யும் வேலைகளில் உள்ள தவறுகளை அவைகளே கண்டு சோதித்து திருத்திக்கொள்ளும் அளவிற்கு வளர்ந்துள்ளன. இதைச் சிந்தனை என்று கூறிக்கொண்டாலும் ஆட்சேபனையில்லை. எதிர் காலத்தில் இந்தத் திறமை இன்னும்வளருப்

கே: இயந்திரங்கள் மனிதர்களைக்காட்டிலும் அதிகமாகப படிக்க முடியும் என்ற சூழ்நிலை ஒரு காலத்தில் உருவாகுமா?

ப: நிச்சயமாக முடியாது. இன்னும் எவ்வளவோ காலத்து வரையும் இது நடக்காது. ஆனால், கம்பியூட்டர்கள், நம்மைக் காட்டிலும் அதிகமாகப் படிக்கின்றன என்றால், நாம் படிக்கத் தவறி விட்டோம் என்று தான் பொருள். அவைகளுக்கு, கொடுக்கப்பட்ட விவரங்களைக் கொண்டு, விளைவுகளைக் கொண்டு, வினைகளைக் கவனிக்க முடியுமே தவிர மனித மூளையைப் போல்—கொடுக்கப்படாத விவரமானாலும், யூகித்து அறிந்து கொள்ளும் ஆற்றல் கம்பியூட்டர்களுக்குக் கிடையாது. இந்த 'யூக ஆற்றல்' கம்பியூட்டர்களுக்கும் கொடுக்கமுடியும். ஆனால், அதற்கு ஆகும் செலவு அளவிடற்கரியது.

கே: அப்படியானால் 'படிக்கும் இயந்திரம்' என்பதற்கு நீங்கள் என்ன விளக்கம் தருகிறீர்கள்?

ப: 'படிக்கும் இயந்திரம்' என்றால் குறிப்பிட்ட ஓரிரு சில சட்ட திட்டங்களுக்குட் பட்டு, ஒரு வேலையைச் செய்து வருவது மட்டுமல்லாமல் கொஞ்ச நாட்களில் அந்தச் சட்ட திட்டங்களிலேயே சாதக பாதகமானவற்றை நீக்கி விட்டுச் செயல் படுகின்றதைத்தான் அப்படிக் கூறுகிறோம்.

உதாரணமாக, 'டிராட் (Draught) விளையாடும் இயந்திரத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். அது, கொஞ்ச நாட்களில், அதைக்கண்டு பிடித்த விஞ்ஞானியையே அந்த விளையாட்டில் தோற்கடித்து, அந்த விஞ்ஞானி அவ்விளையாட்டைப் பற்றி இன்னும் அதிக மாகக் கற்றுக் கொள்ள வேண்டியதிருந்தது.

கே: இயந்திரங்களுக்கு எழுதவும் கற்றுக் கொடுக்கப்படுகின்றனவா?

ப: ஆம். சில இயந்திரங்களிடம் சில குறிகளைக் கொடுத்தால், அதைக் கொண்டு இவை எழுதிக் காட்டும்; அச்சடித்தும் தரும். பேச்சு, சொற்மொழிவுகளைக் கூட அவற்றிடம் கொடுத்து, குறிகளாக்கிக் கொள்ளலாம். அவை விரிவானவற்றைக் குறுக்கிக் குறிகளாகவும் ஆக்கித் தரும்; அக்குறிகளை விரிவாக்கி, எழுத்தாகவும், அச்சாகவும் தரும்.

கே: இயந்திர மனிதர்களின் உலக ஆக்கிரமிப்பு என்பது வெறும் கற்பனைக் கதையா அல்லது எதிர்காலத்தில் உண்மையாகவே நிகழக்கூடிய ஒன்றா?

ப: நம்மிடம் எல்லாவற்றையும் இயந்திரங்களுக்கே ஒப்படைத்துவிடும். அலட்சியப் போக்கு வளர்ந்துகொண்டே வந்தால் அந்தக் கற்பனை உண்மையாகவேநிகழக் கூடும். அல்லாத பட்சத்தில், நாம் அவற்றைக் கட்டுப்படுத்தி ஆண்டு நமது மனித ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளலாம்

கே : எல்லாம் இயந்திர மயம் என்ற இப்போக்கைக் கட்டுப்படுத்த முடியாதா?

ப : அது சிரமம். இதுவரை முன்னேறிவிட்டு வந்த வழியில் திரும்பிச் செல்லென்றால் அது முடியுமா? மனித வளர்ச்சியில், ஆதியில் ஆதாம் — ஏவாளுக்கு, அறிவு மாங்கனி கிடைத்தது போலதான் இப்போது மனிதனுக்குக் 'கம்பியூட்டர்' கிடைத்திருக்கிறது. அறிவுப்பழத்தை உண்டபின் முன்னேறத்தான் மனம்வருமே தவிர பின்நோக்கிச் செல்ல மனம்வராது. 'அன்றாட வாழ்க்கையில் உங்கள் சிரமம் தீர்க்க நான் இதோ உள்ளேன்' என்று கூறிய வண்ணம் நம் கண் முன்னால் நிற்கும் கம்பியூட்டரைப் புறக்கணித்து ஒதுக்கி விட்டுப் பாராமுகமாகச் செல்ல முடியுமா?

கே : டாக்டர் வெய்னர் அவர்களே, இறுதியாக ஒரு கேள்வி. மனிதன் தன் ஆற்றலால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குத் தன் சூழ்நிலைகளை மாற்றி வருகிறான் என்பது உண்மையா?

ப : அது ஒரு முக்கியமான பிரச்சினைதான். மனிதன் உண்மையாகவே தன் ஆற்றலின் அளவுக்கு மீறித்தான் தன் சூழ்நிலைகளைப் பெரிதும் மாற்றிக் கொண்டுவருகின்றான். அதை விரைவிலேயே நாம் உணரும் காலம்வரும். அல்லது அந்தக் காலம் வருவதற்குள் நாமே இருக்க மாட்டோம்.

"கல்லூரி"

"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ஆரம்பப் பாடசாலையில் புது முறை

விளையாட்டாக பிள்ளைகள் வேலை செய்து படிப்பது சிறந்த கல்வி முறை. அவ்வாறு செய்யும் வேலைகள் பயன்விளைத்தல் வேண்டும். பிள்ளைகள் தாங்களே திட்டம் வகுத்து, தாங்களே பல்வகை வேலைகள் செய்வது நன்று. அமெரிக்காவில் உள்ள பாடசாலை ஒன்றில் அம் முறை செம்மையாகக் கையாளப்படுகிறது. அதனைப் பற்றி இக் கட்டுரை உரைக்கிறது.

நியூயார்க்கில் கார்ப்பஸ் கிறிஸ்டிப் பாடசாலை என்னும் பள்ளிக் கூடம் ஒன்று உள்ளது. அது ஒரு ஆரம்பப் பாடசாலை. அந்தப் பாடசாலை ஆசிரியர்கள் தற்கால கல்வி முறையைப் பயன்படுத்தி வெற்றி கண்டு வருகின்றனர்.

அந்தப் பள்ளிக் கூடத்துக்குப் போவோர் வகுப்பறைகளில் மேஜைகளும் மற்றவைகளும் ஒழுங்கில்லாமல் கிடக்கக் காண்பர். பிள்ளைகளின் மேஜைகள் ஒரே வரிசையில் ஒழுங்காக இருப்பதில்லை. அவை ஒரு பெரிய அரை வட்டமாக இருக்கலாம்; அல்லது மூன்று நான்காகப் போடப் பட்டிருக்கலாம். அந்த நேரத்தில் படிக்கவேண்டிய பாடத்துக்குத் தகுந்தவாறு அவை போடப் பட்டிருக்கும்.

பத்திரிகைப் படிப்பு

வாசிப்புப் படிக்கும் நேரத்தில் பிள்ளைகள் அவர்களது படிப்புத் திறமைக்குத் தகுந்தவாறு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறார்கள். ஆசிரியர் ஒவ்வொரு பிரிவுக்கும் போய்ப் படித்துக் கொடுக்கிறார். திறமை மிகவும் குறைவாயுள்ள பிள்ளைகளை அவர் அதிகமாக கவனிக்க நேரும். பத்திரிகைகளில் உள்ள ஒரு செய்தியைப் பற்றி அறிய விரும்பும் பெரிய பிள்ளைகள் மேஜைக்கு நான்கு நான்கு பேராக அமர்ந்திருப்பார்கள். காலைப் பத்திரிகைகளையும் மாலைப் பத்திரிகைகளையும் அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். வேறு ஒரு வகுப்புதான் விருப்பமாய் செய்த படிப்பு வேலையை முடித்து விட்டு, மற்றொரு வகுப்புக்கு அதைக் காட்ட அந்த வகுப்பு மாணவரை அழைத்துக் காட்டிக் கொண்டிருக்கலாம்.

தானே முயன்று

தானே ஒரு காரியத்தைச் செய்யும் திறமையும், தானே சொந்தமாகப் புதிய கருத்துக்களை எண்ணும் வன்மையும் மாணவன் பெற வேண்டும் என்பது அங்கு முக்கியமாகக் கொள்ளப்படுகிறது. பிள்ளைகள்

தங்கள் கருத்துக்களை இயன்ற அளவு பயன்படுத்தவும், வெளியிடவும் அங்கு அவர்களுக்கு ஊக்க மூட்டுகிறார்கள். உதாரணமாகக் கிண்டர் கார்டன் வகுப்பிலேயே சித்திரம் வரையவும் பாட்டுப் பாடவும் கற்றுக் கொடுக்கிறார்கள். வகுப்பறைகளையும், வழிகளையும் அலங்கரிக்கும் படங்கள் மேல் வகுப்பு மாணவர்கள் தாங்களே தங்கள் கருத்துப் படி வரைந்தவை.

போட்டிக்குப் பதில் கூட்டுறவு

வகுப்பறையில் போட்டிக்கு பதிலாகக் கூட்டுறவு காணப் படுகிறது. படிப்புத் திறமைக்காகத் தனித்தனியே பிள்ளைகளுக்கு எந்த விதமான பரிசும் வழங்கப் படுவதில்லை. பிள்ளைகளின் படிப்பைப் பற்றிப் பள்ளிக் கூடத்திலிருந்து அறிக்கைகள் அனுப்பப் படுவதில்லை. ஆனால் ஆண்டுக்கு மூன்று தடவை பெற்றோர்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்து தங்கள் பிள்ளைகளின் ஆசிரியர்களைக் கண்டு பிள்ளைகளின் படிப்பைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்று அழைக்கிறார்கள். 95 சத விகிதம் பெற்றோர் வருகின்றனர்; அவ்வாறு வருவது அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அச் சமயத்தில் மாணவரின் படிப்பைப் பற்றி மட்டுமல்ல, வீட்டு நிலைமையும் பள்ளிக்கூடத்துப் பயிற்சியும் எவ்வாறு பிள்ளைகளின் அபிவிருத்திக்குத் துணை செய்யும் என்பது பற்றி அவர்கள் பேசுகிறார்கள்.

தாராளமாகப் பேசு

வகுப்புகளிலெல்லாம் பிள்ளைகள் தாராளமாகப் பேச அனுமதிப்பதுமல்லாமல், பேசுவதற்கு ஊக்கமும் ஊட்டுகிறார்கள்; சரித்திரப் பாடத்திலும் அது போன்ற பாடங்களிலும் மேல் வகுப்புப் பிள்ளைகள் சொந்தமாக ஆராய்ச்சி செய்து, அதனைப் பற்றித் தெரிவிக்க வேண்டும். வகுப்பில் வேலை செய்வது மல்லாமல், அவர்கள் ஆசிரியர் பெற்றோர் மேற் பார்வையில் பல இடங்களைப் போய்ப் பார்த்து வருகிறார்கள். அது வகுப்பு வேலைக்கு அனுகூலமாக இருக்கிறது.

தலைமை பொறுப்புணர்வு

கார்ப்பஸ் கிறிஸ்டிப் பாடசாலையில் தலைமை தாங்கும் தகுதியும் பொறுப்புணர்வும் ஊட்டுவதற்கு முயற்சி செய்யப் படுகிறது. நான்காவது வகுப்பு முதல் ஒவ்வோர் வகுப்பும் யாதேனும் ஒரு திட்டத்துக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும். அந்தத் திட்டம் பிள்ளைகள் தாங்களே நினைத்துத் தொடங்கியதாக இருக்கும்; பள்ளிக்கூடம் முழுவதையும் குறித்த பொறுப்புணர்வு ஊட்டுவதாகவும் இருக்கும். எனவே, நான்காவது வகுப்பு மாணவர் ஒவ்வொரு வகுப்பறைக்கும் போய், பால் எவ்வளவு வேண்டும் என்பது பற்றி அறிந்து வருகிறார்கள். நாள்தோறும் காலையில் பால்

26ம் பக்கம் பார்க்க

நீவிர் அறிவீரா?

கோடையின் கொடுமை நம்மை நெருப்பாய்த் தாக்கும் போது, குளிர் சாதனத்தின் தேவை ஒவ்வொரு வருக்கும் அவசியமாகி விடுகிறது. சாதாரண வெப்பத்தைக் கூடத் தாங்க முடியாதவர்கள் கொடைக்கானலுக்கும் ஊட்டிக்கும் ஓடுவதை நாம் பார்த்து வருகிறோம். வெய்யில் காலங்களில் ஏர்க்கண்டிஷன் தியேட்டர்களில்தான் மக்கள் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. ஏர்க்கண்டிஷன் இல்லாவிட்டால் இன்றைக்குச் சில அலுவலகங்களில் வேலையே ஸ்தம்பித்துவிடும்! மேல் நாடுகளில் குளிர்சாதனம் இல்லாத அலுவலகங்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவைதாளும். இந்த அளவுக்கு மனிதர்களின் வாழ்க்கையில் மிக அவசியமான பொருளாகி விட்ட குளிர் சாதனத்தைக் கண்டு பிடித்தவர் யார் தெரியுமா? கண்டு பிடித்த விதமே ஒரு சுவையான கதை!

இன்றைக்கு 5000ம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கோடையின் கொடுமையை வெற்றி கொள்ள மனிதன் இடைவிடாது முயன்றிருக்கிறான்.

கோடையில் குளிர்பெற ரோம் நாட்டுப் பேரரசர்கள் மலைகளிலிருந்து பனிக்கட்டிகளை அள்ளிவந்து தங்கள் அரண்மனையைச் சுற்றிலும் குவித்து வைப்பராம்.

கி. பி. 775 ஆம் ஆண்டு பாக்தாத்தை ஆண்டு வந்த மன்னன் கோடையின் கொடுமைக்கு வேலியமைக்க எண்ணி கோடை மாளிகை என்று ஒரு மாளிகையைக் கட்டினனும். அந்த மாளிகையின் சுவர்கள் அனைத்தும் தூண்களைப் போன்று இடைவெளி விட்டு எழுப்பப்பட்டதாம். அந்த இடைவெளிகளுக்கிடையே பனிக்கட்டியைக் கொட்டி வைத்து கோடையின் கடுமையைத் தணித்துக் குளிர் பெறுவாளும்.

1851ஆம் ஆண்டுதான் ஜான் கோரி என்பவர் பனிக்கட்டி தயாரிக்கும் பொறியைக் கண்டு பிடித்தார். இந்தப் பொறியைப் பயன்படுத்தி அமெரிக்க திரை அரங்குகளில் 1881ஆம் ஆண்டு முதல் குழாய்களின் மூலம் குளிர் காற்று வீசுவதற்கு வசதி செய்யப்பட்டது. ஆனால் அந்தக் காற்றுப் பட்டவுடன், காற்றுப் பட்ட இடமெல்லாம் ஈரமாகி விடுமாம். எனவே இது பெரும் பிரச்சினையாக இருந்து வந்தது.

அமெரிக்காவில் உள்ள "சாக்கெட்வில் கெல்ம்ஸ்' என்ற கம்பெனியார் இந்தப் பிரச்சினைக்கு முடிவுகாண விரும்பி ஒரு குழு ஒன்றை அமைத்து ஆலோசனை செய்தனர்.

"வில்லிஸ் கேவிலாண்ட் கேரியர்" என்பவர் ஓராண்டு முழுவ

தும் ஆராய்ச்சி நடத்தி இந்தக் குளிர் சாதன முறையைக் கண்டு பிடித்தார். இதற்கான கருவியை அவர் செய்து முடித்தது 1902ல்.

ஆரம்பத்தில் இதில் பல குறைகள் இருந்தன. கேரியர் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் இதில் பல திருத்தங்கள் செய்வதற்கே கழித்து வெற்றி பெற்றார்.

ஆனாலும் இந்த வெற்றியில் அவருக்கு நிறைவு இல்லை. "இன்னும் சிந்தித்தால் இந்தப் பெட்டியில் பல மாற்றங்கள் செய்ய முடியும் என்றார். குறிப்பாக இந்தப் பெட்டிகள் புழக்கத்திற்கு வரும் போது நடுத்தரக் குடும்பத்தினர் இதை உபயோகிக்க முடியாத அளவு இதன் விலை உயர்ந்திருக்கும். அப்படியானால் என் கண்டு பிடிப்பின் பயனை ஒரு சிலர் மட்டும்தானே அனுபவிக்க முடிகிறது? ஒவ்வொரு தொழிலாளி வீட்டிலும் குளிர் சாதனம் இருக்கவேண்டும் அந்த அளவு அது மலிவாக வேண்டும் அப்போதுதான் என் சாதனை வெற்றி பெற்றதாகும்" என்று தன் டைரியில் எழுதி வைத்திருக்கிறாராம் வில்லிஸ் கேவிலாண்ட்.

உலகத்திலேயே முதல் முதலில் உபயோகத்திற்கு வந்தது, கேரியர் கண்டு பிடித்த குளிர் சாதனக் கருவிதான்.

இவர் தன்னுடைய 73-வது வயதில் 1950 ஆம் ஆண்டு மரணம் அடைந்தார்.

அவருடைய சாதனை இன்று உலகம் முழுவதும் மெச்சத் தகுந்த வகையில் பயன்பட்டு வருகிறது.

24ம் பக்கத் தொடர்ச்சி

கொடுக்கப்படுகிறது. ஏழாவது வகுப்பு மாணவர் பள்ளிக்கூடத்துப் பாங்கியை நடத்துகிறார்கள். நாள்தோறும் பகல் உணவு வேளையில் அது திறந்திருக்கும். எட்டாவது வகுப்பு மாணவர்களுள் ஒருவர் நடை பாதைக்கும் பள்ளிக்கூடத்துக்கு அருகேயுள்ள தெருக் கோடிகளுக்கும் காவலாக உலாவி வருகிறார். குளங்களிலுள்ள மீன்களுக்கு இரை போடுதல் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுதல் கரும் பலகைகளைக் கழுவுதல், மேஜைகளையும், நாற்காலிகளையும் ஒழுங்காய்ப்போடுதல், ஆகிய வேலைகளை ஒவ்வொரு வகுப்பில் உள்ள மாணவர்களும் பகிர்ந்து செய்கின்றனர்.

—"தினமணி சுடர்"

கூந்தலின் வலிமை

தலை முடியை நாம் அலங்காரத்துக்குப் பயன் படுத்துகிறோம். பக்தர்கள் ஆண்டவனுக்குக் காணிக்கையாக்கி வருகின்றனர். நாகரிக நங்கையர் அதைப்படுத்தி வைக்கும்பாடு சொல்லுந் தரமன்று. கோபத்திற்கு ஆட்பட்டு விட்டவர்கள் முடியைப்பற்றிச் சாதாரணமாகப் பேசுவதுண்டு. ஆனால் அதனை ஒரு சாதனைக்குப் பயன்படுத்துகிறாள் அமெரிக்கப் பெண்மணி ஒருத்தி!

உலகத்திலேயே கூந்தல் பலம் அதிக உடையவள் 'சிரிஸ் ஹோல்ட்' என்பவள்தான். அவளுக்கு வயது 21. அவள் அமெரிக்க பர்னம் பெய்லி' என்னும் சர்க்கஸ் கம்பெனியில் பணியாற்றுகிறாள்.

ஒரு நகரின் எழிற் கோலத்தைக் காணவேண்டும் என்றால்—பொதுவாக எல்லோரும் கலங்கரை விளக்கங்களில் ஏறிப் பார்ப்பர். வசதி படைத்தவர்கள் விமானத்தில் சுற்றி வருவர். ஆனால் 'சிரிஸ் ஹோல்ட்' சர்க்கஸில்தான் காட்டும் வித்தையின் மூலமே—சர்க்கஸ் கம்பெனி எங்கெங்கு முகாமடிக்கிறதோ அந்த நகரின் அழகையெல்லாம் கண்டு ரசித்து விடுகிறாளாம். இது வரை அவள் எந்த நகரையும் சுற்றிப்பார்ப்பதற்கு காரையோ—மின்சார வண்டிகளையோ பயன் படுத்தியதில்லையாம்.

கூந்தலை இறுகக் கட்டி இரு முடிச்சுப் போட்டு அதில் ஒரு கொக்கியைமாட்டி சர்க்கஸ் கூடாரத்தின் மேல் கூரை வரை அவளைத்தூக்குவார்களாம். இது தான் சர்க்கசில் அவள் காட்டும் வித்தை. இதைக் காண்பதற்கு மட்டும் ஏராளமான கூட்டம் வருவதுண்டாம்.

சில மாதங்களுக்கு முன்பு சான்பிரான்சிஸ்கோ நகருக்கு இந்த சர்க்கஸ் கம்பெனி வந்திருந்தது. சான்பிரான்சிஸ்கோவின் அழகைக் காண விரும்பினாள் சிரிஸ் ஹோல்டா. அதற்காக கலங்கரை விளக்கத்தையோ அல்லது விமானத்தையோ தேடிப் போகவில்லை. தான் சர்க்கசில் செய்யும் அதே வித்தைப்படி சர்க்கஸ் கம்பெனியில் உள்ள ஒரு 'கிரை'னின் மூலம் தன்னை உயரத்தூக்கும்படி கேட்டுக் கொண்டாள். சர்க்கஸ் கம்பெனியாரும் சிரிஸ் ஹோல்டாவை உயரத் தூக்கினர். தலை முடி மட்டும் 'கிரைன்' கொக்கியில் மாட்டியிருக்க வேறு பிடிப்பின்றி—ஹோல்டா கூடாரத்தை விட்டு மிக உயரத்தில்மிதந்தாள். சான் பிரான்சிஸ்கோ அழகைக் கண்டு இரசித்தாள்—கையில் விலையுயர்ந்த கேமரா ஒன்றையும் எடுத்துச் சென்றிருந்த அவள் வானில் தொங்கியபடியே நகரின் முக்கிய பகுதிகளைப் புகைப்பட

மெடுத்தாளாம்.

இதுவரை தன் கூந்தல் பலத்தால் எந்த ஒரு பெண்ணும் இத்தகைய சாதனை செய்ததில்லை என்று சான்பிரான்சிஸ்கோ மக்கள் அவளைப் புகழ்கின்றனர். சர்க்கஸ் கம்பெனியாரும் அவளை ஒரு விளம்பர சாதனமாகப் பயன்படுத்திக் கொண்டு கொள்ளை கொள்ளையாகப் பணம் சம்பாதிக்கின்றனராம்.

முதல் நாள் அவள் கிரைனில் தூக்கப்படும்போது ஏராளமான பாதுகாப்புக்கள் செய்யப்பட்டனவாம். பின்னர் அவள் தன் கூந்தல் பலத்தில் எவருக்கும் சந்தேகம் எழாத வண்ணம் அந்தப் பாதுகாப்பு வசதிகளையும் வெகுவாகக் குறைத்துக்கொண்டு விட்டாளாம். இப்பொழுதெல்லாம் அவள் கிரைனில் உயரப்போவது சர்வ சாதாரணமாகி விட்டதாம். இதே கம்பெனியில், சிரிஸ் ஹோல்டாவைப்போல் வானில் தொங்க சில பெண்கள் முயற்சி செய்து தலையில் ரத்தம் சொட்டச் சொட்ட மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதோடு சரி! இதுவரை அவளுக்கு ஈடாக யாரும் நிற்க முடியவில்லையாம்.

“கூந்தலின் பலத்தால் இவ்வளவு உயரம் தூக்கப்பட்டாலும் இன்று வரை எனக்குத் தலைவலியோ வேறு எந்தவிதமான தொல்லையோ வந்ததில்லை” என்கிறாள் சிரிஸ் ஹோல்டா! இப்பொழுதெல்லாம் அவள் கிரைனில் தொங்கும்போது பல வேடிக்கையான நடன விளையாட்டுகளையும் செய்து காட்டுகிறாளாம்.

சிரிஸ் ஹோல்டாவை நிருபர்கள் சந்தித்த போது என் கூந்தல் பலத்தைப் போன்று உலகத்தில் வேறெந்தப் பெண்மணிக்கும் இருக்கமுடியாது என்று சவால் விட்டவள் அதன் ரகசியத்தைச் சொல்ல மறுத்துவிட்டாளாம்.

புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி. B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

அச்சுக் கலை

சு. பிச்சையா

"கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே—வாளோடு
முற்றோன்றி மூத்தகுடி"

என்று தமிழரின் தொன்மையைக் கூறும் 'புறப்பொருள் வெண்பா மாலை'யின் கூற்றுப்படி உலகில் கல் தோன்றிய பிறகு மண் தோன்றியது போல, சொல் தோன்றி பிறகு எழுத்துக்கள் தோன்றுவதற்கு முன் மக்கள் தங்களின் கருத்துக்களை ஓவியங்களில் வரிவடிவங்களாக தீட்டிக் காட்டி அதன் மூலமாக தெளிவு படுத்தியதாகவும், அதன்பின் நெடுங் காலத்திற்குப் பின்னரே எழுத்துக்கள் தோற்றுவிக்கப்பட்டதாகவும் மொழி ஆராய்ச்சி வல்லுநர்கள் பலரும் கூறுகின்றனர்.

இவ்வாறு எழுதத் துவங்கிய மக்கள் தங்கள் நாட்டு மொழிக்கும், எழுத்தின் அமைப்புக்கும், ஏற்றவாறு இடமிருந்துவலமும், வலமிருந்து இடமுமாக மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும், நான்கு வகைகளாக, வரிசைக்கிரமமாக அமைப்பு முறைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதற்குப் பின்னர்தான் அக்கால சாசனங்கள், நினைவுக் குறிப்புகள் முதலியவைகளை கல், மரம், மரப்பட்டை முதலியவைகளில் பதிவு செய்தும்; மெல்லிய தோல், அகலமான இலை முதலியவைகளில் எழுதி வந்ததாகவும், காணக் கிடைக்கின்றன.

இவைகளில் அன்று முதல் நிலையாக உள்ள சில சாசனங்கள், புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் மூலமாகக் கிடைத்துள்ள கல் வெட்டுகள், செப்பேடுகள், சுடப்பட்ட களிமண் ஏடுகள் முதலியனவையும் அரசினரால் பாதுகாக்கப் பட்டுள்ளன.

பிறநாடுகளில் மேற்கண்டவைகளில் எழுத்தமைப்பு இருந்த காலத்திலேயே நமது தமிழகத்தில் பனை ஓலை, சீதள ஓலை முதலியவைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டு அதற்கு மையிட்டு தைலம் தடவிப் பதப்படுத்தி பாதுகாத்து வந்ததாகத் தெரிகிறது.

இவ்வாறு எழுதப்பட்டவை எல்லாம் எல்லோருக்கும் பயன் பட வழியில்லாது செல்வச் சீமான்களுக்கு மட்டுமே பயன் பட்டுவந்திருக்கிறது. ஏழைகளுக்குப் பயன் படாது அரியனவாகியுள்ளது.

இதிலிருந்து நகல்கள் எடுப்பதில் பிழைகள் நேர்ந்து கருத்து மாற்றங்களும் குறைகளும் ஏற்பட்டு வரலாயின. மூலத்தில் உள்ளபடியே—ஒன்றிலிருந்து மூன்றாக பல பிரதிகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட நிலையில்தான் அச்சுத் தொழிலைப்

பற்றி பதிப்பிக்கும் முறையைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சிகள் நடைபெற்றன.

கி.பி. 6-ம் நூற்றாண்டில்தான் மரத்தில் செதுக்கப்பட்ட பிளாக்குகளைக் கொண்டு சீனர்கள் அச்சிட்டனர்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் ஜப்பானிலும் மர அச்சுக்களைக் கொண்டு புத்தகங்கள் சில பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஜப்பானிலும், சீனுவிலும் இவ்வித முறை பரவிய காலத்தில் அவ்விடங்களுக்கு யாத்திரீகர்களாக வந்திருந்த கிறித்துவப் பாதிரிகள் மரத்தில் பிளாக் செய்து கையால் அழுத்தி அச்சியற்றும் முறையைக் கற்றுச் சென்றனர்.

இவ்விதமாக ஐரோப்பாவில் இம் முறை பரவியது. ஐரோப்பாவில் இம் முறையில் விளையாட்டுச் சீட்டுகளும், மத சம்பந்தமான ஓவியங்களும் அச்சிட்டு விற்பனை செய்யப்பட்டன. மரத்திலேயே எழுத்துக்களை தனிவரிகளாக அமைத்து, அவைகளை ஒன்றுபடுத்தி மதசம்பந்தமான நூல்கள் சில பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பதிப்பிக்க திருகாணி உள்ள (Copying Prees) போன்ற ஒருவகை இயந்திரம் உபயோகித்துள்ளனர்.

சில நூற்றாண்டுகள் வரை இம்முறையிலேயே உலகின் பல நாடுகளிலும் அச்சுத் தொழில் நடைபெற்று வந்திருக்கிறது.

கி. பி. 15-ம் நூற்றாண்டில் தான் செர்மன் நாட்டினரான **'ஜான் கூட்டன் பர்க்'** என்பவர் தனித்தனி எழுத்துக்களை வார்த்தெடுத்து, அச்சிடும் முறையைக் கண்டுபிடித்திருக்கிருர். கூட்டன் பர்க் தான் கண்டுபிடித்த அச்சு எழுத்துக்களால் கிறித்துவமத ஏடுகள் பலவற்றைத் தனது கூட்டாளிகளின் துணைகொண்டு வெளியிட்டு வந்து, அதன் பின்னர் ஐரோப்பாக் கண்டத்தின் பல பகுதிகளிலும் அச்சகங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன.

கூட்டன் பர்க் கண்டுபிடித்த முறையில் திருகு ஆணி இயந்திரத்தால் கையினுல் முறுக்கி அழுத்தி பதிப்பித்த வகையில் சுமார் 250 நகல்களே அச்சிட முடிந்தது. அதையடுத்து **'ஸ்டான்ஹோப்'** என்பவர் அமைத்த ஒருவித இயந்திரத்தின் மூலம் முந்தியதைவிட ஓரளவு அதிகப் பிரதிகள் அச்சிடமுடிந்தது. பதிப்பும் சிறந்த முறையில் தெளிவாக இருந்திருக்கிறது.

அதன் பிறகே இயந்திர முறையில் அதிக கவனம் செலுத்தப்பட்டு படிப்படியாக பல மாறுதல்கள் கண்டுபிடிக்கப்பட்டு 19ம் நூற்றாண்டில் **'பிரடிக்கோனிஸ்'** என்பவரால் நீராவியால் இயங்கக் கூடிய இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இத்தகைய இயந்திரங்களைக் கொண்டு ஐரோப்பாவில் பல இடங்களிலும் அச்சகங்கள் அமைக்கப்பட்டதோடல்லாமல் **"லண்டன்**

டைம்ஸ்" என்ற பத்திரிகையும் பதிப்பிக்கப்பட்டது.

தமிழ் அச்சுக்கள்

தமிழகத்தில் அச்சகங்கள் ஏற்படுவதற்கு முன் மேலைநாடுகளில் தமிழ் நூல்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. கி.பி. 1686-ல் ஹாலந்தின் தலைநகர்மான **ஆம்ஸ்டர்டாம்** நகரில் மலையாளத்துத் தாவர நூல்கள் (Horti Indici Malabaici) என்னும் நூல் பதிப்பிக்கப்பட்டது. இந் நூலில் கூறப்பட்ட மரம் செடி கொடிகளின் பெயர்கள் மட்டும் தமிழிலேயே அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது இதற்கான தமிழ் எழுத்துக்களை அந் நாட்டவரே செய்துகொண்டதாகத் தெரிகிறது.

இந்தியாவில்

16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கோளத்திலுள்ள கொச்சியிலும், திருநெல்வேலியிலுள்ள பனிக் காயல் என்ற ஊரிலும், வைப்புக்கோட்டை, அம்பலக்காடு என்னுமிடங்களிலும் கிறிஸ்துவ மதப்பிரச்சாரகர்களால் அச்சகங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன.

திராவிடத்தில் அன்றிருந்த கிறித்து மத பிரச்சாரகர்கள் தங்களுடைய தலைமை நிலையத்தை மலபாரில் அமைத்துக்கொண்டிருந்தாலும், திராவிடத்தின் முதன் மொழி தமிழ் மொழியே என்று உணர்ந்திருந்தமையாலும்தான் தமிழ் நூல்களை முதலில் மலபாரிலிருந்தே வெளியிட்டதாகத் தெரிகிறது.

19-ம் நூற்றாண்டில் கி. பி. 1818-ல் வட நாட்டில் **சிராம்பூர்** என்னும் நகரில் **லார்டு ஹாஸ்டிங்ஸ்** என்பவரால் ஓர் அச்சகம் ஏற்பட்டு, சில நூல்களுள் **சமாசார் டர்பன்** எனும் பத்திரிகையும் வெளியிடப்பட்டன. இந்தியாவிலேயே இது தான் முதல் பத்திரிகை எனத் தெரிகிறது.

1831-ல் நம் தலைநகராகிய சென்னையில் **'தமிழ்ப் பத்திரிகை'** எனும் திங்களிதழ் முதல் தமிழ் வெளியீடாக பதிப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அக்காலத்தில் இந்தியர்கள் யாரும் அச்சியந்திரம் வைக்கக் கூடாதென்றிருந்த தடையின் காரணமாக மேற் கண்டவை யாவும் மேலை நாட்டவரின் மூலதனத்திலேயே அமைக்கப்பட்டு இயங்கியுள்ளன. 1935-ம் ஆண்டில் இந்தியர்களுக்கு இருந்த தடை நீக்கப்பட்ட பின்பே இந்தியர்களாலேயே இந்தியாவின் பல பகுதிகளிலும் அச்சகங்கள் தோற்றுவிக்கப்பட்டு, தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

இப்படியாக வளர்ந்து வந்துள்ள அச்சுக் கலை, இன்றைய எழுத்துலக சிற்பிகளின் சிந்தனையால் உருவாகும் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கான கல்வி, கலை, பண்பாடு, வளர்வதற்கான அறிவு ஆராய்ச்சிகளை ஏடுகளின் மூலம் பரப்புவதற்கு அரும் பணி புரிந்து வருகிறது.

ஜலதோஷம் தணிக்க வழி

ஹெச். பீட்டர்சன், ஆர். என்., ஆர். எம்.

எத்தனையோ தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஜல தோஷம் கண்டவுடன், அவற்றைத் தூக்கிக் கொண்டு என்னிடம் அலமலப்போடு வந்திருக்கிறார்கள். இந்த அக்கறை ஒரு விதத்தில் நல்லதுதான். சிலருக்கு இவ் விஷயத்தில் அலட்சிய புத்தி. இந்த அலட்சியம் உதவாது. ஜலதோஷம் ஆரோக்கியத்தைச் சீரழிக்க வல்லது. ஜலதோஷம் கண்டு அதனால் யாரும் உடனே இறந்துவிட மாட்டார்கள் என்பது உண்மைதான். ஆயினும் ஜலதோஷம் தானே என்று அலட்சியமாக இருப்பது கூடாது. சின்சன் என்பவர் என்ன சொல்லி யிருக்கிறார் தெரியுமா? "ஒருவர் வயது அவர் வாழ்ந்து கழித்த ஆண்டுகளைப் பொறுத்த விஷயம் அல்ல; அவருக்கு எத்தனை தடவை ஜலதோஷம் கண்டிருக்கிறது என்பதைப் பொறுத்தது" என்கிறார்.

சர்வசாதாரணமாகப் பரவலாக்க் காணப்படும் ஜல தோஷம் சாதாரண பெருக்காடி கொண்டு பார்க்க இயலாத வைரஸ் ஒன்றால் ஏற்படும் தொற்று வியாதி. மூச்சுப் பாதையின் மேல் பகுதியைக் குறிப்பாகப் பாதிக்கும் ஆற்றல் இந்த வைரஸுக்கு இருப்பது போல் தோன்றுகிறது. மூக்கு, தொண்டை இவற்றின் கோழைப் பலத்தின் மூலம் இது உள்ளே நுழைந்துவிடும். ஜல தோஷம் ஒரு கொடிய வியாதி அல்லதான். ஆயினும் இதனைத் தொடர்ந்து, ஆபத்தான நோய்களைப் பிறப்பிக்கும் நுண்ணங்களினால் உண்டாகும் நோய்த் தொற்று விளைகின்றது.

குளிர் காலத்தில்தான் ஜல தோஷம் சாதாரணமாகப் பிடிக்கும். கோடையிலும் இது ஏற படுவதுண்டு. உஷ்ணம் மிகுந்த வேளைகளில் நிறைய வியர்க்கும். அப்பொழுது சருமத்தில் உள்ள துவாரங்கள் வழியாக அழுக்கு வெளியேறும். இந்தத் துவாரங்கள் திறந்திருந்து, அவற்றின் மீது குளிர் காற்று பட்டால், ஜல தோஷம் உண்டாகக் கூடும். குளிர் காலத்தில் உடம்பை நன்றாக மூடிக் காக்காவிட்டாலும்

ஏற்படலாம். அதிலும் பாதங்களை ஈரமில்லாமலும் கதகதப்பாகவும் வைத்துக்கொள்ளாவிட்டால், ஜலதோஷம் உண்டாகிவிடும். சீதோஷ்ண நிலையால் மட்டும் இந்தத் தொல்லை ஏற்படும் என்பது கிடையாது. மற்றவர்களுக்குக் கண்டுள்ள ஜலதோஷம் நம்மையும் பற்றிக் கொள்ளலாம். இந்த வியாதியைச் சுமப்பவர்கள் மூலம் இது வரக் கூடும். இவர்களுக்கு ஜலதோஷம் இருக்காது. ஆனால் ஜலதோஷத்தைப் பிறப்பிக்கும் நுண்ணங்கள் இவர்களிடம் இருக்கும். சில்லென்றுள்ள தண்ணீரில் குளிப்பது, வேகமாக உலவும் காற்று, உறக்கமின்மை, பருவ காலத்துக்கு ஒவ்வாத உள்ளுடைகள், வாயால் மூச்சுவிடுவது—இவைகளும் ஜலதோஷம் ஏற்பட ஆஸ்பதமாய் அமைந்து விடும். அதிகக் குளிரும் அதிக உஷ்ணமும் தேகத்தின் எதிர்ப்புச் சக்தியைக் குறைத்துவிடுகின்றன.

பச்சைத் தண்ணீரில் தான் குளிக்கிறோம்'' என்று பலர் சொல்லுகிறார்கள் இதனால் ஜலதோஷத்தைத் தடுக்க முடியுமா? இம் முறையைச் சரியான படி அனுஷ்டித்தால், இரத்த ஓட்டம் இன்னும் நன்றாகி, தேகம் வலுப்பெற்று, ஜலதோஷம் வாராமல் இருக்கும் என்று பொதுப்படையாகச் சொல்லலாம். இரத்தம் இதனால் சருமத்துக்கு நிறைய வரும்; அதன் ஓட்டத்திலும் சீர்மையும் வேகமும் கூடிக்கொள்ளும்.

மூக்கு, தொண்டை இவற்றில் உள்ள குறைபாடுகளால் சிலருக்கு ஜலதோஷம் உண்டாகும். வாயைத் திறந்துகொண்டு, தூங்கும் குழந்தையைப் பார்த்திருக்கிறீர்களா? மூக்கில் அதற்கு ஏதோ அடைப்பு. அதனால்தான் இப்படி வாயைத் திறந்து கொண்டு, மூச்சுவிட வேண்டியுள்ளது. மூக்கடிச்சதைகளும் **(adenoids)** தொண்டைச்சதைகளும் **(tonsils)** இந் நிலைமைக்குக் காரணமாய் அமையும். இதன் விளைவாகக் குழந்தைகளுக்கு அடிக்கடி ஜலதோஷம் வரலாம். எனவே இத்தகைய குறைபாடுகளை நீக்கிச் சீருறுத்துவது என்றுமே சிறந்தது.

ஒருவரது மூச்சுப் பாதையில் காணும் வைரஸ் தொற்று மற்றவர்களுக்கு நேரடியாகவோ மறைமுக மாகவோ பரவலாம். ஜலதோஷம் உள்ள ஒருவர் மற்றொருவரிடம் பேசும் போது, இந்த ஜலதோஷம் எச்சில் மூலம், சளி மூலம் பரவக் கூடும். கவனக் குறைவோடு கழுவட்பட்ட கோப்பை, தட்டு இவற்றில் உண்பதாலும் அழுக்கான துணிகளையும் துவாலைகளையும் மேனி துவட்டவும் வேறு காரியத்துக்கும் உபயோகிப்பதாலும் ஜலதோஷம் பரவும். மறைமுகமாகப் பரவுவதற்கு ஓர் உதாரணம்.

ஜலதோஷம் ஆபத்தானது? சந்தேகம் இல்லாமல். இதனால் எத்தனையோ சிக்கல்கள் உண்டாகி, தேக நிலை மோசமாவதும் உண்டு. சிறப்பாக இது

சிறு குழந்தைகள் விஷயத்தில் மிகப் பொருந்தும். குழந்தைகளுக்குக் காணும் தீவிரமான நோய்த் தொற்றுகள் அனைத்தும் ஜலதோஷத்தின் அறிகுறியோடு தான் தொடங்கும். தட்டம்மை, கக்குவான் இருமல், தொண்டை அடைப்பான், செங்காய்ச்சல், சின்னம்மை, இன்புளுயன்சா, நிமோனியா—இவையெல்லாம் மூச்சு உறுப்புகளில் ஏதாவது கோளாறோடு தான் தொடங்குவது வழக்கம். குழந்தைக்கு ஜலதோஷம் வந்து மூக்கு ஒழுகினால், இது எதில் கொண்டு விடும் என்று முன்கூட்டியே சொல்லமுடியாது. ஜலதோஷத்தோடு இருமலும் சேர்ந்து கொண்டுவிட்டால், உடனே குழந்தைக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும்.

நோய் வந்து சிகிச்சை அளிப்பதைக் காட்டிலும் நோய் வராமல் தடுப்பது சாலச் சிறந்தது. குழந்தைகளின் பேரில் காற்று வேகமாகப் படக் கூடாது. குளிர் வாடை தீண்டாமல், கதகதப்பான நிலையில் அவர்களை வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் பாதம் ஈரமாகவே இருக்கலாகாது. குளிர்ச்சியான வேளைகளில் திறந்த வெளியில் அவர்கள் விளையாடும்போது, உடம்பு கதகதவென்று இருக்கும்படியாக உடை அணிவிக்க வேண்டும். இத்துடன் வெளியில் இருக்கும் பொழுதெல்லாம் அவர்கள் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டும். வீட்டில், வயது வந்தவர்களுக்கு ஜலதோஷம் கண்டிருந்தால் குழந்தைகளை அவர்களிடம் நெருங்கவிடக் கூடாது. சுற்றுப்புறத்தில் ஜலதோஷம் பரவலாகக் கண்டிருந்தால், இருமலும் தும்மலுமாக இருப்பவர்களுக்கு அருகில் குழந்தைகளைப் போக விடக்கூடாது.

"இந்த முன்னெச்சரிக்கைகள் எதற்கு? ஜலதோஷத்துக்கு வாக்சீன் ஒன்றும் கிடையாதா" என்று கேட்கலாம். இக் கேள்விக்குத் தெற்கு ஆசியாப் பகுதியில் கிடையாது என்பது தான் பதில். இத்தகைய வாக்சீன் எதுவும் சாதாரண உபயோகத்தில் இல்லை. ஒன்று செய்யலாம்: ஆரஞ்சு, எலுமிச்சை, நெல்லி, கொய்யா, மாம்பழம்—இவற்றை நிறைய உட்கொண்டு, எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக்கொள்ளலாம். நல்ல உறக்கமும் இவ் விஷயத்தில் பெரிதும் உதவும். படுத்து உறங்கும் அறை காற்றோட்டம் உள்ளதாக இருத்தல் மிக அவசியம்.

ஜலதோஷத்துக்குப் பின்னால் ஏற்படக் கூடிய கோளாறுகளை மட்டுப்படுத்த என்ன செய்வது? சிறப்பாகக் குழந்தைகள் விஷயத்தில் என்ன செய்ய வேண்டும்? குழந்தை தினமும் ஒழுங்காக வெளிக்குப் போகும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். நிறைய ஆரஞ்சுப்பழ ரசமும் தண்ணீரும் அதற்குக் குடிக்கத்தர வேண்டும். கொதி நீர் கொண்ட கெட்டிலை வைத்து, அறைக் காற்றை எப்பொழுதும்

கதகதப்பாகவும் ஈரப் பசை உள்ளதாகவும் இருக்கச் செய்யவேண்டும். இதை விடச் சிறந்தது, தினம் இரு முறை குழந்தை நீராவியை உட்கொள்வது. இதனை எப்படிச் செய்வது? கெட்டிலில் தண்ணீரை விட்டுக்காய்ச்சவும். தண்ணீர் சூடு ஏறி, ஆவி பறக்கத் துவங்கியதும் குழந்தையின் தலைமாட்டில் வைக்கவும். இதனால் அறைக் காற்றில் கதகதப்பும் ஈரப் பசையும் ஏறி, குழந்தையின் தொண்டைக்கு இதத்தை உண்டாக்கி, இருமல் வராமல் தடுக்கும். நீராவியைக் குழந்தையின் பேரில் நேராகப்படும்படி செய்யலாகாது. செய்தால் பிராணவாயுவை அது விரட்டிவிடும். அதனால் எதிர்ப்புச் சக்தி குழந்தைக்குக் குறையும். குழந்தைக்கு வியர்த்தால், வியர்வையைத் துடைத்துவிடவும். குளிர் காற்று மேனியில் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கதகதப்பான, ஈரம் தோய்ந்த சிறு துணியால் முகத்தையும் கழுத்தையும் மார்பையும் முதுகையும் அழுத்தித் துடைத்துவிட்டு, உடனே கர்ப்பூரத் தைலத்தை மார்பில் விரைவாகத் தேய்க்கவும். இந்தக் கர்ப்பூரத் தைலம் குழந்தையைக் காட்டிலும் தாய்க்கு அதிக நன்மை விளைக்கும் குழந்தைக்கு வியர்த்தால், குளிரோ, வேகமான காற்றோ அதன் மேனியில் படாமல் பாதுகாப்பது மிக மிக முக்கியம்.

(நல்வழி)

26. ஆண்டுகள்,

கருவில் உறங்கிய சிசு.

வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்த கிழவி ஒருத்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். டாக்டர்களின் ஊசி, மருந்துகளுக்கு அந்த வலி நிற்பதாக இல்லை. கிழவி துடியாய்த் துடித்தாள். வயிற்றில் கட்டியிருக்கலாமெனக் கருதி டாக்டர்கள் ஆப்பரேஷன் செய்தனர். வயிற்றில் கட்டியில்லை. கருப்பையில் ஏதோ ஒன்று முட்டை வடிவத்தில் உருவாகி யிருந்தது. அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அதைச் சோதனை செய்தார்கள். சந்தேகமில்லை கருதான்.

ஆனால் உயிரும் முழு உருவமும் இல்லாது, குழந்தை அமைப்பின் சாயலில் இருந்தது அந்தக் கரு.

26 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கிழவி கருவுற்றிருந்தாளாம். ஆனால் குழந்தை பெறவில்லையாம். அப்பொழுதிருந்தே இவளுக்கு லேசான வயிற்று வலி உண்டாம். அப்படியானால் இது 26 ஆண்டுகளுக்கு முன் உருவாகிய கருதான் என்று டாக்டர்கள் கருதுகின்றனர்.

26 ஆண்டுகள் கருவில் ஊறிக்கிடந்த இந்தச் சிசு மருத்துவக் கல்லூரியின் பரிசோதனைக் கூடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்.

மெத்த அபூர்வமான இந்தச் செய்தியைத் தந்தது ஹைதராபாத் மருத்துவமனை.

செய்திச் சுருள்

ஆடைகளுக்குப் பொன் முலாம்

நைலான் துணிகளுக்குப் பொன் முலாம் பூசும் முறையொன்றைப் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்து, அதற்குப் பேடண்ட் உரிமை பெற்றுள்ளனர்.

அண்டவெளி வீரர்களின் ஆடைகளுக்குப் பூசுவதற்காக கண்டு பிடிக்கப்பட்ட அம்முறையைப் பெண்டிரின் ஆடைகளுக்கு முலாம் பூசவும் பயன்படுத்தலாம்.

ராடார் கதிரலைக்கோட்டில் வேலை செய்பவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரு பொருளைக் கண்டு பிடிக்குமாறு பிரிட்டிஷ் விமானப் படை கேட்டபோது, தொடங்கப்பட்ட ஆராய்ச்சியினுல் மேற்சொன்ன முறைகண்டு பிடிக்கப்பட்டது.

* * *

திங்கட்கிழமைகளில் பட்டினி மக்களுக்குப் பிரதமர் வேண்டுகோள்

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை யன்று ஒருவேளை உணவைத் தியாகம் செய்து பட்டினி கிடக்கும்படி நாட்டு மக்களை பிரதம மந்திரி சாஸ்திரி சமீபத்தில் கேட்டுக் கொண்டார்.

இது குழந்தைகளுக்குப் பொருந்தாது என்று தெளிவுப் படுத்தினர்.

இதனுல் உணவு மிச்சப்படுவதுடன் மட்டுமல்லாமல் நாடு முழுவதிலுமுள்ள மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியையும் ஏற்படுத்தும் என்றார்.

* * *

தற்காப்புக்கு நாள்தோறும் மூன்று பைசா

ஒவ்வொரு இந்தியனும் நாளொன்றுக்கு 3 பைசா தற்காப்பு முயற்சிக்காகத் தருவதென கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டுமென்று பிரதம மந்திரி லால்பகதூர் சாஸ்திரி இன்று கேட்டுக் கொண்டார்.

“இந்தப் பணம் சேர்ந்தால், வருடத்துக்கு ரூ. 500 கோடி நாட்டின் தேசியப்பாதுகாப்பு நிதியில் திரண்டுவிடும். இது கடன் போல பாவிக்கப்பட்டு திருப்பித் தரப்படும்” என்று பிரதம மந்திரி தெரிவித்தார்.

பொதுக் கூட்டத்தில் அவர் இந்த யோசனையை வெளியிட்டார்.

* * *

துணிகட்டுபவர் காட்டிய துணிச்சல்!

இந்தியாவின் பிரதம மந்திரியும், தற்காப்பு மந்திரியும்

வேஷ்டி கட்டுகிறவர்களென்பதால், இந்தியா சண்டைபோட முடியாதென்று பாகிஸ்தான் நினைத்திருக்குமோவென்ற கேள்வியை தாமே எழுப்பித் திரு. லால்பகதூர் சாஸ்திரி அதற்கு அவுரங்காபாத் ஜில்லா பிரஜைகள் தற்காப்புச் சபையில் பதிலும் அளித்தார்.

"பாகிஸ்தான் ஒரு வேளை அப்படி நினைத்திருக்குமானல் அது தப்புக் கணக்குபோட்டு விட்டதென்பேன். நான் ஒன்றும் மார்ஷல் அல்ல. நான் வேஷ்டிதான் கட்டிக் கொள்கிறேன். தற்காப்பு மந்திரி சவானும் வேஷ்டிதான் கட்டிக் கொள்கிருர். நாங்கள் துணி கட்டிக் கொள்கிறவர்கள். தானே. எங்கு சண்டைப் போடப் போகிருர்களென்று பாகிஸ்தான் எண்ணிவிட்டதென்று தோன்றுகிறது. ஆனல் துணி கட்டிக் கொள்ளும் நாங்கள் லாகூருக்குள் வருவதென முடிவு செய்தோம்" என்று திரு சாஸ்திரி கூறினர்.

(பாகிஸ்தான் அதிபர் ராணுவ உடுப்பு போட்டுக் கொண்டு மார்ஷல் பட்டம் தரித்துக் கொண்டிருப்பதையும், தாங்கள் வேஷ்டி தரித்துக் கொண்டிருப்பதையும் பிரதமர் குறிப்பிடுகிருர்.)

*　　*　　*

50-வயதில் திருட்டுப்புத்தி

பிரிட்டனில் பெண்களுக்கு 50 வது வயது ஆபத்தான வயதாகும் என்று தேசிய மனநல சங்க அறிக்கையிலிருந்து தோன்றுகிறது.

கடைகளில் சாமான் வாங்குபவர்களைப் போல நடித்து பொருள்களை களவாடிச் செல்லும் பெண்களில் பெரும்பாலோர் 50 வயதைத் தாண்டியவர்களாக உள்ளனர் என்று மேற்படி சங்கம் கண்டறிந்துள்ளது.

வயதான பெண்களில் சிலர் 60 அல்லது அதற்கு மேற்பட்ட வயதில் குற்றம் செய்வதையே தொழிலாகவும் மேற்கொள்ள ஆரம்பிக்கின்றனர். கடைகளில் திருடுபவர்களில் 25 சதவிகிதத்தினர் முதல் தண்டனை பெற்ற பிறகும் அதே குற்றத்தைச் செய்து மாட்டிக் கொண்டதாகவும் தெரியவந்துள்ளது.

இளம் வயதுப் பெண்களைப் பொறுத்தவரையில் முதல் தடவையாகக் கடையில் திருடி தண்டனை பெறுபவர்கள் அபூர்வமாகவே மறுபடி அதில் ஈடுபடுகின்றனர். அவர்கள் பின்னர் ஈடுபடும் குற்றங்கள் குடிபோதை, விபசாரம் ஆகியவையாக உள்ளன. இவற்றுக்கும் மோசமாக கீழ் மட்டத்துக்கு இறங்கும் பெண்கள் விபசார விடுதி நடத்துவது அல்லது பண மோசடி ஆகிய குற்றங்களுக்காக கைதாகின்றனர்.

சிறுவயதில் சட்டத்தை மீறும் பெண்களை ஆராய்ந்ததில் அவர்கள் 25 வயதை எட்டியதும் ஒழுங்கான வாழ்க்கையை மேற்கொள்வதாகத் தெரியவந்தது. அவர்களில் ஏதோ ஒரு சிலர் தான் தொடர்ந்து குற்ற வாழ்க்கையில் ஈடுபடுகின்றனர்.

நமது குழந்தைகளும், காலமும்

எல். இவனேவா.

நமது இளம் சந்ததியினரை 21 வது நூற்றாண்டிற்கு ஏற்றவர்களாக வளர்ப்பதற்கென, சோவியத் யூனியனில் நடைபெற்றுவரும் விரிவான ஆராய்ச்சிகளையும், உணவியல் சோதனைகளையும் பற்றித் தெளிவாகக் கூறுகிறது இந்தக் கட்டுரை.

இன்றைய இளங்குருத்துக்களான குழந்தைகள் 21-வது நூற்றாண்டின் சந்ததியினராகத் திகழ்வர். அவர்கள் புது யுகத்தின் பிரஜைகளாக விளங்குவர். இப்புதிய யுகத்திற்கு அவர்களைத் தயார் செய்யும் பொருட்டு, நவீனக் கல்வி நமது குழந்தைகளின் மேல் பிரம்மாண்டமான பளுவைச் சுமத்தியுள்ளது. வயதில் மிகச் சிறியவர்களுக்கு நான்கு மணி நேரமும், சற்று பெரியவர்களுக்கு வீட்டு வேலைகளைத் தவிர 6 மணி நேரமும் கல்வி கற்பிக்கப்படுகிறது. இடை நிலையிலுள்ள ஒரு ஒரு சாதாரணக் குழந்தை ஒரு நாளைக்குப் பத்துப் பக்கம் கற்று அறிய வேண்டுமென்று (ஓராண்டிற்கு 2,800 பக்கங்கள்) எதிர்பார்க்கப்படுகிறது. 10 ஆண்டுகளில் இது 30,000 பக்கம் ஆகிறது. இதில் பெரும் பகுதியை மனப்பாடம் செய்ய வேண்டும். முதியவர்களின் வேலை நேரத்தைக் கட்டுப்படுத்த உள்ளன. ஆனல் மாணவனின் வேலை நேரமோ வரையற்றதாக உள்ளது. இந்தக் கல்விக் "கொடுங்கோன்மை"யில் நல்ல அம்சங்களும் இல்லாமல் இல்லை.

கற்றுக் கொள்ள வேண்டிய அளவு என்ன ?

மின் பொறி இயல், தானியங்கும் இயல், ராக்கெட்டு இயல், நவீன இரசாயனம், இவை ஏற்கனவே நம் வாழ்வின் முக்கிய பகுதிகள் ஆகிவிட்டன. மிக் விரிந்த கற்பனையாற் கூட யூகிக்க மட்டுமே முடியக் கூடிய பல விஷயங்கள், எதிர்காலச் சந்ததியினரை எதிர் நோக்கி நிற்கும். அறிவு உலகம் மேலும் மேலும் சிக்கலாகிக் கொண்டு போகும் போது, எதிர்காலப் பிரஜையாவதற்கு ஒரு குழந்தை எதைக் கற்றுக் கொள்ள வேண்டும்? எவ்வளவு கற்றுக் கொள்ள வேண்டும் ?

விஷயங்களை முறைப்படி கிரகித்துக் கொள்ளும் திறன், குழந்தைகளுக்கு 6 — 7 வயது ஆவதற்கு முன் தோன்றுவதில்லை என டாக்டர்களும் உளவியலாளர்களும் கூறுகின்றனர். அவனுக்குப் 17 வயது ஆகும் போது விஞ்ஞானத்தின் அடிப்படைகளைப் புரிந்து கொள்கிறான். அதற்குள் விஞ்ஞானம் வெகு தூரம் முன்னேறி விடுகிறது." பள்ளிக்கூடத்திலிருக்கும்போது நாம் நியூட்டனின் சக காலத்தவ

ராகி விடுகிறோம். ஐன்ஸ்டீனின் சக காலத்தவராக அல்ல" என்ற வாசகம் இன்றுள்ள நிலையைத் தெளிவாகக் காட்டுகிறது. இன்றையக் குழந்தைகள் எதிர் காலத்தின் பிரஜைகள். முன்னேறிவரும் இந்த விஞ்ஞான— கலாச்சார அலைகளுக்கு ஈடு கொடுக்க முடியுமா? நமது பள்ளி அறிவுக்கும், இன்றையத் தேவைகளுக்கும் இடையே உள்ள பெரும் பிளவு ஏற்கெனவே விரிவானதாக இல்லையா? பல நாடுகளையும் சேர்ந்த ஆசிரியர்கள் இப்பிரசனைகளை கண்டு திகில் அடைகின்றனர். இவற்றைச் சமாளிக்க முயற்சி செய்து வருகின்றனர்.

கல்வி பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்திருக்கிறது. எனவே கல்வி முறையிலும், போதிக்கும் பாடங்களிலும், முழுமையான சீர்திருத்தங்களைச் செய்யக் கல்வி இயலாளர்கள் தயங்குகின்றனர். ஆனால் கல்வி என்றுமே நிலையாக இருந்ததில்லை. விஞ்ஞானத்தில், பல மாறுதல்களும் புரட்சிகளும் ஏற்பட்டு விட்டன. ஆனால் அறிவை அதிகப் படுத்துவதற்கோ 'சேர்த்தல்' எனும் எளிய முறையே கையாளப்படுகிறது. இதன் விளைவாக அனேகமாக எல்லாத் தேசத்திலும் கல்விக்காலம் அதிகமாக்கப் பட்டுவிட்டது. பள்ளிக்கூடப் பாடத் திட்டங்களின் வளர்ச்சி, கிடைக்கும் காலத்தின் வளர்ச்சியைக் காட்டிலும் பன்மடங்கு பெருகி இருப்பதால் அளவு மீறிய சிரமம் ஏற்பட்டிருக்கிறது. குழந்தைகளின் ஞாபக சக்தியில், கோட்பாடுகளும், பரிசோதனைகளும், சூத்திரங்களும், பெயர்களும், சண்டைகளும், நகரங்களும், தேதிகளும் அளவுக்கு மீறித் திணிக்கப்பட்டு, அது வெடிக்கும் நிலையை அடைந்து விட்டது. அவற்றைக் கற்றுக்கொள்வதால் சக காலக் கண்டு பிடிப்புகளைப் பற்றிக் கற்றுக் கொள்ள நேரம் கிடைப்பதில்லை. பள்ளி அறிவு எனும் களஞ்சியத்தில் பல நூற்றாண்டுகளாகச் சேர்ந்துள்ள குப்பை கூளங்களை உடனடியாக அப்புறப் படுத்த வேண்டுமென்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் குப்பை எது? குழந்தைக்குத் தேவை இல்லாதது எது? பள்ளிக்கூட கால அட்டவணையைப் பற்றி இன்று நாம் பேசும்போது பள்ளி போதனையின் வரம்பை மீறிப் போய்விடுகிறோம்.

விஞ்ஞானத்தின் சவால்?

புதிய யுகத்தை நோக்கிய முன்னேற்றத்தில் தொழில் நுணுக்க வளர்ச்சி முக்கியமான அம்சமாக இருப்பதால், எது பொதுக் கல்வி என்பது பற்றிய நமது கருத்தும் மாறிக்கொண்டு வருகிறது. பௌதீகம், கணிதம், இவை சார்ந்த பாடங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமா? ஆனால் இந்தப் பாடங்கள் கூட, உயர்தரப் பள்ளி, அல்லது கல்லூரிகளின் கால அட்டவணைக்குள் அடக்க முடியாத

அளவில் விரிந்துள்ளன. எனில் நடைமுறையில் உபயோகமாகும் விஷயங்களைப் பற்றி மட்டும் சொல்லித்தர வேண்டுமா? அப்படியானால் அறிவு வாழ்வின் சாரமாகிய இலக்கியம், கலை, வரலாற்று அனுபவங்கள் இவற்றிற்கு எங்கே இடம்? மனிதனின் தனித்துவத்தை எது உயர்த்தும்? அழகை உணரவும், பாராட்டவும் மனிதனுக்குள்ள திறனை எது விரிவுபடுத்தும்? மனித உறவுகளைப் புனிதமான உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்த வல்லது எது? இவை இல்லாத எதிர்கால மனிதன், தொழில் நுணுக்கத்தின் அற்புதங்களால் சூழப்பட்டிருந்தாலுங்கூட மகிழ்ச்சியுடன் இருப்பானா? மாட்டான் என்பது தெளிவு.

இன்று நாட்டிலே நடைபெற்றுவரும் விரிவான சோதனைகளும், பத்திரிகைகளிலே நடைபெறும் விவாதங்களும் போதனை இயல் பேரவையால் அமைக்கப்பட்ட குழுவும், நமது உயர்தரக் கல்வியைச் சீர்திருத்துவதற்கான முயற்சியின் ஒரு பகுதியே. வெறும் கூட்டல் கழித்தல் மூலம் இப்பிரச்சனையைத் தீர்த்துவிட முடியாது. பள்ளி வாழ்விலே பண்பு ரீதியான ஒரு மாறுதல் ஏற்படவேண்டும். ஒரு குழந்தை எவ்வளவு கற்றுக்கொள்ள வேண்டுமென்ற பிரச்சனையைக் காட்டிலும், அதை எப்படி போதிப்பது என்ற பிரச்சனை பெரிதாகிவிட்டது.

சிந்திக்கக் கற்றுக் கொள்ளல்:

இப்பிரச்சனையிலும் வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. இயந்திரங்கள் மூலம் போதிக்க வேண்டுமெனச் சிலர் கூறுகிறார்கள். ஆனால் இயந்திரங்கள் எவ்வளவு உபயோகரமானவையாக இருந்தபோதிலுங்கூட அவை கற்றலுக்கு உபகரணங்களாகவே பயன்படும். நல்ல வேளையாக, குழந்தைகளின் உள்ளே, அறிவைத் திணிப்பதற்கு யாரும் இன்னும் ஒரு யந்திரத்தைக் கண்டு பிடிக்கவில்லை. ஒரு குழந்தை எவ்வளவு படிக்கிறது என்பது அல்ல பிரச்சனை. அது எவ்வளவு புரிந்து கொள்கிறது என்பதே பிரச்சனை. குழந்தையின் உள்ளத்தைச் செய்திகளால் நிரப்புவது குறிக்கோளாக இருக்கக் கூடாது. அதைப் பழக்குவதே குறிக்கோளாக இருக்கவேண்டும் உண்மைகளைத் தன்மயமாக்கிக் கொண்டு கருத்துக்களிடையே உள்ள தொடர்பை அறிந்து கொள்வதற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். ஆண்களும், பெண்களும் பள்ளிகளைவிட்டுச் சென்ற பின்னும், வாழ்நாள் முழுவதும் ஒரு சிருஷ்டி ஆர்வத்தை அவர்களுக்குள்ளே தூண்டுவது இந்தப் திறமையேயாகும். விரிவடைந்து கொண்டுவரும் அறிவுப் பிரச்சனையைச் சமாளிக்க இதுவே வழியாக இருக்கும்.

குழந்தையின் மூளையிலிருந்து சுமையை இறக்குவது மட்டும் அல்ல இன்றையப் பிரச்சனை. அதைச் சரியான வழியிலே

செலுத்துவதுமாகும். உளவிய லிலேயே ஞாபகசக்தி பற்றிய ஆராய்ச்சிதான் மிகவிரிவாகச் செய்யப்பட்டுள்ளது. அவற்றின் பல்வேறு வகைகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன. மனப்பாடம் செய் தல், நினைவிலிருத்தல், இவற் றின் முறையும், இயங்கு, இயங் காட் பண்புகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. பொது ஞாபக சக்திக்கும், விஷேச ஞாபக சக்திக்கும் இடையேயுள்ள தொடர்பு கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. அதைப் பழக்குவதற்கும், பராமரிப்பதற்குமான முறை களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சாதாரண மனிதர்கள் எண்ணு வதுபோல ஞாபக சக்தி என்பது இருளடைந்த ஒரு சேமிப்பு அறை அல்ல என்று விஞ்ஞானம் கூறுகிறது. அதற்குப் பயிற்சி அளித்து அதை வளர்க்கலாம். மனித மூளையின் பிரம்மாண்ட மான திறனை நாம் புத்திக்கூர்மை யுடன் உபயோகிக்க முயற்சிக்க வேண்டுமென்பதை இது தெளிவு படுத்துகிறது. நமது போதனு முறையைச் சீர்திருத்த இதுவே வழி என்று தோன்றுகிறது. ஒரு குழந்தையின் வயதுப் பண்பு களைத் துல்லியமாக அளிப்பதின் மூலம், அறிவை விரைவாகத் தன் மயமாக்கிக் கொள்ளும்படி செய்யலாம்.

சமீபகால சோதனைகள் :

எங்கள் பள்ளிக்கூட அறை களுக்குள் நுழைந்தால் அங்கு ஏழே வயதான சிறுர்கள் ஏ+பி =ஸி; பி+ஏ=ஸி; ஏ+பி= பி+ஏ; என்று எழுதிக் கொண் டிருப்பதைக்கண்டு நீங்கள் வியப் படைவீர்கள். அதிகமான அறிவு படைத்த குழந்தைகளின் வகுப்பு அல்ல இது. முதல் வகுப்பில் படிக்கும் குழந்தைகளுக்கு இவ் விதம் 'அல்ஜீப்ரா' குறியீடுகளை உபயோகிப்பது மிகவும் வேடிக் கையாக இருக்கிறது என்றும், பின்னர் இந்த எழுத்துக்களுக் குப் பதிலாக, எந்த எண்ணை உப யோகித்தாலும் இதே விதி பொருந்தும் என்று அவர்கள் புரிந்து கொள்வதாகவும் கூறப் படுகிறது. இவ்விதம் குழந்தை தனது ஏழாவது வயதில் எழுத் துக் குறியீடுகளையும், எளிய சமன்பாடுகளையும் புரிந்து கொள் கிறது. இவ்விதம் முதல் ஆண்டி லேயே 'அல்ஜீப்ரா'வை போதிக்க வேண்டுமென்பது பேராசிரியர் எல். ஷாங்கோவின் யோசனை களில் ஒன்று. சாதாரண ஆசிரி யர்களையும், மாணவர்களையும் கொண்டு இந்த முறை காலினின், த்யூலா, மாஸ்கோ முதலிய நகரங்களில் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. தி. எல்கோனின், வி. தேவிதோவ் இருவரும் கூட இதே துறையில் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

இவர்களது ஆராய்ச்சியைப் புரிந்து கொள்ள நாம் மற்றொரு விஷயத்தையும் கவனிக்க வேண் டும். இந்தப் பரிசோதனை வகுப்பு களில் உள்ள மாணவர்கள் சாதா ரண மாணவர்கள்தான் என்ரு லும் அவர்கள் தற்கால மாணவர் கள். அதாவது சற்று அதிகமான வளர்ச்சி அடைந்தவர்கள். நம்மில் சகிப்புத் தன்மையற்ற சிலர்து

வார்த்தையிலே சொன்னால் "பிஞ்சிலே பழுத்தவர்கள்" ரேடியோ, சினிமா, டெலிவிஷன், பலகாப்பட்ட இலக்கியங்கள் இவை நமது குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே கிடைப்பதால் அவை விவரம் தெரிந்தவைகளாக உள்ளன. பள்ளிக்குப் போவதற்கு முன்பே அனேக குழந்தைகள் படிக்க ஆரம்பித்து விடுகின்றன.

ஆனால் பள்ளிக்கூடத்திற்குச் சென்றவுடன் அவை மீண்டும் அ, ஆ விலிருந்து படிக்க வேண்டி இருக்கிறது. ஏனெனில், "குறிப்பிட்டவற்றிலிருந்து முழுமைக்கு", "உண்மைகளிலிருந்து பொதுமைக்கு" என்ற அடிப்படையிலே நமது பள்ளி போதனை முறை இருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியின் பல்வேறு நிலைகளையும் அவற்றின் கால முறைப்படி கற்றுக் கொடுக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். ஆனால் விஞ்ஞானத்தின் முக்கியமான கண்டுபிடிப்புகள் பழைய கோட்பாடுகளின் உச்சியிலே கட்டப்படுவதில்லை. பல சந்தர்ப்பங்களில் அவை விஞ்ஞான அறிவின் அமைப்பையே மாற்றி விடுகின்றன. எண்கள் பற்றிய தற்காலக் கருத்தும், லொபாசேவ்ஸ்கி-யின் ஜியோமிதியும், ஐன்ஸ்டீனின் சக்தி இயலும் அமேபிய எண்களுடனும், யூக்ளிடின் ஜியோமிதியுடனும் நியூடனின் சக்தி இயலுடனும் "சக வாழ்வு" வாழவில்லை. பின்னால் கூறப்பட்ட கருத்துக்கள் தங்கள் முக்கியத்துவத்தை இழந்து விட்டன. அவை கண்டு பிடிக்கப்பட்டபின் பல நூற்றாண்டுகள் வரை அவை அடிப்படையாக, முழுமையாக, பொதுமையாகத் திகழ்ந்தன. ஆனால் இன்றோ இவற்றிற்குக் குறிப்பிட்ட முக்கியத்துவமே உண்டு. ஒரு கோட்பாட்டுடன், மற்றொரு கோட்பாட்டைச் சேர்த்து யந்திர கதியிலே கணிதத்தைச் சொல்லிக் கொடுத்தால் அதைக் கற்கும் மாணவன் ஒரு காலத்தில், தனது பழைய கருத்துக்கள் அனைத்தையும் உடைத்தெறிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். சற்று உயர்வு நவிற்சியாகச் சொன்னால், நியூட்டன் சக்தி இயலின் வரம்பிற்குள் இருந்து மீறுவதற்கு ஐன்ஸ்டீன் எடுத்துக் கொண்ட முயற்சி மாணவனுக்குத் தேவைப்படும்.

நிபுணர்கள் கூற்று:

தி. எல்கோனின்-ம், வி. தேவிதோவ்-ம் தங்கள் சோதனைகளைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்கள்:

பள்ளிக்கூடங்களிலே நவீன அறிவைப் புகுத்த வேண்டுமானால், கற்றல் பற்றிய வேறொரு கொள்கை நமக்குத் தேவை. கல்வித் திட்டத்தைத் தயாரிப்பவர்கள், கருத்துணர்வின் தோற்றம் பற்றிய அறிவு-புலன் உணர்வுக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே திட்டமிடுகிறார்கள். குறிப்பிட்ட பண்புகள் பலவற்றை நீண்டகாலம் ஒப்பிட்டுப் பார்ப்பதின் மூலமே பொதுவான பண்பு

உணரப்படும் என்று அந்தக் கோட்பாடு கூறுகிறது. அதன் படி ஆரம்பப் பள்ளித் திட்டங்களிலே, முதலில் எண்கள், கணக்கு இவற்றின் குறிப்பிட்ட பண்புகளைக் கற்றல் முதல் இடம் பெறுகிறது. அதன்பின் (12 வது வயதில்) செய்கைகளின் விதிகளும், பொதுப் பண்புகளும் கற்பிக்கப்கப்படுகின்றன.

குறிப்பிட்டனவற்றிலிருந்து, முழுமையை நோக்கிச் செல்வதின் மூலமே, மலே அளவு உண்மைகளிலிருந்து கோட்பாட்டை நோக்கிச் செல்வதின் மூலமே, பொதுவாக மனித குலம் தனது அறிவைப் பெறுகிறது என்பது உண்மைதான். ஆனல் ஒரு முதியவரின் உதவியுடன், ஒரு குழந்தை கற்றுக் கொள்ளும் நிகழ்ச்சியையும் சிருஷ்டிகர்த்தாவான ஒரு விஞ்ஞானியின் சிந்தனை நிகழ்ச்சியையும், ஒத்தனவாகக் கருதக் கூடாது. மனிதகுலம் சேமித்து வைத்துள்ள கலாச்சாரத்தைக் குழந்தை தன் மயமாக்கிக் கொள்கிறது. இந்த நிகழ்ச்சியைக் கட்டுப்படுத்தும் விதிகள் வேருனவகையாக இருக்க வேண்டும். கல்வி போதிப்பதைப் பொருத்த மட்டில் பொதுமையிலிருந்து குறிப்பிடப் பட்டனவற்றை நோக்கிச் செல்லுதல் சாத்தியமே என்று எங்கள் ஆராய்ச்சியின் மூலம் தெரிய வருகிறது.

முதல் ஆண்டில் கணக்கும், ரஷ்யன் முறைப்படி கற்றுத் தரப்படுகின்றன, ஆரம்பத்திலிருந்தே கணக்கு, அல்ஜீப்ரா வின் அடிப்படையில், எழுத்துக் குறியீடுகளை அறிந்து கொண்டு, எளிய சமன்பாடுகளை விடுவிக்கக் கற்றுக் கொடுக்கும் அடிப்படையில் போதிக்கப்படுகிறது. இவ் விதம் கற்றுக் கொள்ளப்படும் "அல்ஜீப்ரா"க் கருத்துக்களை ஸ்தூலமாக விளக்கக் கணக்குகள் பயன்படுகின்றன. இவ்விதமாக பிற்காலத்தில் அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களுக்கு இன்றியமையாத தத்துவார்த்த சிந்தனைத்திறன் 7-11 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடம் தோன்றுகிறது.

இதுவரை அடைந்துள்ள சாதனைகள்

குழந்தையைச் சிந்திக்க வைக்கும் முறை மூலமே அதன் உளச் சக்தியை தூண்ட முடியும் என்பதை மேலே கண்ட, எல்கோனின், தேவிதோவின் கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன. அவர்களது கருத்துக்கள் தெளிவு பரிசோதனை மூலம் நிரூபிக்கப் பட்டுவிட்டன. இப்புதிய முறை மூலம், போதிக்கப்பட்ட குழந்தைகள் பழைய முறை மூலம் கற்றவர்களை விடச் சிறந்து விளங்குகிருர்கள். கூர்ந்து நோக்குவதற்கும், சிந்திப்பதிலும், பேசுவதிலும், ஞாபகம் வைத்துக் கொள்வதிலும் அவர்களுக்கு நல்ல திறமை இருக்கிறது. இன்று 4 ஆண்டுகளில் கற்றுத்தரப்படும் கணக்கை அவர்கள் மூன்று ஆண்டுகளிலேயே கற்று விடுகின்றனர்.

—சோவியத் சிறப்புக் கட்டுரை.

புகை பிடித்தால்

[கோவையார்]

நாளும் வளர்ந்து வரும் இந்நாகரீக நாளில் புகை பிடித்தலுக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. சிகரெட் பிடிக்கும் கலை எங்கே தோன்றியது? எப்படி வளர்ந்தது?

"சிகரெட் பிடித்தால் மூக்கை அறுப்போம்" என்று சட்டம் போட்ட நாடு எது?

"புகை பிடிப்பவர் வாயில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்" என்ற சட்டம் இருந்தது—எந்த நாட்டில்?

ஆயிரக்கணக்கானவர்கள் புகைபிடித்த "குற்றத்துக்காக" தூக்கில் போடப்பட்டனர்—எங்கே?

"உனக்கு சிகரெட் வேண்டுமா? சிம்மாதனம் வேண்டுமா?" என்று கேட்டபோது எனக்கு சிகரெட்தான் வேண்டும் என்று பட்டம் துறந்த இளவரசன் யார்?

புகைபிடித்தல் என்பது இன்றைக்கு நாகரீகச் சின்னங்களில் ஒன்றாகி விட்டது. எந்தப் பெரிய விருந்துகளிலும், வரவேற்புகளிலும் சிகரெட் தனியிடம் வகிக்கிறது. விருந்துக்கு முடிவில் சிகரெட் வழங்கப்படவில்லை என்றால் அந்த விருந்தே சோபை இழந்து விடுகிறது என்கின்றனர் பலர்!

சிகரெட்டைப் புகைத்து புகையை ஊதிக்கொண்டே பேசுவதில் சிலருக்கு ஒரு தனிமகிழ்ச்சி. திரைப்படங்களில் கூட கதாநாயகன் அதிக மகிழ்ச்சியுடன் இருந்தாலும் சரி, மிதமிஞ்சிய துக்கத்தில் ஆழ்ந்திருந்தாலும் சரி டைரக்டர் அவன் உதடுகளுக்கிடையே சிகரெட்டைத் திணித்து விடுகிறார்! அப்படியில்லாவிட்டால் அந்தக் காட்சி அவருக்குச் சுவையாக இருப்பதில்லையாம்!

ஆண்கள்தான் இப்படி என்றில்லை. பெண்களில் புகை பிடிப்போர் தொகை வேகமாகப் பெருகிவருகிறது! இன்னும் சில காலத்தில் ஆண்களையும் அவர்கள் மிஞ்சி விடுவார்கள் இந்தத் துறையில்!

புகைபிடிப்பதன் தீமைபற்றி எத்தனையோ எழுத்தாளர்கள் கைவலிக்க எழுதிவிட்டார்கள்! டாக்டர்களும், விஞ்ஞானிகளும் ஓயாது எச்சரிக்கை விடுக்கிறார்கள்! ஆனால் புகையின் மேல் மனித இனம் கொண்டுள்ள மோகம் மட்டும் குறையவேயில்லை!

பிரிட்டனில் இந்த ஆண்டு சுருட்டு விற்பனையானது அறுபது கோடியாக உயர்ந்துவிடும் என்று ஒரு அறிவிப்பு இப்போது வந்திருக்கிறது! சென்ற ஆண்டு விற்பனையைவிட இது நாற்பது சதவிகிதம் அதிகம்.

என்கிறார் ஒரு சுருட்டுத் தயாரிப்பாளர்!

சுருட்டு என்றதும் நமக்கு வின்ஸ்டன் சர்ச்சில் நினைவுக்கு வருகிறார் அல்லவா? அவரும் சுருட்டும் இணை பிரியாத நண்பர்கள்! ஆனால் ஸ்டாலினும் கூட நிறைய சுருட்டுப் பிடிக்கக் கூடியவர்தான். உலகின் மிகப் பெரிய ராஜதந்திரிகள், அரசியல்வாதிகள்,எழுத்தாளர்கள் எல்லோரையுமே இந்தப் புகைக்குடி ஆட்டிவைத்திருக்கிறது! ஆனால் பெர்னாட்ஷா மட்டும் இதனை வென்றவர்?

இந்தப் புகைபிடிக்கும் பழக்கம் எப்படி மக்களிடம் தோன்றியது? எப்போது தோன்றியது? இந்த ஆராய்ச்சியில் சுவையான சம்பவங்கள் நமக்குக் கிடைக்கின்றன! மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புகைபிடிக்கும் பழக்கம் இருந்துவந்ததாம்! மத்திய அமெரிக்காவில் வாழ்ந்து வந்த "மாயா" என்ற இனத்தவர்களிடமிருந்துதான் புகை பிடிக்கும் பழக்கமானது உலகம் முழுதும் பரவியது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

மாயா இனத்தவர்கள் சூரியனை வழிபடுகிறார்கள். நாம் எப்படி நமது தெய்வங்களுக்கு ஊதுபத்தியை வைத்து வணங்குகிறோமோ அதைப் போல அவர்கள் வாயிக் புகையிலைச் சுருட்டைக் கொளுத்தி புகை விடுவதை சூரியதேவனுக்குச் செய்யும் தீபாராதனையாகச் செய்துவந்தார்கள்! ஆனால் இப்படித் தீபாராதனை காட்டும் உரிமை அந்த இனத்தில் பூசாரிகளுக்கு மட்டுமே இருந்து வந்ததாம்! மற்றவர்கள் புகைத்தால் அது மிகப்பெரும் குற்றமாகக் கருதி, அவரைக் கொலை செய்து விடுவார்களாம்!

இந்தக் காட்டுவாசிகளிடமிருந்து இப்புகைபிடிக்கும் கலையான்து சிறுகச்சிறுக அமெரிக்காவின் வட பகுதிகளிலும் பரவியது. அங்கு வாழ்ந்த சிவப்பு இந்தியர்கள் புகைக்கும் பழக்கத்துக்கு விரைவில் அடிமையாகி விட்டார்கள். 1492-ம் ஆண்டில் கொலம்பஸ் அமெரிக்காவில் கால் வைத்தபோது, சிவப்பிந்தியர்கள் புகையிலையைப் பரிசாகக் கொடுத்துத்தான் அவரை வரவேற்றார்களாம்.

புகையிலையின் சுவையில் மயங்கிய கொலம்பஸ், அதனைப் பயிர் செய்ய ஊக்கமூட்டினான். அதிலிருந்து புகையிலையின் பெருமையும், புகைபிடிப்பதில் உள்ள சுவையும் உலகம் முழுதும் வேகமாகப் பரவியது!

இன்றைக்கு கனடா நாட்டில் பாதிப்பேர் புகை பிடிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று கூறுகிறது, அண்மையில் எடுத்த ஒரு கணக்கு! அவர்களில் ஆண்கள் 56 சதவிகிதம்; பெண்கள் 32 சதவிகிதம்! கனடிய மக்களின் அன்றாட சாதாரணப் பழக்கங்களில் புகை பிடித்தலும் ஒன்று என்பது அம்மக்களின் நம்பிக்கை.

புகைபிடிக்கும் பழக்கம் எத்தனை வேகமாகப் பரவியதோ

அந்த அளவு அதன் தீமைபற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. இனிமையான அந்தப் போதை மயக்கத்தில் ஆழ்ந்து கிடப்பவர்களுக்கு இந்த எதிர்ப்புப் பிரசாரம் எங்கே கேட்கப் போகிறது?

சிகரெட் பிடித்தால் அவர்களை கைதுசெய்யும்படி சமீபத்தில் அமெரிக்காவில் ஒரு மாநில அரசு போலீசாருக்கு அதிகாரம் வழங்கியது! கைதுசெய்யப் படுபவர்களுக்குத் தண்டனை வழங்குவதோடு, புகைபிடிப்பதால் ஏற்படும் தீமைகளை விளக்க சொற்பொழிவுகளும், திரைப்படங்களும் போட்டுக் காட்டுகிறார்களாம் அரசாங்கத்தார்.

இஸ்லாமிய சட்டப்படி புகைபிடித்தல் பெருங்குற்றம் இப்பொழுதும் இஸ்லாமிய நாடுகளில் புகைக்குடி தடைசெய்யப்பட்டிருக்கிறது! மலேயாவில் கெலாண்டான் இளவரசர் ஒருவர் புகைபிடிப்பதைத் தன்னால் நிறுத்த முடியாது என்று கூறியதால் 1956-ம் ஆண்டு தம் இளவரசர் பட்டத்தைத் துறக்கவேண்டியதாயிற்று! காதலுக்காக முடி துறந்த வேல்ஸ் இளவரசர் இவரைக் காட்டிலும் ஆயிரம் மடங்குமேல் இல்லையா?

அமெரிக்காவில் டகோடா மாநில சட்டமன்றம், சுமார் ஐந்து ஆண்டுகளுக்குமுன் ஒரு தீர்மானத்தைப் பற்றி விவாதித்தது. சிகரெட் பிடிப்பதன் தீமை பற்றி மக்களுக்கு எச்சரிக்க அரசாங்கம் சிகரெட் வரி முத்திரையில் இரண்டு எலும்புகளும் ஒரு மண்டையோடும் (நஞ்சு எனக் காட்டுவது) சின்னமாகக் குறிப்பிடவேண்டும் என்றது அத்தீர்மானம்.

இதனைக் கொண்டுவந்தவர் மிகப் பெரும் குடிகாரர். "அதனை என்னால் நிறுத்த முடியவில்லை; ஆனாலும் அதன் தீமைகளை நான் உணர்ந்திருக்கிறேன்" என்றார், அவர் தன் தீர்மானத்தின் மீது பேசுகையில்.

முன் காலத்தில் புகைபிடிப்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. 17-ம் நூற்றாண்டில் துருக்கியை ஆண்ட மன்னன் புகைக்குடியர்களுக்கு தூக்குதண்டனை விதித்தான்! புகைக்குடி மண்டபங்கள் பல அன்று துருக்கியில் இருந்தன. அவைகளை அவன் தீக்கிரையாக்கினான்! பல்லாயிரக் கணக்கானவர்கள் இதனால் தூக்குத் தண்டனை பெற்றனர்; அவர்கள் சொத்துக்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன!

புகைபிடிப்பவர்களுக்கு விடுதிகளில் உணவளிக்கக் கூடாது என்று ஸ்விட்சர்லாந்து ஒரு சட்டத்தை 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிறைவேற்றியது. புகைபிடிப்பவர்களை நாடுகடத்தவும் அச்சட்டம் வகை செய்தது!

—"முத்தாரம்"

டாக்டர் அன்னிபெஸண்ட்

உலகில் நகரங்களில் பெரியது லண்டன். அதன் மேயராகவும் பார்லிமெண்ட் உறுப்பினராகவும் இருப்பது பெரிய பதவி. அந்த குடும்பத்தில் மற்றொருவர் இங்கிலாந்தின் சட்ட மந்திரியாகவும் இருந்தாரென்றால், அக்குடும்பத்தின் சிறப்புக்கு வேறு சான்று எதற்கு! அந்தப் பரம்பரையில் அயர்லாந்தில் பிறந்து வைத்திய பட்டம் பெற்று வாணிபம் செய்து வந்த டபிள்யூ டி. பி. உட் என்பவருக்கு 1847ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி இரண்டாவது குழந்தையாகப் பிறந்தார், ஆனி உட்.

இளமையில்

இளமையில் தந்தை காலமானார். பின்னர் உடன்பிறந்தான் மரித்தான். இழந்தலை பட்டதாய் ஒரு பிள்ளையை நன்கு படிக்க வைக்கவேண்டுமென்று சுமார் பத்து வருஷகாலம் ஹரோ பள்ளி மாணவர்கட்கு தன் வீட்டில் உணவு அளித்து அவ்வருவாயைக் கொண்டு காலம் தள்ளினள். புகழ் பெற்ற நாவலாசிரியான கேப்டன் மாரியட்டின் சகோதரி மிஸ் மாரியட் அன்னிஉட் தன்னிடம் வந்து தங்கிப் படிக்க விடும்படி கேட்க தாய் இணங்கி ஏழாண்டு காலம் அவ்வம்மையுடன் விட்டுவைத்தார். பொருட் செல்வமும், அருட் செல்வமும் ஒருங்கே பெற்றிருந்த மேரியட் நல்ல ஆசிரியை. பாரிஸ் நகரத்துக்கும் அன்னியை அழைத்துப் போய் ஏழு மாதம் தங்கி புகழ் பெற்ற இடங்களைக் காட்டினார். சங்கீதம் பயிற்றினார். மத நூல்களைப் படிப்பித்தார்.

மண வாழ்வு

அன்னிக்கு இருபதாம் வயதில் பிராங்க் பெஸண்ட் என்கிற கேம்பிரிட்ஜ் பட்டம் பெற்ற பாதிரியுடன் நட்பு ஏற்பட்டது. பாதிரியாரின் மனைவி ஆனால் பிறருக்கு தொண்டு செய்யும் வாய்ப்புகள் நிறைய உண்டாகும் என்று கருதி, அவரை மணந்து கொண்டார். இருவருக்கும் கருத்து ஒருமிக்க இல்லை. குடும்பத்தில் இன்பம் இல்லாமல்போகவே அதை மறக்க சிறு கதைகள், நவீனங்கள், பெரியார் வரலாற்று வியாசங்களை எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பினார். அதனால் பணம் கிடைக்கவே எழுத்தாளராகவும் சம்பாதிப்பவராகவும் பெருமை அடைந்தார். கடவுளுக்கு நன்றி செலுத்தினார். ஒரு ஆண் மகவும், பிறகு ஒன்றரை ஆண்டில் ஒரு பெண் மகவும் பிறந்தன. கைக்குழந்தைக்கு நோய் கண்டது. தாய்க்கும் நோய் கண்டது. அக்கம்பக்கத்தில் ஏழைகள் அவதிப்பட்டார்கள். இதை எல்லாம் பார்த்து கடவுள் ஒருவர் உண்டா என்று ஐயப்படலானார். பிறர் துன்பம் கண்டு உருகலானார்.

ஏ. டி. கிருஷ்ணமாச்சாரி
பி. ஏ. பி. எல்,

கணவரிடமிருந்து பிரிந்து

செல்வந்தரான உறவினரின் உதவியால் நல்ல வருவாயுள்ள

மாதாகோவிலுக்குப் பாதிரியாக கணவருக்கு வேலை தேடிக் கொண்டு, அங்கு சென்று வாழ்ந்தார். அவ்வூரில் அனைவரும் ஏழைக் குடியானவர்கள். டைபாய்டும் சுரம் பரவின போது அன்னி பெசன்ட் மக்களுக்கு தொண்டு செய்தார். வைதிக சம்பிரதாயங்களைக் கைவிட்ட சிலர் அறிமுகம் அன்னிக்கு ஏற்பட்டது. அதை வெறுத்த வைதிகர்கள் கணவரிடம் கோள்சொன்னார்கள். அவர் கோபம் அடைந்து மனைவியை வெறுத்து ஒதுக்கு முன், ஒரு நாள் அன்னி கோவிலுக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு, முதல் முறையாக சொற்பொழிவு ஆற்றினார். குரலும், சொல் ஆட்சியும் நன்றாக இருந்தது. கணவரைப் பிரிந்து லண்டன் சென்றார். தாயார் சொல்லியும் கணவனிடம் சென்று வாழ மறுத்து விட்டார்.

சமய வாழ்வு

கான்வே தம்பதிகள் அமெரிக்கர்கள். தனவந்தர்கள். சம்பிரதாய கருத்து வேற்றுமையால் கணவனைப் பிரிந்த அன்னி பெசண்டுக்கும் அவர் மகளுக்கும் புகலிடம் தந்து ஆதரித்தார்கள். இத்தோடு அவர் குடும்ப வாழ்க்கை அஸ்தமித்தது. பொது வாழ்க்கை மலர்ந்தது. தையல் வேலை, சமையல் வேலை இப்படிப்பல விகிதத்தில் உழைத்தார். பெற்ற தாயும் காலமானார். கிறிஸ்துவ சமயத்தைக் கண்டித்து சில சிறு நூல்கள் எழுதினார். கடவுள் நம்பிக்கையையும் கை விட்டார். கிறிஸ்துவ சமயத்தை கைவிட்ட சார்லஸ் பிராட்லாவுடன் சேர்ந்தார். அவர் நடத்திய நேஷனல் ரிபார்மர் பத்திரிகையில் எழுதலானார். வாரம் ஒரு கினி (21 ஷில்லிங்) சன்மானம். பிராட்லா ஆயுள்பூராவும் அன்னி பெசன்ட் அப்பத்திரிகையில் எழுதி வந்தார்.

எழுத்தும் பேச்சும்

பிராட்லா பார்லிமெண்ட் தேர்தலில் அன்னி பெசன்ட் மிகவும் உழைத்தார். மாதத்தில் இருபது நாள் சொற்பொழிவுதான். எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் ஏராளமாகப் பொருள் ஈட்டினார். ஈட்டின பொருளை மகள் கல்விக்கு தாராளமாகச் செலவிட்டார். கிறிஸ்துவ சமய பழக்கங்களை எதிர்த்த போதிலும், மக்கள் சத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; தூயவாழ்க்கை நடத்த வேண்டும் என்று எழுதியும் பேசியும் வந்தார். குடியானவர்களின் கஷ்டங்களை நீக்க நிலச்சட்ட சீர்திருத்தம் வேண்டும் என்றார். தொழிலாளர் நலன், பெண் உரிமை, இலவசக் கல்வி (ஏழை மாணவருக்கு இலவச உணவு) இவற்றிற்காக போராடினார். அமெரிக்க மருத்துவர் நோல்டன் என்பவர் 40 ஆண்டுகட்கு முன் எழுதின குடும்பக் கட்டுபாடு நூலை 1876ம் ஆண்டு போலீசார் தடை செய்ததை மீறி தாமே

வெளியிட்டு தண்டனை பெற்று, அப்பீல் கோர்ட்டில் வெற்றி பெற்றார். 1878-ம் ஆண்டில் 'இங்கிலாந்தும், இந்தியாவும் ஆப்கானிஸ்தானமும்' என்னொரு சிறு நூல் எழுதினார். மறு வருஷம் லண்டன் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறினார். மேலும் படித்து லண்டன் பல்கலைக் கழகத்தின் முதல் பரீட்சையில் தாவர இயல் பி. எஸ்சி. பட்டம் பெற்றார். மாலை நேர வகுப்புகளில் ஆசிரியர் ஆனார். தொழிலாளர் வீடுகளுக்குச் சென்று தாம் கண்டவற்றை அப்படியே பத்திரிகைகளில் எழுதினார். பசித்த குழந்தைகள் அழுகையையும், உழைத்து ஓடாய்ப் போன தாய்மார்களின் பெருமூச்சையும் கண்டார். சோஷலிஸ்டாக மாறினார். பிராட்லாவை விட்டு டபிள்யூ.டி. ஸ்டெட் என்ற பிரபல பத்திராதிபருடன் சேர்ந்து கூலி உயர்வு, குழந்தைகளைக் காப்பாற்றல், வாடகைக் கட்டுப்பாடு இவற்றை வற்புறுத்தினார். தீப்பெட்டி தொழிற்சாலை (பெண்) தொழிலாளர் சங்கம் நிறுவினார்.

பிரம்மஞான சங்கத்தில்

பிரம்மஞான சங்கத் தலைவர் பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதின புஸ்தகத்துக்கு மதிப்புரை எழுதுமாறு டபிள்யூ. டி. ஸ்டெட் பணித்தார். அதைப் படித்து நூல் ஆசிரியரை நேரில் கண்டு, பரவசமாகி பிரம்மஞான சங்கத்தில் சேர்ந்து விட்டார். மக்கள் தொண்டு தான் மாதவன் தொண்டு என்று துணிந்தார். தன் சொந்த வீட்டையே பிரம்மஞான சங்கத்துக்கு எழுதி வைத்தார். மறு வருஷம் அன்னி பெசண்டின் புதல்வனும், புதல்வியும் வயது வந்த தாயுடன் வந்து சேர்ந்தனர். இருவரும் பிரம்மஞான சங்கத்தில் சேர்ந்தார்கள். மறு வருஷம் நியூயார்க்கில் நடந்த பிரம்மஞான சபைக்குச் சென்று பல சொற்பொழிவுகள் ஆற்றினார். பிளாவட்ஸ்கி அம்மையார் காலமானார். ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் பிரம்மஞான சங்கம் இவரிடம் ஒப்படைக்கப் பட்டது. சிகாகோவில் நடைபெற்ற உலக சமயங்கள் பார்லிமெண்டில் சுவாமி விவேகானந்தரோடு அன்னிபெசண்டும் சென்று பேசினார். சுய சரிதம் எழுதி முடித்தார். இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார்.

இந்தியாவை தாயகமாக ஏற்று, வெள்ளைச்சேலை அணிந்து இந்தியர் போலவே தரையில் உட்கார்ந்து, இலை போட்டுக் கையால் பிசைந்து சாப்பிடுவதும், புண்ய ஸ்தலங்கள் தோறும் சென்று பிரபல பண்டிதர்களைத் தரிசித்து நம் பழம்பெரும் நூல்களைத் திரட்டி அச்சிட்டு வெளியிடலானார். காசியில் "சாந்தி குஞ்சு" என்றொரு வீடு கட்டிக் கொண்டு பாபு பகவான்தாஸ் துணைகொண்டு சம்ஸ்கிருத நூல்களை மொழிபெயர்த்தார். பகவத் கீதைக்கு அன்னி

பெசண்டு இயற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பு பல லட்சம் பிரதிகள் விற்றது. இந்திய மாணவர்கள் தமது சமயக் கொள்கைகளை மறந்து, மேனாட்டு நாகரிகத்தில் மயங்குவதைத் தடுக்க காசியில் செண்டிரல் இந்து காலேஜ் நிறுவினார். காசி மகாராஜா நிலம் வழங்கி, பல கட்டிடங்களையும் கட்டித் தந்தார். இந்து மதம், சம்ஸ்கிருதம் இரண்டும் இங்கு கட்டாயப் பாடம். இந்தியாவின் மூலைமுடுக்குகளிலிருந்தெல்லாம் மாணவர்கள்வந்தார்கள். ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இக்காலேஜுக்கு விஜயம் செய்தார். அதுதான் இப்போது பண்டித மதன் மோகன் மாளவியாவினால் காசி சர்வகலாசாலை ஆயிற்று.

சமூக சேவை

பெண்களுக்கென்று செண்டிரல் இந்து பெண் பாடசாலை ஏற்படுத்தினர். ஆண்களைப் போலல்லாமல் பிற்காலத்தில் நல்ல பெண்டிராகவும், தாய்மாராகவும் விளங்குவதற்காக பெண்களுக்கு சுகாதாரம், சமையற்கலை, லகு மருத்துவம், தையல் வேலை, சங்கீதம் இவற்றைக் கட்டாய பாடமாக வைத்தார். தாழ்த்தப்பட்ட ஹரிஜனங்களுக்குப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தினர். போகப் போக நாடு முழுவதும் இது போன்ற பள்ளிகளை நிறுவினர். கல்விக்கு அன்னி பெசன்ட் செய்த சேவைகளைப் பாராட்டுவதற்கே காசி சர்வகலாசாலை அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி கவுரவம் பெற்றது. ஹரிஜனப் பள்ளிக்கூடத்தில் காலை வந்தவுடன் குளிக்கவேண்டும். கட்டி வந்த உடையைத் துவைத்து உலர்த்திவிட்டு பள்ளிக்கூட உடையை அணியவேண்டும். மாலை உலர்ந்த துணியை அணிந்துகொண்டு பள்ளி உடையைத் துவைத்து உலர்த்திவிட்டுப் போக வேண்டும்; இதனால் அச்சிறுவர்கள் தூய்மையாக இருக்கப் பழகிக் கொண்டுவிட்டார்கள்.

அரசியல் வாழ்வு

சமூகச் சீர்திருத்தவாதியான அன்னி பெசண்டுக்கு இந்தியாவின் அரசியல் வாழ்க்கையில் அக்கறை உண்டாயிற்று. ஆளுவோர்கள், பிரஜைகளை நன்றாக நடத்தவில்லை என்று உணர்ந்து

அன்னி பெசண்டுக்கு இந்தியாவின் அரசியல் வாழ்க்கையில் அக்கறை உண்டாயிற்று. ஆளுவோர்கள் பிரஜைகளை நன்றாக நடத்தவில்லை என்று உணர்ந்தார். விடுதலையும் பெற்று பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பிற நாடுகளுடன் சரிநிகர் சமானமாக இந்தியா வாழ வேண்டும் என்று விரும்பினர். அதற்காக ஹோம் ரூல் லீக் ஏற்படுத்தினர். அதன் கொள்கைகளைப் பரப்புவதற்காக காமன்வீல் என்ற மாதமிருமுறை பத்திரிகையும் நியூ இந்தியா என்ற தினப் பத்திரிகையும் ஆரம்பித்தார். இளைஞர்களைத் திரட்டி, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக ஒய். எம். ஐ. ஏ. யங் மென்ஸ் இந்தியன் அஸோஸி

யேஷன் ஒன்றை நிறுவி நூறு மாணவர்கள் தங்கவும், உணவு அருந்தவும் தக்கதாக கோகலே மண்டபத்தைக்கட்டி சாசுவதமாக என்றென்றும் நிலை பெற்றிருக்குமாறு பிரதம நீதிபதி ஸர். சுப்ரமணியய்யரை தலைவராகக் கொண்ட நிருவாகக் குழுவிடம் ஒப்படைத்தார்.

ஹோம் ரூல் இயக்கம்

அடுத்த ஆண்டு (1916–ல்). கடலூரில் கூடிய அரசியல் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கி ஹோம் ரூல் சட்டமே கொண்டு வரப் போவதாக ஆவேசமாகப் பேசினார். அவ்வுரையை வெளியிட்டும் ஆதரித்தும் எழுதின நியூ இந்தியா பத்திரிகை ஜாமீன் பல முறைபறிபோயிற்று. கடைசியாக 1917-ல் உதக மண்டலத்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். சாரணர் படை ஒன்று மதனபல்லி காலேஜில் அமைந்ததற்கு பேடன் பவல் அங்கீகாரம் தர மறுத்தாரென்று இந்திய சாரணர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். பின்னர் அதே பேடன் பவல் இந்தியாவுக்கு வந்து பார்த்து, மகிழ்ந்து அங்கீகரித்து தம் இயக்கத்தோடு இணைத்து அன்னி பெசண்டையே தலைவர் ஆக்கிச் சென்றார்.

காங்கிரஸ் அக்கிராசனர்

அதே ஆண்டு டிசம்பர் மாதம் கல்கத்தாவில் கூடின காங்கிரஸ் மகா சபைக்கு அக்கிராசனம் வகித்து வீரக்கனல் தெறிக்கும் சொற் பொழிவாற்றித் தமது புகழைவானோங்கச் செய்ததுடன் நாடு முழுவதும் சூறுவளிச் சுற்றுப் பயணம் செய்து மக்களைத் தட்டி எழுப்பி எங்கு சென்றாலும், இவரை ஒரு அவதாரம் என்றே மக்கள் கருதும்படி நடந்து கொண்டார். மது அருந்தமாட்டார். புகையிலை பிடிக்காது. சைவ உணவுதான். பின்னால் காந்திஜியின் செல்வாக்கு வந்த பின் காந்தி குல்லாய் வந்ததுபோல் இவர் தலைவராயிருந்தபோது அடையாறு ஜிப்பா, ஒரு சீருடையாக ஏற்பட்டு இன்னும்வழக்கில் இருந்து வருகிறது. மதராஸ் பார்லிமெண்ட் என்றொரு ஸ்தாபனம் நிறுவி அதில் ஹோம் ரூல் ஆப் இண்டியா மசோதாவை தாக்கல் செய்து ஒவ்வொரு ஷரத்தாக விவாதித்து நிறைவேற்றினார். அதை எடுத்துக்கொண்டு இங்கிலாந்து சென்று தம் நாவன்மையாலும் எழுத்துவன்மையாலும் பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையினரின் ஆர்வத்தை, கிளப்பி மசோதாவை தாக்கல் செய்து, இரண்டுமுறை விவாதம் பண்ணி நிறைவேற்றினார்.

சொல் ஆற்றல்

1924-ம் ஆண்டோடு அன்னி பெசண்டின் பொது வாழ்வு பொன் விழா கண்டது. லண்டன் நகரில் குவீன்ஸ் ஹால்மண்டபத்தில் பலதிறப்பட்டவர்கள் கூடி சொல்மாலைகள் அணிவித்துப் பாராட்டினார்கள். அதே ஆண்டு கல்கத்தா பல்கலைக்

கழகத்தில் சர் ஆஷுதோஷ் முகர்ஜி தம் மகள் கமலாவின் நினைவுச் சின்னமாக ஏற்படுத்தி ஆண்டுதோறும் ஒரு உலகமேதை ஒருவரால் ஆற்றப்படும் கமலா சொற்பொழிவை ஆற்றும் கவுரவம், இவருக்கு அளிக்கப்பட்டது. சொற்பொழிவு ஆற்றும் திறமையில் இங்கிலாந்திலாகட்டும்; வேறெந்த நாட்டில் தானாகட்டும் அன்னி பெசண்டுக்கு ஈடும் எடுப்பும் இல்லை என்று பேர் பெற்றார். கேட்டாரைப் பிணிக்கவும் கேளாதார் வேட்பவும் அமைவதாம் சொல் என்ற வள்ளுவர் குறளுக்கு இவரே இலக்கணம். சர்வகட்சி மகாநாடு கூட்டினார். லண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மகாநாடுகளில் கலந்து கொண்டார். மகாத்மா காந்தியை மிகவும் போற்றினார். அவருடைய சத்தியாக்கிரகம் இயக்கங்கள் பிடிக்காமல் ஒதுங்கி விட்டார்.

இந்திய வாழ்வு

நாற்பதாண்டுகள் இந்தியாவில் வாழ்ந்தார். இந்தியாவின் பண்டைய நாகரிகம், கல்வி, கலை ஒவ்வொன்றையும் அகழ்ந்து கண்டெடுத்து மெருகிட்டு அவற்றைப் போற்றி பேணிக் காப்பதற்காகவே இளந் தலைமுறையினர் சிலரை நியமித்து அதை அவரவர்களிடம் ஒப்புவித்து. அவை யாவும் நாளொரு மேனியும், பொழுது ஒரு வண்ணமுமாக உயர்ந்து ஓங்கி தழைப்பது கண்டு இன்புற்றார். உலகை உய்விக்க ஒரு மகான் அவதரிக்கப் போகிறார் என்று நம்பினார். இக்கருத்துக்களைப் பரப்புவதற்கு அவர் சிஷ்யகோடிகளுக்கு அமெரிக்காவில் ஒருகுடியேற்ற நாடும் அமைக்க விரும்பினார். இக்கருத்துக்களைப் பரப்புவதற்கு இருபத்தோரு நாட்களில் பதின்மூன்று நாடுகளில் ஐம்பத்தாறு சொற்பொழிவுகள் ஆற்றி ஐரோப்பா முழுதும் அந்நாளிலேயே ஆகாய விமானப் பயணம் மேற்கொண்டார். இந்திய மாதர் சங்கத்தின் முதல் தலைவி இவரே.

நன்கொடை

1933-ம் ஆண்டு எண்பத்தேழாம் வயதில் அடையாறு பிரம்ம ஞான சங்கத்தில் இயற்கை எய்தின அன்னி பெசண்டு அம்மையார் விட்டுப்போன நன்கொடைகள் எண்ணிலடங்கா. அடையாறு லைப்ரரி, ஆல்காட் தோட்டம். கலாக்ஷேத்திரா, ஒய்.எம்.ஐ.ஏ. என்பவை இன்று போல் என்றும் நிலைத்து நின்று வருங்கால சந்ததிகளுக்குஅன்னி பெசண்டுஅம்மையாரின்நினைவை மூட்டி அவரைக் காணவும், அவர் சொல் கேட்கவும், அவரோடு இணங்கி இருக்கவும், வாய்ப்பேப் பெறுவிடினும் அவர் குணங்கள் உரைத்தாவது இன்புறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பது நிச்சயம்.

—தினமணி.

நான் காண விரும்பும் கிராம சேவகர்

திரு. கா. திரவியம், ஐ.ஏ.எஸ்.,
(கிராம வளர்ச்சி நெறியாளர்)

இன்று கிராமங்களுக்குப் பற்பல புதியசக்திகள், பற்பல வாய்ப்புகள், வந்துகொண்டிருக்கின்றன. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிவரும் வேகத்திலே, நுங்கும் நுரையும் மிதந்துதான் வரும்; கலங்கலும், கண்ணீரும் கலந்துதான் வரும்; அதுபோல, நீங்கள் நல்ல நோக்கத்தோடு செயலாற்றும்போது, பல பேர் உங்களைத் தவறாகப் புரிந்துகொள்ளும் சூழ்நிலையும் ஏற்படலாம்.

குற்றங்களைக் களைவோம்!

"கிராம சேவக்குகள் வயலில் இறங்கி வேலை செய்யத் தயங்குகிறார்கள். புழுதி படக்கூடாது என்று கவலைப்படுகிறார்கள். சகதியில் இறங்கவே அஞ்சுகிறார்கள்" என்ற பொதுப்படையாகக் குற்றம் கூறப்படுகிறது. ஈராண்டுப் பயிற்சித் திட்டத்தை அறிந்தவர்கள் யாரும், இம்மாதிரி சந்தேகம் கொள்ள மாட்டார்கள். கிராம நலப் பயிற்சி நிலையத்தில் எல்லா வகைப்பட்ட உழவு வேலைகளையும், நீங்களே நேரில் செய்து பயிற்சி பெற்றிருக்கிறீர்கள். இதை நேரில் பார்க்க வாய்ப்புபெற்றவர்கள், இம்மாதிரி குறைகூற மாட்டார்கள்.

நாம் எல்லோரும் பாமரகுடும்பங்களில் இருந்து வந்தவர்கள். ஏழை பங்காளிகள் மட்டுமல்ல; ஏழைக் குடும்பங்களில் இருந்தே வந்தவர்கள். ஏழைக் குடும்பங்களில் இருந்து வந்தவர், ஏழைகளின் கஷ்டநஷ்டங்களை அறிந்தவர், ஏழையின் பங்காளராகச் சென்று பணியாற்ற மாட்டார் என்றால், இந்தச் சமுதாயத்தில், வேறு யார்தான் இந்தப்பணியைச் செய்வார்கள்?

கிறிஸ்தவர்களின் வேத நூலிலே, ஒரு வாசகமுண்டு. அதாவது, "உப்பே அதனுடைய சக்தியையும் பண்பையும் இழந்துவிட்டால், பின்பு என்னதான் செய்ய முடியும்?" என்று, அங்கலாய்த்து ஏக்கம் தெரிவித்துக் கூறுகின்ற அந்த வாசகத்தை எண்ணும் போதெல்லாம், "கிராம சேவக்குகள், தங்கள் சேவை ஆர்வத்தை இழந்து விட்டால், உப்பே தனது உயிர்ச்சத்தை இழந்துவிட்டது போலாகும்" என்று நான் நினைப்பதுண்டு.

புடம் போட்ட பயிற்சி

இரண்டு ஆண்டுகளாகப் பயிற்சி பெற்றுப்பக்குவமடைந்து பண்பட்டு, சோதனைகளையும் சிக்கல்களையும் சமாளித்துப் புண்பட்டு, ஏக்கத்தையும் ஏமாற்றத்தையும் தாங்கி

வேதனைப்பட்டு இருந்தபோதி லும் நீங்கள் லட்சிய வேகத்தின் உறுதிகுறையாமல் பணியாற்றும் போது, சிறந்த எதிர் காலத்தை நீங்கள் உருவாக்கமுடியும் என்று நிச்சயம் நம்புகிறேன். சிக்கல் கள் பல எழும்போது, உங்களது திறமையும், வேகமும், ஆர்வமும் குறைய இடம் கொடுத்து விடா தீர்கள். குறிப்பாக, மக்களிடம் கொள்ள வேண்டிய அன்பும் பண் பும் தேயவோ மங்கவோ இடம் கொடுத்துவிடாதீர்கள்! அவநம் பிக்கைக்கு இடம் கொடுத்து விடாதீர்கள்!

நீங்கள், 'கிராமத்தின் ஊழியர் கள். கிராமத்திற்கே பணியாளர் கள்' என்று பெருமையடைதல் வேண்டும். ஆனால், கிராமத்தின் தனிப்பட்ட மனிதருக்கோ, பணக்காரருக்கோ, செல்வாக்கு பெற்றவருக்கோ — அது ஜாதி செல்வாக்கானாலும் சரி, சம்பிர தாய செல்வாக்கானாலும் சரி, எந்த ஒரு தனி மனித ருக்கோ, வகுப்பாருக்கோ, சாரா ருக்கோ, பிரிவினருக்கோ, தொகுதியினருக்கோ நீங்கள் தனிப்பட்ட முறையில் பணியா ளர் அல்ல: ஊழியர் அல்ல. நீங் கள் சமுதாயத்திற்கே ஊழியர் கள். ஏழை மக்களுக்கு—வாயில் லாப் பூச்சிகளாகிய ஏழை மக்க ளுக்கு — நீங்கள் ஊழியர்கள். 'தடியெடுத்தவன் தண்டல்காரன்; வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற நிலையை கிராமத்தில் ஏற் படுத்த சிலர் நினைத்தால், அவர் களுக்கு நீங்கள் ஊழியர் அல்ல என்பதை உணருங்கள். நீங்கள் ஒரு பொதுவான ஊழியர் என்று அவர்கள் உணரும்படியாகவே நடந்து கொள்ளுங்கள். "பெரிய தனக்காரர் வீட்டுக்குத் தானே போகின்றார். திண்ணை வீட்டுக் காரரிடம் தானே போகின்றார், அங்கு போய், காபி சாப்பிட்டு விட்டு வருகிறார்" என்ற களங் கச் சொல்லுக்கு இடமில்லாமல் நடந்து கொள்ளுங்கள். ஏழை மக் கள் எங்கெல்லாம் இருக்கிறார் களோ, அங்கெல்லாம் இருங்கள். ஏழைகளுடன் வரப்பை வெட்டி, வயலில் இறங்கி வேலை செய்யுங் கள் ஏழைகளுடன் உறவாடுங் கள். அவர்கள் வாழ்விலே பங்கு கொள்ளுங்கள். அந்த முறை யில் நீங்கள், "தனிப்பட்டவர் களுக்கு, கட்டுப்பட்டவர்களல்ல; கிராமம் முழுவதற்கும் கட்டுப் பட்டவர்கள்" என்ற எண் ணத்தை உருவாக்கிக் கொள்ளுங் கள்.

ஒற்றுமையின் உருவகம்

"ஒன்றாயிருந்த கிராமத்தை, இரண்டாகச் செய்தவர்களில் ஒருவர், ஆசிரியர். மற்றவர், கிராம சேவக்" என்று கூறப்படும் குற்றச்சாட்டை, கேள்விப்பட்டிருக்கலாம். இம் மாதிரியான ஆதாரமற்ற கூற்றுக் கும், அவசியமில்லாத கண்டனத் துக்கும் சற்றும் இடம் கொடா மல் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்

"கிராம சேவக், சண்டையை மூட்ட வந்தார், சச்சரவு மூட்ட வந்தார்" என்று சொல்லம்

போது 100-க்கு 99 பங்கு, தம் கட்சியில் சேரவில்லை என்ற ஆத்திரத்திலேதான், குற்றம் சாட்ட முயலுகிறார்கள். பனை மரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டு பால் சாப்பிட்டால்கூட ஊரில் சந்தேகம் தான் படுவார்கள். எனவே கிராம சேவக்குகள் தான் மிகவும் எச்சரிக்கையுடன் விழிப்புணர்ச்சியோடு செயலாற்ற வேண்டும். கிராம சேவக், மக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற வேண்டுமே தவிர, “பிழைகளை மேலும் வளர்க்கிறார்” என்ற களங்கத்துக்கு, சொல்லுக்குக்கூட, இடம் தரக்கூடாது.

இரண்டாண்டுப் பயிற்சிபெற்ற நேரத்திலே நல்லவர்கள் நிழலிலே வாழ்ந்த காரணத்தினால், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்துவிட்டு வெளியில் சென்றவுடன், ‘எல்லாவற்றுக்குமே விடுமுறைகிடைத்துவிட்டது’ என்று நீங்கள் எண்ணிவிடாதீர்கள். சொந்த வாழ்விலே, எவ்வளவுக்கு தூய்மையாக வாழ்கிறோமோ, அவ்வளவுக்குத்தான், மக்களின் அபிமானத்தைப் பெற முடியும். நாம் ஊர் மக்கள் நடுவே வாழ்கின்றோம்; ஆதலால் நாம் மற்றவர்களைப் பற்றி கவனிக்காது, ஊர் மக்கள் நம்பும் அளவில் எந்தவித ஐயப்பாட்டிற்கும் இடம் ஏற்படாமல் நடந்துகொள்ள வேண்டும்.

தங்கமும் வைரமும்

இந்த நாட்டின் மக்கள், குறிப்பாக, கிராமவாசிகள், கள்ளங்கபடம் அற்றவர்கள். அவர்களின் உடல், வைரம் போன்றது. அவர்களின் உள்ளம், தங்கம் போன்றது. அவர்கள் படித்திருக்க மாட்டார்கள்; ஆனால் பண்புள்ளவர்கள். அவர்களுக்கு நாகரிக அறிவு இருக்காது; ஆனால் நல்ல உள்ளமிருக்கிறது. எனவே, அவர்களிடம் பணியாற்றுகின்றவர்கள், தூய்மையாகவும், கட்டுப்பாடாகவும், ஒழுக்கமாகவும் இருந்தால், உங்களுக்குக்காட்டும் ஆதரவை, வேறு எந்த சக்திக்கும் காட்ட மாட்டார்கள். “நம்ம தங்கமான கிராம சேவக் ஐயா சொல்கிறார், நாம் அப்படிச்செய்ய வேண்டும்” என்று, உங்களுக்கு ஆதரவளித்து, அன்பை அள்ளி வீசுவார்கள். நீங்கள் சொல்லும் திட்டங்களை, உற்சாகத்தோடு நிறைவேற்றுவார்கள். இந்த முறையிலே, நீங்கள் மிகத் தூய்மையாக வாழ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒழுக்கத்தைப் பற்றி, மேலும் கூறவேண்டிய அவசியமில்லை. ஆனால், ஒன்றுமட்டும் கூறவிரும்புகிறேன். “மேலே ஆண்டவன் உங்களை கவனிக்கிறார்” என்று சிலர் கூறுவார்கள். நான் அவ்வாறு கூறவில்லை. ஆனால், சுற்றிச் சூழ உள்ள மக்கள், உங்களைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இதை எடுத்துக் கூறும் கடமையும் எனக்குண்டு. நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும், உங்களுக்கு மட்டுமல்ல, நீங்கள் பணியாற்றும் அமைப்புக்கு மட்டுமல்ல, நீங்கள் சேர்ந்துள்ள இயக்கத்திற்கே, களங்கம் ஏற்படாத

படி நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"மற்றவர் பாபத்தை எண்ணுமல், என்னைப் பொறுத்தவரையில் தனியாகநின்று, தூயவனுக வாழ்வேன்; எனது வீட்டையும் மனத்தையும் சுத்தமாகவைத்துக் கொள்வேன்; கிராம வாசியைக் கவருவேன்; உபதேசத்தால் அல்ல, உதாரணத்தால்" என்று, உறுதி எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு கிராம சேவகரும் செயலாற்றினுல், பொருளாதாரத் துறையில் மட்டுமல்ல, ஆன்மீகத் துறையிலும், ஒரு மகத்தான மாறுதலைக் காண்போம்.

கதர்-கிராம உறவின் சின்னம்

நமது நாட்டின் அமைப்பிலே, சில அடிப்படை சக்திகளும், உண்மைகளும் உண்டு. அவற்றிலே ஒன்று, கதர். கதர் அரசியல் சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்டது. கதர் அணிவது, கிராமத்தார்களின் நண்பனுய், உறவினனுய் இருப்பதைப் பறை சாற்றுகிறது. "நானும் உங்களில் ஒருவன். உங்களுக்காகப் பணியாற்ற வந்தவன்" என்பதற்கு, ஒரு சின்னம், கதர். அந்த முறையிலே கதர் அணியாத கிராம சேவகர் என்பது ஒரு முரண்பாடான பேச்சே என்று நான் கூறுவேன். எளிமையின் இறவாச் சின்னம், கதர். ஏழைகளோடு ஒன்றிய தூய எளிய வாழ்விற்கு, அது ஓர் அறிகுறி; கிராம மக்களின் தொடர்புக்கு அத்தாட்சிச் சீட்டு அது. கதரை நீங்கள் அவமதிப்பீர்களானுல், கிராம மக்களையே நீங்கள் அவமதிப்பது போன்றதாகும்.

யார் நிபுணர்கள்

இன்று, நம்முடைய விவசாய முயற்சிகள் எதிர்பார்த்த பலன் அளிக்கவில்லை என்றுல், அதற்குக் காரணம் நாம் எல்லாம், நிபுணர்களாக நினைத்துக் கொண்டிருப்பதுதான். ஏட்டிலே, பாடத்திலே, அதிலும் மேல் நாட்டு நிபுணர்கள் எழுதிய புத்தகங்களில் படித்ததை வைத்துக் கொண்டு, மேல்தளத்தில் உட்கார்ந்துகொண்டு, 'கிராமத்தார்களுக்கு ஒன்றும் தெரியாது' என்று நினைத்து, செயல்பட்டதால்தான், நமது முயற்சிகள் பயனற்றுப் போயின.

இந்நாட்டு மக்களுக்கு என்ன தேவை என்பதைத் தெரிந்து, அவற்றைத் தீர்ப்பதற்கு, தக்க ஆலோசனை கூறவேண்டியது நிபுணர்களின் பொறுப்பே தவிர, நிபுணர் என்று கூறிக்கொண்டு, "உன் நோய்க்கு இதுதான் மருந்து" என்று கூறும் நிபுணர்கள், இந்நாட்டிற்குத் தேவையில்லை. நீங்கள், விவசாயிக்கு மேற்பட்டவர்கள் என்று எண்ணிவிடாதீர்கள். கிராம வாசிகளை அடக்கத்துடன் நாடுவீர்களானுல், அவர்களுடைய தேவை என்ன என்பதை, நீங்கள் அறிந்துகொள்ள முடியும். கிராம வாசிகளும், உங்கள் யோசனைக்கு மதிப்புத் தந்து, புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார்கள்.

அன்பு விளக்கு—அருள் ஒளி

ஏழைமக்களுக்கும், அரசாங்கத்துக்குமிடையே பாலமாக அமைய வேண்டியவர்கள் நீங்கள். அந்த இணைப்புச் சக்தியையும், மகத்தான பொறுப்பையும், மறந்துவிடாதீர்கள். நீங்கள் பணியாற்றும் சிறுசிறு வட்டாரங்களிலே, இருளை நீக்குகின்ற பல்வேறு அகல் விளக்குகளை ஏற்றுகின்ற பொறுப்பு, உங்களுடையது. உங்கள் மனத்திலே இருளை அகற்றி, அன்பு விளக்குகளை—அருள் விளக்குகளை, அகல் விளக்குகளை—நீங்கள் ஏற்றினால் இந்த நாட்டில் இருந்து, இருள் விலகும். இந்த நாட்டிலே உள்ள இருளைப் போக்கும் மகத்தான ஒரு முயற்சியிலே—புதியதொரு சமுதாயத்தைச் சமைக்கின்ற முயற்சியிலே—நீங்கள், எல்லாப் பங்கும் கொள்ளவேண்டும்.

பதவி உயர்வுக்குப் பாதை வகுத்துள்ளோம்

இதுவரை உபதேசங்கள் பற்றிப் பேசினேன். அத்துடன், உத்தியோக விஷயங்களையும் குறிப்பிட விரும்புகிறேன். கிராம சேவக்காக, பணியாற்ற வருபவர், முதல் நிலை கிராம சேவக்காக உயர்வு பெற்று, பின்னர், கல்வி விஸ்தரிப்பு அதிகாரியாகவோ, பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரியாகவோ, உயர்வு பெற்று, நாளடைவில் 'பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசராக' முடியும். அதன்பின், கலெக்டரின் நேர்முக உதவியாளராக **Personal Assistant to Collector (Panchayat Development)** வர முடியும். இப்படியாக, கிராம சேவக் முதல், கலெக்டரின் நேர்முக உதவியாளர் வரை ஒரு பாதை, வகுத்துக் கொடுத்திருக்கிறோம். உங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி, சற்றும் கவலைப்படாமல், பணியாற்றி வரலாம். உங்கள் எதிர்காலம், அரசாங்கத்தின் கையில் பத்திரமாக இருக்கிறது என்ற நிச்சயத்துடனும், பணியாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்பின் அரவணைப்பிலே, அனைவரும் ஒன்று சேர்ந்து வாழ்கின்ற ஓர் இன்ப சமுதாயம் உருவாக்குகின்ற மகத்தான பொறுப்பும் வாய்ப்பும், உங்களுக்குக் காத்திருக்கின்றன. இந்தச் சோதனையை ஏற்று, நீங்கள் வெற்றி காணவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். உங்கள் வெற்றிக்காக நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்—உங்கள் வெற்றியில் எனக்கும், சிறு பங்கு உள்ளது என்ற நம்பிக்கையிலே!

(கிராம நலம்)

வால் நட்சத்திரம்

எம். எஸ். கல்யாணசுந்தரம்

சமீபத்தில் வெளியான ஒரு பி. டி. ஐ. ஸ்தாபனச் செய்தி கூறுவதாவது:—

'இக்யிஆ—ஸேகி' என்ற பெயர் வால்நட்சத்திரத்தை அக்டோபர் நான்காம் தேதி முதல் கொடைக் கானல் வான பௌதிக ஆராய்ச்சி நிலயத்தில் கவனித்து வருகின்றனர். ஃபோட்டோ முறையிலும் நிறமாலைக் கருவி (ஸ்பெக்ட்ராஸ்கோப்) மூலமும் ஆராய்ச்சி நடைபெறுகிறது. நான்காம் தேதியன்று அதன் ஒளி அளவு அல்லது சோபை மூன்றும்தரத்தைச் சேர்ந்தது; நாளுக்கு நாள் அதன் ஒளி அதிகரித்து 21-ம் தேதி அது சூரியனை மிக நெருங்கி இருப்பது போல் தென்படும். அது வெறும் கண்ணுக்குத் தென்படுகிறது; அதன் வாலின் நீளம் நம் கண்ணில் ஒரு டிக்ரி கனத்தைத் தாங்கி நிற்கிறது. கிழக்கு அடிவானத்திற்குச் சற்று உயரத்தில் இந்தியக் கணக்குப்படி காலை 4 முதல் 5–30 மணி வரை அது தென்படுகிறது.

இந்த வாரம் சந்திரனைப் போலவே பிரகாசமாகத் தென்பட்டது. நாளுக்கு நாள் பிரகாசம் அதிகரித்து வந்தது. (21-ந் தேதி அது சூரியனுள் புகுந்து ஐக்கியமாகிவிட்டிருக்கலாம்.

இதைப் படித்த வாசகர்கள் இதைப்பற்றி மேலும் அறிய விரும்பக் கூடும். வால் நட்சத்திரங்களைப் பற்றிப் பொதுவாக அறியவும் ஆவல் கொள்ளலாம். பிரஸ்தாப வால் நட்சத்திரத்தை முதலில் கவனித்து உலகுக்கு அறிவித்தவர் இக்யிஆ-என்னும் ஜப்பானியரும் ஸேகி என்ற வேறு ஒருவரும்.

விஞ்ஞான முறையில் இவற்றை எண் தொடர் மூலமும் குறிப்பிடுவதுண்டு. கவனிக்கப் பட்ட ஆண்டின் எண் முதலில் தோன்றும்; அவ்வாண்டில் கவனிக்கப்பட்ட எத்தனையாவது வால் நட்சத்திரம் என்பதை இரண்டாவது எண் குறிப்பிடும்.

"ஒளி அளவு மூன்று" என்னும் போது வெற்றுக் கண்ணுக்குத் தெரியும். மிக மங்கலான விண் மீனின் சோபை அளவு 6 என்பதும், மிருக சீர்ஷக் கூட்டத்தில் பிரஜாபதி (ஆங்கிலத்தில் ஓரையன் அல்லது ஆரையன் அல்லது வேடுவன்) யின் இடதுபாத நட்சத்திரத்தின், (ஆங்கிலத்தில் ரைகெலின்) அளவு ஒன்று என்பதும் நினைவில் கொள்ளலாம்.

பிரஸ்தாப நட்சத்திரம் வெறும் கண்ணுக்குத் தெரிகிறது

என்று கூறப்பட்டாலும் தெரிவது ஒளிப்படலமாகிய அதன் தலை தான். நமக்கு அதிக சுவாரஸ்யமான அதன் வாலல்ல. ஆனால் ஒரு சிறு தொலை நோக்கியின் மூலம் அதன் வாலைப் பார்க்கலாம். 'அதன் நீளம் ஒரு டிக்ரி' என்பது ஆரம்ப ஜியோமெட்ரி அறிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். ஒரு டிக்ரி கோணத்தில் வெட்டும் இரண்டு நேர்க்கோடுகள் வரைந்தால் அவ்விரு புஜங்களுக்கிடையில் வால் அடங்கியிருக்கும். நம்மிடமிருந்து எவ்வளவு தொலைவில் அதிருக்கிறது என்று தெரிந்தால் அதன் நீளத்தை சுலபமாய்க் கணக்கிடலாம்; உடனடியாக அதன் நீளத்தை மைல் கணக்கில் கூறுவதற்கில்லை. கோண அளவில் தான் கூற முடியும். கையை நன்கு நீட்டி விரல்களை விரித்துப் பார்த்தால் கட்டை விரல் நுனிக்கும் சுண்டு விரல் நுனிக்கும் இடையே உள்ள தூரம் நம் கண்ணில் சுமார் 25 டிக்ரி தாங்குகிறது எனக் கொள்ளலாம்.

தூமகேது

வால்நட்சத்திரம் அல்லது தூமகேது நிர்ணயமான உருப்பெறாத ஆவி மண்டலம். சூரிய மண்டலத்தில் ஆயிரக்கணக்கானவை இருக்கின்றன; ஆனால் வெற்றுக் கண்ணுக்குத் தெரிபவை மிகச் சிலவே. ஆனால் சிறிதளவு வான இயல் அறிவும் பயிற்சியும் ஆவலும் அவகாசமும், எல்லையற்ற பொறுமையும் உள்ள எவனும் சிறிய தொரு தொலை நோக்கியை உபயோகித்துப் புது வால் நட்சத்திரங்களைக் காண அல்லது தோன்றி மறைந்தவற்றை மறுபடி காண முயற்சி யெடுக்கலாம். அமெரிக்காவில் அமெச்சூர் வான சாஸ்திரிகள் அநேகம் கண்டு களித்து வருகிறார்கள்.

தூமகேது என்றால் புகைக் கொடி என்றும் ஆங்கிலச் சொல்லாகிய 'காமெட்'டுக்கு தலைமயிர் என்றும் பொருள். ஆனால் வால் இல்லாத குரங்குகள் போல் வால் இல்லாத வால் நட்சத்திரங்கள் - கொடி பறக்காத புகைக் கொடி - மொட்டைத் தலைக் காமெட்டுகளும் உண்டு என்பது தெரிய வேண்டிய விஷயம்.

புகைக்கொடிப் பாதைகள்

தெரிய வேண்டிய இன்னொரு விஷயம் — எல்லா காமெட்டுகளும் நீள வட்டப் பாதையில் பவனி செல்வதில்லை. பரவளைய (Parabiola) பாதையிலும், அதி பரவளைய HYPERBOLA பாதைகளிலும் செல்லும். பின் சொன்ன பாதைகளைக் கொண்டவை எங்கிருந்தோ வந்து சூரியனை ஒரே ஒரு முறை அணுகிவிட்டு எங்கோ சென்று விடும். தடங்கல் ஏற்படும் வரை திறந்த வான வெளியில் சென்று கொண்டே இருக்கும். நீள வட்டப் பாதையில் செல்பவை கணக்கிடக்கூடிய காலத்திற் கொரு முறை திரும்பத் திரும்ப காட்சி அளிக்கும்.

நீள் வட்டப் பாதையில் செல்லுபவைகளுள் ஹாலி (Holley) தூமகேது பிரசித்தி பெற்றது. அதன் சுற்றுக் காலம் சுமார் 76 ஆண்டுகள். வழியில் எங்கேனும் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் இக்கால அட்டவணையில் மாறுதல் ஏற்படக் கூடும். ப்ருக் வால் நட்சத்திரம் இதற்கு நல்ல உதாரணம். 1866—க்கு முன் வரை அதன் சுற்றுக்காலம் 29 ஆண்டுகள்; அவ்வாண்டு அது வியாழன் கிரகத்தை நெருங்க நேர்ந்ததில் அதற்கு ஒரு புது வேகம் ஏற்பட்டு அதன் சுற்றுக்காலம் 7 வருஷமாகி விட்டது.

சுற்றும் கால அளவுகள்

நூறு ஆண்டுகளைக் காட்டிலும் குறைவான சுற்றுக் காலம் உள்ள 50 நட்சத்திரங்கள் நம் பட்டியலில் வந்திருக்கின்றன. 10,000 ஆண்டுகளுக்கும் அதிகம் தேவைப்படும். சில உதாரணங்களும் நாமறிவோம். 1864 11 என்ற இலக்கம் கொண்ட தூமகேதுவின் காலம் சுமார் மூப்பது லட்சம் ஆண்டு என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நம் சூரியனிலிருந்து அது விலகியிருக்கும் போது அதன் தொலைவு சுமார் நான்கு கோடி, கோடி கோடி மைல்.

குறைவான சுற்றுக்காலமுள்ளவற்றில் சுமார் நாற்பது நட்சத்திரங்களின் சுற்றுக்காலம் ஐந்திலிருந்து, எட்டு ஆண்டுவரை அவை பெரும்பாலும் மங்கலானவை. வாலற்றவை. பெரும்பாலானவை வழியில் தட்டுத் தடங்கல் இல்லை போலவே ஒரே நிதானமாகச் சுற்றுகின்றன. விதிக்கு விலக்கானவைகளில் மிக பிரசித்தம் பெற்றது என்கே (ENCKE) தூமகேது. அதன் காலம் 3·3 ஆண்டு. அதுவும் கணிசமான அளவு குறைந்து வருகிறது. குறைவதன் காரணம் புலனாகவில்லை. ஊக்கமுள்ள இளம் விஞ்ஞானி, இப்பிரச்னையைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தலாம். கேள்விக்குப் பூரணமான விடை கிடைக்கத் தவறினாலும், அம்முயற்சியில், பல ரசமான தகவல்கள் கிடைக்கக்கூடும்.

சுற்றுக்காலம் அதிகமாகக் கொண்ட நட்சத்திரங்கள் வேறு வழியில் வேறு கவர்ச்சி சக்திகளால் பாதிக்கப்படுவதில்லை; வயது முதிர்ந்து அடங்கி ஒடுங்கிப் போன மனிதர்களைப் போல! அவற்றின் ஒளி சோபையும் அதிகம்.

பயங்கரம்; ஆனால் எளிய பொருள்

பூதாகாரமாக இருந்தாலும், பயங்கர ஜோஸியங்களுக்குக் காரணமாக இருந்தாலும், வால் நட்சத்திரங்கள், பாவம், மிக அற்பத்துகள் களாலானவை. அத்துகள்களும் நெருங்கியிராமல், மிகப் பரவலாக இருப்பவை. பல்லாயிரம் மைல் பரவிய அப்பொருள் மூலம் அதற்கப்பால் உள்ள சாதாரண நட்சத்திரத்தைப் பார்க்க முடி

கிறது; இதிலிருந்து அப்பொருளின் அடர்த்தி எவ்வளவு குறைவு என்பது தெரியும். மூலஸ்தானமாகிய தலைவிஷயமே இப்படியென்றால், வாலைப் பற்றிச் சொல்வானேன்! நம் விஞ்ஞான சாலைகளில் உயர்தர "வாருவம் பம்பு" வைத்துக் காலி செய்த இடத்தில் இருக்கும் "காலித்தனத்தைக்" காட்டிலும் அதிக காலி, வாலின் பொருளடக்கம். இப்படிப்பட்ட எளிய வாலைப் பற்றி நாமும் பயப்படுகிறோம்! ஹாலி தூமகேது 1910 இல் தோன்றிய போது, அவன் விரிந்த தோகையின் அணைப்பில் நம் பூமி சிறிது காலம் தங்கும் என்று கணக்கிட்டு, "திகில் வியாபாரிகள்" அத்தோகையின் விஷக் காற்றால் பெருங்கேடு விளையும் என்று எச்சரிக்கை செய்தார்கள். அப்படியொன்றும் நடந்து விடவில்லை. நடக்கவும் முடியாது. அதற்கு எதிராக நாம் தினமும் அடர்த்தியான டீசல் புகையைப் பருகி உயிர் வாழ்ந்து வருகிறோம். எஞ்சிய நேரத்தை ஹைட்ரஜன் வெடி குண்டு, கொபால்ட் வெடி குண்டு தயாரிப்பதில் கழித்து வருகிறோம்!

"ஐயோ பாவம்"!

அத்தோகையை நினைத்தால், ஐயோ பாவம் என்று தான் சொல்ல வேண்டும்: அதைக் கண்டு திகில் அடைவோரைக் கண்டும் அவ்வாறே சொல்ல வேண்டும். சூரிய கிரணங்களின் அழுத்த சக்தி எனப்படும் மிக நுட்பமான ஆற்றலால் பின்புறம் தள்ளப்பட்டே தூமகேதுவின் மண்டையிலுள்ள வாயுக்கள் தோகையாகப் பின்புறம் செல்கின்றன. அத்தோகை, சூரியனுக்கு எதிர்ப்புறமாக எப்பொழுதும் இருப்பதை நாம் அறிவோம்.

ஆகவே, நீள அகலத்தை உத்தேசித்து வால் நட்சத்திரங்கள் மிகவும் கனக் குறைவான அமைப்புக்கள். சிருஷ்டியில், இதர அமைப்புகளுடன், ஒப்பிட்டால் நம் பூமியின் கனம் மிகவும் குறைவானது என்பது தெரிந்த விஷயம். நடுத்தரமான தூமகேதுவின் கனம் இதில் பத்தாயிரத்தில் ஒரு பங்கு எனக் கொள்ளலாம்.

அமைப்பு

அதன் உடலில் வியாபித்திருப்பது பெரும்பாலும் ஜலவாயுவும், ஸைனஜனம், வேறு சில தாதுக்களும், ஆவி ரூபத்தில் சில திடபதார்த்தங்கள் மிக மிக நுட்பமானதுகள் ரூபத்தில் உள்ளன. வால் நட்சத்திரங்களின் தலைகளின் சராசரி விட்டம், பத்தாயிரம் முதல் ஒரு லட்சம் மைல் வரை எனக் கொள்ளலாம். வெற்றுக் கண்ணுக்குத் தெரியும் வால்களின் நீளம் 50 லட்சம் முதல், 20 கோடி மைல் வரை கொள்ளலாம். அவை சாதாரணமாகக் கொம்பு போல், வளைந்திருக்கும். சில சமயங்களில் பல வால்களாகப் பிரிந்து இருக்கும்.

எல்லா வால் நட்சத்திரங்களும், ஒரே திக்கில் செல்வதில்லை. சூரியனைச் சுற்றி பூமி செல்லும் திசையில், சிலவும், எஞ்சியவை எதிர்ப்புறமாகவும் செல்கின்றன.

ஃபோடோ முறையில் பல வால் நட்சத்திரங்கள் சமீப காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. குருட்டாம்போக்கில் தேடித் துளாவுதல் ஒருபுறமிருக்க கணக்கிட்டு பழைய நட்சத்திரங்களை உத்தேசித்து குறிப்பான பிரதேசத்திலும் பார்ப்பதுண்டு. சென்ற முறை ஹாலி காமெட் கண்ணுக்குத் தெரிவதற்கு முன் ஒன்பது மாதமும் கண் பார்வைக்கு மறைந்த பிறகு சுமார் ஒரு வருஷமும், படம் பிடிக்கப்பட்டது கவனிக்கத்தக்கது.

"ஹாலி காமெட்"

ஹாலி காமெட் இக் கட்டுரையில் பல முறை கூறப்பட்டுள்ளது நாமறிந்தவற்றுள் அது மிக மிக கம்பீரமானது. பிரசித்தி பெற்றது. பல ஆயிரம் ஆண்டுகளாக ஜனங்கள் அதை கவனித்து எழுத்திலும், பட்த்திலும்-பயந்துக் கொண்டே பதிந்திருக்கிறார்கள். 1066-ல் நார்மண்டி அதிபதி வில்லியம் இங்கிலாந்தின் மீது படையெடுத்த போது இந்த நட்சத்திரம் பூதாகாரமாகத் தோன்றிற்று. ஆங்கில மன்னனாகிய ஹாரால்டின் ஆலோசகர்கள் ஓலமிட்டார்கள். வில்லியத்திற்கும் தீங்கு ஏற்படலாமே என்ற எண்ணம் அவர்களுக்குத் தோன்றவில்லை. நார்மண்டிக்காரர்கள் வெற்றியடைந்தார்கள்; இங்கிலாந்தின் சரித்திரமே மாறிற்று. அவ் வருடத்து வால்நட்சத்திரத்தை கண்ட பெண்கள் அதை திரைச் சேலைகளில் நூல் வேலையாகப் பதிந்திருக்கிறார்கள். பேயோ டாபெஸ்ட்ரி என்ற பெயர் கொண்ட திரையை இன்றும் காணலாம். 1682-இல் ஆங்கில ஆஸ்தானவான சாஸ்திரியான எட்மண்ட் ஹாலி அதை ஆராய்ந்து, அது சுமார் 76 ஆண்டுகளுக்கொரு முறை தோன்றுமென்று அறிவித்தார். இக்கட்டுரையைப் படிப்பவருள் பலர் இருபது ஆண்டுகளில் அதைக் காண்பார்கள். 1910-இல் அது தோன்றிய போது அதன் தோகை வானத்தில் பாதிக்குமேல் வியாபித்திருந்தது. கொடைக்கானல் ஆராய்ச்சிக் கூடத்தில் அது 40 நாட்கள் ஆராயப்பட்டது; அங்கு சேகரிக்கப்பட்ட படங்களும், தகவல்களும் உலகப் பிரசித்தி பெற்றன.

திகில் வியாபாரிகள்

இந்த விஞ்ஞான யுகத்தில் "திகில் வியாபாரிகள்" தம் தொண்டு புரிந்தனர். 1910-இல் ஏழாம் எட்வர்டு ராஜா இறந்ததும் அவர்களுக்கு ஒருவித மகிழ்ச்சி, நான் சொன்னது வீணல்ல என்று. ஆனால் அந்தச் சமயத்தில் உலகத்தில் டஜன் கணக்கில் அரசர்கள் இருந்தும், எட்வர்டு நோயுற்றவர், எழுபது

வயதானவர் என்பதும் நினைவிருக்க வேண்டும். ஜோசியம் பலிக்கும் போது நாம், ஜோசியர்களைப் பாராட்டுகிறோம், பலியாதபோது சும்மா இருந்துவிடுகிறோம்-இதுவே ஜோசியர்களுக்கு சாதகமாகிறது.

குறிப்பிடக்கூடிய இதர தூமகேதுகளாவன என்கே (ஆராய்ச்சி ஆண்டு 1818), டோனடி (1858 பீலா (1826), மூர்ஹவுஸ் (1908) ப்ரூக். இவற்றுள் பீலாகாமெட் 1845-க்குப் பிறகு வெடித்துப் போயிற்று. அதற்கேற்பட்ட பாதையில் இன்னும் அதை எதிர்பார்க்க வேண்டிய சமயத்தில் எரி நட்சத்திரங்களை ஏராளமாகப் பார்க்கிறோம்.

கொடைக்கானல் நிலையம்

தற்சமயம் தென்படும் நட்சத்திரத்தைப் பற்றி நன்கு ஆராய வேண்டும். அதன் பாதையில் சில பாகங்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் தெரிந்தால், முழுப் பாதையையும் பற்றி முடிவு கட்டலாம் — முக்கியமான இடங்களில் சில பகுதிகளைக் கேட்டு ராகம் அறிவது போல் கொடைக்கானல் நிலையம் வான பௌதிக ஆராய்ச்சிக்காக ஏற்பட்டது. கருவிகளும் பயிற்சியும் அதற்காக ஏற்பட்டது. இருந்த போதிலும் சாமர்த்தியமாக இந்த நட்சத்திரத்தை ஆராய்ந்து வருகிறார்கள். அமெரிக்காவில் ஹார்வர்ட் கல்லூரி நிலையம் வால் நட்சத்திரம், எரி நட்சத்திரம் ஆராயப் பல வசதிகள் கொண்டது.

கொடைக்கானல் நிலையமும் பூர்ண விருத்தியடைந்தால் இந்தியர் சந்தோஷப்படுவார்கள். இப்போது டைரெக்டராக இருக்கும் டாக்டர் எம். கே. வேணு பாப்புவைப் போல், பல வால்நட்சத்திரங்களுக்கு நம் இளைஞர்கள் தம் பெயரை இடுவார்கள். ஆனால் ஒரு ஆபத்து; பாகிஸ்தான் யூ என் ஓவுக்கு மனு செய்து பாரத நாடு ஏதோ சூழ்ச்சி செய்து தனக்கு அனுகூலமாக வால்நட்சத்திரத்தை அமைத்துக் கொண்டு விட்டது என்று குறை கூறலாம்!

சில நாட்களுக்குப் பிறகு நாம் இந்நட்சத்திரத்திடம் விடை பெற்றுக் கொள்வோம். அதிகாலையில் சில நாட்கள் எழுந்திருக்க வாய்ப்பு அளித்ததற்கு அதற்கு நன்றி. மேலும் நாலு பேர் கூடும்போது, திரும்பத் திரும்ப பாகிஸ்தான், அரிசித் தொல்லை, கிரோஸின் குறை, சீனத் தொல்லை, ஒலி பெருக்கித் துன்பம், சாக்கடை, கொசு என்றே பேசிக்கொண்டிராமல் புது விஷயதானம் செய்ததற்கும் நன்றி என் சம்பந்தப்பட்டவரை இன்னொரு மகிழ்ச்சி-பத்து வருஷம் கழித்து இன்னொரு வால் நட்சத்திரம் தோன்றும்போது இளம் உறவினர்களிடம் "1965-இல் நான் ஒரு கட்டுரையில்—" என்று சொல்லி அவர்களுடைய மதிப்பைச் சிறிதளவேனும் பெறலாமல்லவா?

— "தினமணி"

தலையை மூடிக்கொள்!

சீதளமான காற்று தலையில் படுவதால் மூளையில் ஏற்படும் படபடப்பே இதற்குக் காரணம். இந்நிலை தொடர்ந்து ஏற்பட்டால், மூளைக் கோளாறு, அசதி, நரம்புத் தளர்ச்சி இவை ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதே நிலை கால் நீட்டியிருக்கும் பக்கத்தில் குளிர் காற்று பட்டாலும் கால் விரைப்பு, பிடிப்பு முதலியவற்றுக்குக் காரணமாகும். அதனால் கால்கள் பக்கத்திலோ, தலைப் பக்கத்திலோ நேரிடையான காற்று அடிக்கும்படி படுப்பது உசிதமல்ல. அதனால் பழங்காலத்து மரக்கட்டில்கள் அனைத்திலும் தலைப்புறமும் கால்புறமும் அடைப்பு இருக்கும். படுக்கைத் தளத்திற்கு மேல் 10 அல்லது 12 அங்குலத்திற்குமேல் காற்று வீச வசதியிருக்கும். காற்று நேரிடையாக நம் மேல் வீசாது. நாகரிக கட்டில்களில் இத்தகைய வசதி இருக்காது.

இரவில் மட்டுமல்ல, நீங்கள் பகலிலும் கடும் வெய்யிலில் வெளியே செல்லும்போது தலைக்கும் கால்களுக்கும் நல்லபாதுகாப்பு அவசியமாகிறது. இன்றைய நாகரிகம் தலையில் முண்டாசு கட்டிக் கொள்வதையோ துணியைப் போர்த்திக் கொள்வதையோ நாகரிக குறை என மதிக்கிறது. குடை பிடித்து செல்வதைக்கூட பத்தாம் பசலிப் பழக்கம் என நினைப்பது உண்டு.

குளிர் காலத்தில் குளிரையும், வெயில் காலத்தில் தாபத்தையும் தாங்கி அதனால் உடலின் இயற்கை சூட்டில் ஏற்றத் தாழ்வு ஏற்படாமல் பாதுகாக்கும் பணி தோலைச் சார்ந்தது. தோலின் இந்த இயற்கைச் சக்தியைத் தகுந்தபடிபாதுகாப்பதால் பெருமளவு ஹிருதய வியாதியும் மூளைக் கோளாரும் ஏற்படாமல் தடுத்து விட முடியும். தோலின் இயற்கைச் சக்தியை பாதுகாக்க உதவிபுரிபவை வாரம் இருமுறை அல்லது ஒரு முறையாவது எண்ணெய் தேய்த்துக் கொள்வது, குளிரையோ, தாபத்தையோ அதியோகமோ: விஷமயோகமோ, இல்லாமல் அனுபவித்தல், ஆறு, குளம் முதலிய நல்ல ஜலாசயங்களில் ஸ்நானம் செய்து தோலிற்கு இயற்கை சக்தியை வளர்த்தல், தேகப் பயிற்சி முதலியவையாகும். குளிரையோ, வெயிலையோ பொருட்படுத்தாமல், 'அது என்னை என்ன செய்து விடு' மென்ற மெத்தனப் போக்குடன் வெளிச் செல்வது அத்தியோகமாகும். வெக்கையில் வெட்ட வெளியில் படுப்பது, நிலவு படும்படி படுப்பது, தரையில் படுப்பது முதலியவை விஷமயோகமாகும்.

—"ஆரோக்கியம்"

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.